முஹம்மது ஹனீபா அப்துர் ரஷீத்

சாந்தியின் பிறப்பிடம் இறை சந்நிதானம்

தொழுகை ஓர் அகப் பார்வை



சாந்தியின் பிறப்பிடம் இறை சந்நிதானம்

தொழுகை ஓர் அகப் பார்வை

முஹம்மது ஹனீபா அப்துர் ரஷீத்

READMORE
PUBLICATION

“

யா அல்லாஹ் இச்சிறு முயற்சியைப் பொருந்திக் கொள்வாயாக!
இதன் பேறுகளை எனது நல்வாழ்வில் தீராது கவலை
கொண்டிருந்த அன்புத் தாய் ராஹிலா உம்மா அவர்களுக்கும்,
நான் அறியாத எனது தந்தை முஹம்மத் ஹனீபா
அவர்களுக்கும் உனது மன்னிப்பாகவும் திருப்தியாகவும்
அருளாகவும் வழங்குவாயாக!

”

| நூல்: சாந்தியின் பிறப்பிடம் இறை சந்நிதானம் | ஆசிரியர்: அப்துர் ரஷீத்
| பக்கங்கள்: 92+xviii | முதாலாம் பதிப்பு: 2023 ஜூலை,
இரண்டாம் பதிப்பு: ஆகஸ்ட் 2023, மூன்றாம் பதிப்பு: செப்டெம்பர் 2023
| பதிப்புரிமை: ஆசிரியருக்கு | ச.த.நூ.இல: 978-624-5718-38-2
| விலை: 150.00 | பக்க வடிவமைப்பு, அட்டைப்படம்: எம். ஸினான்
| வெளியீடு: ரீட்மோ வெளியீட்டகம், கொழும்பு
| பதிப்பகம்: ஐ.பீ.ஸி. அச்சகம், கொழும்பு

பொருளடக்கம்

அத்தியாயம்: 4 - (51-88)
தொழுகையின்போது

1. *நிகரில்லா வல்லமை பொருந்திய, அன்பும் கருணையும் கொண்ட நாயனுக்கு முன்னால்...*
2. *அகிலத்தின் அரசனும் அவனது அடிமையும் உரையாடும் தருணம்*
3. *இறை உரையாடலில் அடியானின் பாகம் - அல்குர்ஆனின் தாய்*
4. *தொழுகையில் உயிர் பெற வேண்டிய மூன்று சொற்கள்*
5. *பணிவும் பயமும்தான் தொழுகை*
6. *தொழுகையில் கவனம், தெளிவு, பணிவு*
7. *இறைவனுக்கே மாத்திரம் உரிய பணிவு ரகூஉ, ஸுஜூத்*
8. *இறைவனுடன் பேசும் உடல் மொழி*
9. *தொழுகையால் உன்னதம் பெறும் ஐந்து அம்சங்கள்*
10. *தொழுகையின் நிறைவுரை*

அத்தியாயம்: 5 - (89-92)
தொழுகையின் பின்

1. *தொழுகையைப் பாதுகாத்தவர்கள்*
2. *அவர்கள் அடையும் தகுதி*
3. *கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாதது போன்ற நிலை*
4. *சந்திப்பு தாக்கமுறச் செய்யும் என்பது இயல்பு*

நிறைவாக...

முன்னுரை

الحمد لله الصلات والسلام على رسول الله وعلى آله وصحبه وسلم

தொழுகை அர்ஷின் நாயகன் அல்லாஹ்வுடன் மனிதனைத் தொடர்புபடுத்தும் அதி சிரேஷ்ட செயலாகும். அதன் பெறுமானம், அது ஏற்படுத்தும் உள்ளார்ந்த தாக்கம், அதன் விளைவுகள் பற்றி எழுதுவது பாரதூரமான ஒரு காரியம் என்பதை உணரும் போது ஒதுங்கிக் கொள்வோமா என்ற எண்ணமே திரும்பத் திரும்ப வந்து செல்கிறது. இருந்தாலும் மனிதர்களின் நிலையைப் பார்க்கும் போது கற்றுக் கொண்ட விடயங்களைக் கூறாமல் இருப்பது குற்றமாகிவிடுமோ என்ற பயம் மிகைப்பதால் அல்லாஹ்வின் உதவியைப் பெரிதும் சார்ந்து இதனை எழுதுகிறேன்.

உலகில் பதவி, பொருள், கௌரவம் போன்றவற்றில்உயர்ந்து விளங்கும் மனிதர்களுடன் தொடர்பு இருந்து, அவர்களை சந்திக்கும் வாய்ப்பும் அதிகம் இருந்தால் அவரின் ஊக்கம், வாழ்க்கை உத்தரவாதம் போன்றவற்றுடன் அவரைப் பற்றிய அடுத்தவர்களின் அபிப்பிராயம் எல்லாமே சிறந்து, உயர்ந்து காணப்படும் என்பது இயல்பு.

தொழுகை என்பது, உலகத்தின் இரட்சகன் எல்லாப் படைப்பினங்களையும் பராமரித்துப் பாதுகாக்கும் கருணை கொண்ட எஜமானை சந்திக்கும் வாய்ப்பாகும். அவனுடனான உறவைக் கொண்டாடுவதாகும். இதன் பெறுமானத்தை, அடைவை, உள்ளத்தின் பரவசத்தை எந்தக் கருவிகளாலும் அளவிட முடியாது. அத்தகைய மனநிலையை ஓரளவேனும் பராமரித்து, அது ஏற்படுத்த விழையும் மாற்றங்களை நோக்கி வழிப்படுத்தி வாழ்வில் வியத்தகு நடத்தையை வெளிக்கொண்டு வருவதற்கான முயற்சியே இந்த ஆக்கம். தொழுகையைப் பொறுத்தவரையில் அதன் கடமைப் பாடு, நடைமுறை சார்ந்த சட்டங்கள், இறை ஞாபகமும் அதன் தாக்கமும், அது உருவாக்கும் நடத்தை மாற்றங்கள்... என பல்வேறு

பரிமாணங்களில் அது பார்க்கப்பட வேண்டும். தொழுகை கடமை என்பதும் அதன் சட்டங்களையும் நியதிகளையும் சிறு வயதில் இருந்தே கற்றுக் கொள்ளும் பாரம்பரியமும் முஸ்லிம்கள் மத்தியில் இருந்து வருகிறது. அதுவும் முக்கியம் என்பதில் எவ்வித சந்தேக மும் இல்லை. இது பற்றிய சிந்தனை அவ்வப்போது பேசப்பட்டா லும் மிகவும் அந்நியமாகிப் போயுள்ள தொழுகையில் பணிவும் பயமும் அது வாழ்க்கையில் ஏற்படுத்தும் உன்னத மாற்றம் பற்றி யுமே இந்நூல் கூடுதல் கவனம் செலுத்துகின்றது.

மனிதனைப் பொறுத்தவரை குறித்த ஒரு விடயத்தை, தொடர்ந்து ஒரு குறித்த முறையில் செய்து வந்தால் அதற்கு அவன் இசைவாக் கம் அடைவான். அதாவது பழகிப்போன ஒன்றாக பலபோது அது தானாகவே இயங்கும் நிலைக்கு மாறிவிடும். தொழுகையும் இதற்கு விதிவிலக்கல்ல. அதனை திருத்தியமைத்து புதிய நிலைக்கு மாறுவது என்பது இலகுவான காரியமல்ல. தெளிந்த சிந்தனை, செய்யும் செயலில் முழுமையான ஆர்வம் என்பவற்றோடு எங்கு குறை விடுகின்றோம், எங்கு தவறு நிகழ்கின்றது என்பதையும் அறிந் திருத்தல் அவசியம். அதுபோல் விடாமுயற்சியோடு தொடர்ந் தேர்ச்சியாக ஈடுபட வேண்டும். அப்பொழுதுதான் மாற்றம் நோக்கி வளர்ச்சி காண முடியும். இந்த விடயங்களை அல்குர்ஆன், அல்ஹ தீஸ், சான்றோர் கருத்து, உளவியல் சார்ந்த எடுத்துக்காட்டுகளுடன் விளக்க இந்நூல் முயற்சிக்கிறது.

தொழுகையில் உயிரோட்டம் என்பது தொழும்போது பல்லைக் கடித்துக்கொண்டு அல்லாஹ்வை நினைவுகூர முயற்சிப்பதல்ல. அது எவ்வாறு என்றால் நீரினுள் பந்தை வைத்திருப்பது போலாகும். கை நழுவினால் வெளியில் வந்து விடும்.

தொழுகையில் உடலும் உள்ளமும் பங்கேற்கின்றன. உள்ளத் தைப் பொறுத்தவரை அது வாழ்க்கைத் தாக்கங்களால் பாதிப்புக் குள்ளாகும் இயல்பைக் கொண்டது. வாழ்க்கையில் அது எவ்வாறு செயற்படுகின்றதோ அவ்வாறே தொழுகையில் பிரதிபலிக்கும்.

எம்மால் தொழுகைக்காக வேறு உள்ளத்தைப் பிரயோகிக்க முடியாது. "மனிதனுக்கு இரண்டு உள்ளங்கள் கொடுக்கப்பட வில்லை" (அல்அஹ்ஸாப்- 4) என்று அல்லாஹ் கூறுகின்றான். எனவே, வாழ்க்கையில் உள்ளம் எவ்வாறு பராமரிக்கப்படுகிறது என்பதிலிருந்து தொழுகையில் உயிரோட்டம் பெறுவது பற்றி சிந்திக்க வேண்டும். தொழுகையில் கவனம், தெளிவு, பணிவு என்ற படிகள் பேணப்பட வேண்டும். இவை தொடர்பான விளக்கம், அதற்கே உரிய பயிற்சி என்பன பற்றி எல்லாம் சிந்திக்க வேண்டும். அப்பொழுதுதான் தொழுகையின் அடிப்படை விடயமான உரையாடல் நடைபெறும். உரையாடல்தான் நம்பிக்கையை அதிக ரிக்கச் செய்கிறது. அதுதான் வாழ்க்கையில் வியத்தகு மாற்றங் களுக்குக் காரணமாக அமைகிறது. இந்தத் தேவையை ஓரளவாவது நிறைவு செய்யும் வகையிலேயே இந்நூல் வடிவமைந்துள்ளது, இன்ஷா அல்லாஹ்.

திறன்களை விருத்தி செய்வதே வெற்றியினதும் மாற்றத்தினதும் அடிப்படை. இதில் ஒரு கவனயீர்ப்பு தேவை. அதாவது உடல் சார்ந்த, தகவல் சார்ந்த திறன்களை வளர்ப்பது போன்றதல்ல உள்ளம் சார்ந்த, மனநிலை சார்ந்த, சிந்தனை சார்ந்த திறன்களை விருத்தி செய்வது. இதன் வளர்ச்சிக்கு மறைந்திருக்கும் தடைகளோடு போராட வேண்டும். இதற்கான பிரயத்தனம் (முஜாஹதா) சற்றுக் கடினமானது என்பதை கவனத்திற் கொள்ள வேண்டும். ரஸூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:

"நிச்சயமாக மகத்தான கூலி மகத்தான சோதனையில்தான் உள்ளது." (அத்திர்மிதி)

இங்கு ஒவ்வொரு தலைப்பின் கீழும் அதன் அடைவுக்கு சில வழிகாட்டல்கள் இணைக்கப்பட்டுள்ளன. அவற்றை தொடர்ந்து ஒரு முறைப்படுத்தப்பட்ட வகையில் விடுபடாமல் செய்து வந்தால் புதியதொரு மனநிலை, சிந்தனை மாற்றங்களுக்கு எம்மை உட்படுத்திக் கொள்ளலாம். இவ்வாறு கையாள்வது விஞ்ஞானபூர்

வமான, உளவியல் ஆய்வில் உறுதி செய்யப்பட்டதாகும். நீங்களும் முயற்சி செய்து பாருங்கள்.

நூலாக்கத்தின் தூண்டுதலுக்கும்அதுபோல் முழு நூலிலும் தாக்கம் செலுத்திய மூவரை நான் நினைவுகூராமல் இருந்தால் அது பிழை செய்ததாக ஆகிவிடும். அதில் ஒருவர் உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர். அவர் இஸ்லாமிய கருத்துக்களை தகவலாக, உணர்வாக பார்ப்பதற்கு அப்பால் சிந்தனை ஊடாக பார்ப்பதன் தேவையையும் அமலை ஹயாத்தாக்குவதிலிருந்து அமலின் நோக்கத்திற்கு கவனம் குவிக்க வேண்டும் என்பதையும் என்னில் ஊன்றிப் பதித்தவர். இந்நூல் இக்கருத்தின் தாக்கம் எனக் கூறலாம். அடுத்த மகான், நாடறிந்த சிந்தனையாளர் அஷ்ஷெய்க் உஸ்தாத் M.A.M மன்ஸூர் (நளீமி) அவர்கள். அவருடைய "உயிரோட்டமான தொழுகை" தொடர்பான 30க்கும் மேற்பட்ட உரைகளைச் செவி மடுத்துள்ளேன். அதன் கருத்துக்கள் பெரும்பாலும் இதில் இழை யோடியுள்ளன. அவருக்கு எனது மனமார்ந்த நன்றி களைத் தெரி வித்துக் கொள்கிறேன். அதேபோன்று அஷ்ஷெய்க் அஹ்மத் பஸ்ஸாம் சாய் அவர்களின் "இதாரதுஸ் ஸலாஹ்" நூலும் இந்த ஆக்கத்தில் பெரிதும் தாக்கம் செலுத்தியுள்ளது. அந்த பெருந் தகையையும் நான் நினைவுகூருகின்றேன். இவர்களுக்கு வல்ல நாய னின் அருளும் நற்பாக்கியங்களும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

இவர்களோடு நூலின் போக்கையும் அதன் கருத்துக்களையும் நெறிப்படுத்திய சகோதரர் ஜீலானிகான், எழுத்துக்களை சரிபார்ப் பதில் உதவிய எனது அன்பு மனைவி நோனா ஹஸீனா, நூலை எழுதுவதற்கு வாய்ப்பையும் வசதியையும் ஏற்படுத்தித் தந்த M.R.M. முஸம்மில் அவர்களுக்கும் நன்றி கூறுவதோடு இறை அருளையும் அன்பையும் வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

இறையடியான்

முஹம்மது ஹனீபா அப்துர் ரஷீத்,
புத்தளம்.

அணிந்துரை

இந்த நூலில் சகோதரர் அப்துர் ரஷீத் தொழுகையை மையப் படுத்தியதானதொரு ஆன்மிகப் பயணத்தை செய்திருக்கிறார். வாழ்க்கையின் பத்து தடல் புடல்களுக்கு மத்தியில் பதினோராவது அம்சமாக நிறைவேற்றி விட்டு செல்கின்ற ஒரு கடமை அல்ல தொழுகை. மாறாக, சோதனைகள், மேடு பள்ளங்கள், காடு மலைகள் கடந்து செல்ல வேண்டிய வாழ்க்கைப் பயணத்தில் தளர்வுறாமல், சோர்வடையாமல் உற்சாகத்தோடும் திடசங்கற்பத்தோடும் முன்னேறிச் செல்வதற்கு அவசியமான மனோவலிமையையும் அமைதியையும் பெற்றுத் தந்து வாழ்க்கை முழுவதிலும் நேர் வகைத் தாக்கத்தை விளைவிக்கக்கூடிய வல்லமை கொண்டதாகவே தொழுகை இருக்கிறது. தொழுகையின் ஊடாக தொழுகையாளி ஏற்படுத்திக் கொள்ளும் அல்லாஹ்வுடனான உறவின் பிரதிபல னாகவே இந்த அமைதியை மனிதன் காண்கிறான். அறிவோடும் சிந்தனையோடும் செயல்படுகின்ற ஒவ்வொரு மனிதனுக்கும் சந்தடிகள் நிறைந்த வாழ்க்கைக்கு தொழுகை எத்துனை அவசிய மானது என்ற உண்மை புரியாதிருக்க மாட்டாது என்பதை அவர் அழகுற தெளிவுபடுத்துகிறார்.

சகோதரர் அப்துல் ரஷீத் நடமாடும் மத்ரஸாவில் இஸ்லாம் கற்றவர். நான் அறிந்த காலம் முதல் அவர் ஆர்வத்தோடு உணர்ந்து கற்கும் பண்பினராக இருந்திருக்கின்றார். மத்ரஸாவில் கற்றவற்றை மனதில் நிறுத்திக் கொள்கின்ற.... மீட்டுகின்ற.... செயல்படுத்தி பார்க்கின்ற பழக்கத்தையும் அவர் கொண்டிருக்கிறார். அது மட்டு மல்ல கற்றவற்றை அடிப்படையாக வைத்து மார்க்கம் பற்றிய தெளிவுகளை பிறருக்கு வழங்கும் ஆற்றலையும் அவர் வளர்த்துக் கொண்டார். தற்போது அந்த முயற்சியின் மற்றொரு கட்டமாக தனது அறிவு மற்றும் அனுபவங்களை நூலாக்கம் செய்வதிலும் அவர் ஈடுபடுகிறார். அதன் விளைவுதான் உங்கள் கரம் கிட்டியிருக் கும் தொழுகை பற்றிய அவரது நூலாகும். ஏற்கனவே குடும்ப

வாழ்க்கை பற்றி அவர் எழுதிய நூல் உங்கள் கைவசம் இருக்கலாம். சகோதரர் அப்துர் ரஷீதுக்கு அல்லாஹ் அருள் புரிவானாக! அவரது அறிவை மேலும் விருத்தி செய்வானாக!

இந்த நூலை வாசிக்கும் ஒருவர் சிலபோது தனது தொழுகை களை புதிதாகத் தொழ வேண்டும், நான் இதுவரை தொழவில் லையோ! என்றுகூட சிந்திக்கலாம். தொழுகையின் பெறுமதி, அதன் நோக்கங்கள், தொழுகைக்கு அவசியமான மனநிலைகள், தொழுகையில் செலுத்தப்பட வேண்டிய கவனங்கள், அசைவுகள் மற்றும் ஓதல்களின் தாத்பரியங்கள், தொழுகையில் அல்லாஹ்வுட னான ஈடுபாட்டை அதிகரிக்கும் சொற்பிரயோகங்கள், அவற்றின் கனதியான செறிவான உள்ளடக்கங்கள், உள்ளார்ந்த ஈடுபாடு கொண்ட தொழுகையால் தொழுகையாளிகளிடம் விருத்தி அடை கின்ற புனிதங்கள் என தொழுகை பற்றி தேடி அறிந்தவை, அனுப வித்தவை பலவற்றையும் நூலாக்கம் செய்து தனது நூலில் இற்றைப் படுத்தி இருக்கிறார். பல் பரிமாணங்கள் கொண்ட வணக்கமாக வடிவமைக்கப்பட்டிருக்கின்ற தொழுகையின் அழகை இந்த விபரிப்பு எடுத்துக்காட்டுவதாக இருக்கின்றது.

ஆன்மிகப் பரிமாணங்களுடன் லௌகிகப் பரிமாணங்களைக் கொண்டதாகவும் தொழுகை பிரகாசிப்பதை சுட்டிக்காட்ட இந்நூல் தவறவில்லை. எனினும், தொழுகையின் அடைவு அர்ஷுடை யவனின் பாதங்களில் வீழ்ந்து, அவனது மகத்துவத் திற்கு முன்னால் பணிந்து, அவனது பெரு வல்லமையின் வீச்சுக்கு அஞ்சி அடியான் தன்னை வெளிப்படுத்திக் கொள்வதுதான் என்பதை இந்நூல் ஆழமாக வலியுறுத்தியிருக்கின்றது. அது மட்டு மல்ல ஏகனை பணிந்து அவனது வல்லமைக்கு அஞ்சும் பக்குவம் தொழுகையாளியின் வாழ்க்கை முழுவதிலும் வியாபித்து அவனை அல்லாஹ்வின் உண்மை அடியானாக மாற்றுவதிலும் பெரும் பங்குவகிக்கிறது என்பதையும் நூல் புரிய வைக்கிறது.

“தொழுகைக்கு நேரமாகி விட்டது; தொழுது விடுவோம்!

என்பதோ தொழுதாகி விட்டது; ஓடி விடுவோம்! என்பதோ தொழுகையாளியிடம் எதிர்பார்க்கப்பட்டவை அல்ல. ஓடிக் கொண்டிருக்கும் வாழ்க்கையில் ஒட்டப்பட வேண்டியதாக தொழுகை இல்லை. வாழ்க்கையின் ஓட்டத்தை தீர்மானிப்பதா கவே தொழுகை இருக்க வேண்டும். தொழுகின்ற மனிதனின் வாழ்க்கை அசிங்கங்களில் இருந்து பாதுகாக்கப்படும்போதே அந்த நோக்கம் நிறைவேற்றுகின்றது என்பதையும் புரியவைக்க முயல் கிறது இந்நூல்.

ஏன் தொழுகைக்காக காத்திருக்க வேண்டும்? என்பதிலிருந்து துவங்கி தொழுத பின் மஸ்ஜிதை விட்டு வெளியேறும் மனிதன எங்கே போக வேண்டும்? என்பது வரை தொழுகையை வாழ்க்கை யோடு பிணைத்து வைக்கவும் முயன்றிருக்கிறது இந்நூல்.

தொழுகையை நிறைவுசெய்யும் வகையில் ஓதப்படும் அத்தஹிய் யாத் என்பது மேற்கூறப்பட்ட விதமாக தொழுகையை நிறைவேற் றுவதற்கு வழிகாட்டிய அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் நன்றி தெரிவித்து வாழ்த்துக் கூறும் வசனங்களாக இருக்கின்றன. அதேபோன்று உலகம் முழுவதிலும் தொழுகையில் ஈடுபடுகின்ற நன்மக்கள் அனைவருக்கும் வாழ்த்துக் கூறி பிரார்த்திப்பதாகவும் அத்தஹிய்யாத் அமைகிறது.

இந்நூலில் காணப்படுகின்ற ஒரு விஷேட அம்சத்தை சுட்டிக் காட்டுவது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

நூலின் ஒவ்வொரு தலைப்பும் முடிகின்ற வேளையில் அந்த தலைப்பின் கீழ்வருகின்ற விடயங்களை சிந்திப்பதற்கும் அவற்றி லிருந்து பயன் பெறுவதற்கும் நூலாசிரியர் ஒரு வழியைக் காட்டுகிறார். அதாவது குறிப்பிட்ட தலைப்பின் கீழ் வருகின்ற விடயங்களை செயல்படுத்துவதற்கான ஆலோசனைகளை முன் வைத்து அந்த ஆலோசனைகளை செயல்படுத்துமாறு வேண்டு கின்றார். இதன் மூலம் நூலின் உள்ளடக்கத்திலிருந்து அதிகபட்சம் பயன்பெறுவதற்கான வாய்ப்பு வாசகர்களுக்கு கிடைக்கிறது. இந்த

சந்தர்ப்பத்தை வாசகர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ளலாம். நூலின் உள்ளடக்கத்திலிருந்து அதிக பயன்களைப் பெறுவதற் காக.

தொழுகையின் உள்ளடக்கங்கள் தரும் பயன்கள், படிப்பினை கள், தாத்பரியங்கள் பலவற்றை இவ்வாறு உள்ளடக்கியதாக இந்நூல் விரிந்து செல்கிறது.

பொறுமையோடு கருத்தூன்றி கவனித்து வாசிப்பவர்கள் இன்னும் பல பயன்களை இந்நூலில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வல்ல அல்லாஹ் சகோதரர் அப்துர் ரஷீதின் முயற்சியை பொருந்திக்கொண்டு அவருக்கு உலக மறுமை நற்பேறுகளை வழங்கி வைப்பானாக!

உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர்

நுழைவாயில்

பொதுவாக வாழ்க்கை விவகாரங்களில் நடைமுறை- நோக்கம், வெளிரங்கம்- உள்ரங்கம், வசனங்களும் நாடப்படுவதும், தோற்றமும் உயிரும் இவ்வாறு இரண்டு நிலைகளில் பார்ப்பது இயல்பு. இந்தப் பார்வை மார்க்க விடயங்களுக்கும் பொருந்தும்.

தொழுகை விடயத்திலும் வெளிப்படையான சட்டம் (فقه الظاهر) - மறைவான சட்டம் (فقه الباطن), உடல் (جسد) -உயிர் (روح), நடைமுறை - நோக்கம் இவ்வாறு குர்ஆன், ஸுன்னா விளக்கியுள்ளதைக் காண முடியும். இந்த இரண்டு பார்வைகள் பற்றிய அறிவையும் விளக்கத்தையும் போதிய அளவு பெற்றவர்தான் தொழுகையில் அடையவிருக்கும் நற்பேறுகளை உலகிலும் மறுமையிலும் அடையப் பெறுவார்.

இன்று தொழுகையாளிகளை அவதானித்தால் பெரும்பாலானோர் நடைமுறையை அல்லது தோற்றத்தைச் சரி செய்வதிலேயே கவனம் செலுத்துகின்றனர். தொழுகையின் நோக்கம், அதில் நாடப்படுவது பற்றி பெரிதாகச் சிந்திப்பதாகத் தெரியவில்லை. இதன் பாரதூர விளைவையும் அவர்கள் உணராமல் இருக்கின்றனர். அல்லாஹுத் தஆலா அருளாளன். அடியார்கள் நல்ல காரியங்களை எண்ணினாலே அவன் கூலி வழங்குபவன். தொழுகையை நிறைவேற்றுபவர்களுக்கு கூலி கொடுக்காமல் இருப்பானா? நிச்சயமாகக் கொடுப்பான்.

இப்படியும் நாம் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம். அல்லாஹ் மனிதனுக்கு காரண காரிய அறிவையும் வஹி எனும் வழிகாட்டலையும் வழங்கியுள்ளான். இந்த அடிப்படையில் இருந்து மனிதன் தனது செயல்களை வெளிப்படுத்த வேண்டும் என்பது அவனது எதிர்பார்ப்பு. தொழுகையை அறிவுபூர்வமாகவும் வஹியின் வழிகாட்டலிலும் நிறைவேற்ற முயற்சிக்க வேண்டும்.

இன்று பரவலாகப் பேசப்படுவது என்னவெனில், தொழுபவர்களிடம் நல்ல நடத்தைகளைக் காண முடியாமல் இருக்கிறது, தொழுபவர்களும் தங்களது பிரார்த்தனைகள் ஏற்றுக் கொள்ளப்படு

வதைக் காணமுடியவில்லையே, வாழ்க்கையில் அமைதியும் நிம்மதியும் கானல்நீராகியுள்ளனவே என்றெல்லாம் அங்கலாய்க்கின்றனர். இந்த நிலைக்குக் காரணம் தொழுகையா, அதனை நிறைவேற்றுபவர்களா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மேற்கூறிய குறைபாடுகள் தொடர்வதால் பாரதூரமான பிழைகள் ஏற்படும் ஆபத்து உள்ளது என்பதை அறியாமலேயே தொடர்கிறார்கள். அல்லாஹ்வை அவமதிக்கின்ற, அவனது வெறுப்பை சம்பாதிக்கின்ற நிலைமைக்கு இது இட்டுச் செல்லும். தொழுகை என்பது அல்லாஹ்வைச் சந்திப்பது (கண்களால் பார்க்க முடியாது), அவனோடு உரையாடுவது எனலாம். அவனைச் சந்திப்பதற்கு வந்து நின்றால் எப்படி நிற்க வேண்டும் என்பது எங்களது சிந்தனைக்குரியது. அதாவது அல்லாஹ்வை மகத்துவப்படுத்த வேண்டும், பணிவோடு காணப்பட வேண்டும், தான் கூறுவதை உணர்வோடு இணைத்து உண்மையாக மொழிய வேண்டும். இது பலவீனம் அடைந்தால் அல்லது பூச்சிய நிலையில் இருந்தால், தொழுகையில் கவனமற்று இருப்பதாக, ஈடுபாடு இல்லாதிருப்பதாக, வல்ல நாயனுக்கு மரியாதை செய்யத் தவறியதாக அமைந்து விடும். இந்தத் தவறிலிருந்து ஒவ்வொருவரும் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

பின்வரும் ஹதீஸை சிந்தித்துப்பாருங்கள். 99 கொலை செய்த ஒருவர் ஒரு கற்றறியாத வணக்கவாளியிடம் (ஆபித்) சென்று “நான் இவ்வளவு பெரிய பாவம் செய்து விட்டேன். எனக்கு பாவமீட்சி இருக்கிறதா?” எனப் பயத்தோடு கேட்டார். அந்த ஆபித் “இவ்வளவு பெரிய பாவத்தைச் செய்த உனக்கு எப்படி மன்னிப்புக் கிடைக்கும்?” என வெறுப்போடு பேசினார். அந்த கொலையாளி அவனுக்கு ஏற்பட்ட கோபத்தினால் அந்த ஆபிதையும் கொலை செய்து விட்டார். தனக்கு இருந்த பயத்தின் காரணமாக இன்னுமொரு கற்றறிந்தவரை (ஆலிம்) சந்தித்தார். அவரிடம் தனது செயல் பற்றி கூறினார். அவர் “உனக்கு நிச்சயமாக மீட்சி இருக்கிறது.நீ இருக்கும் சூழலை விட்டு நல்ல ஊரான இன்ன இடத்திற்குச் செல்” என்றார். அவரும் அதனை செவியேற்று

அங்கே பயணமானார்... அவரின் இறுதி முடிவு சுவனமாக அமைந்தது. (புஹாரி)

அறிவில்லாமல் அமல் செய்யும்போது எப்படி அதல பாதாளத்தில் விழவேண்டிய நிலை ஏற்படும் என்பதை இந்தச் செய்தி உணர்த்து கிறது.

தொழுகையில் இந்த ஆபித் நிலை இருக்குமானால் அது பார தூரமான விளைவுகளை ஏற்படுத்திவிடும் என்பதை அல்லாஹ் திரும் பத் திரும்ப வலியுறுத்தியிருப்பதை அல்குர்ஆனில் பார்க்க முடியும்.

இன்னும், (கவனமற்ற) தொழுகையாளிகளுக்குக் கேடுதான். அவர்கள் எத்தகையோர் என்றால் தம் தொழுகையில் பராமுகமாக (வும் அசிரத்தையாக)வும் இருப்போர். அவர்கள் பிறருக்குக் காண்பிக்(கவே தான் தொழு)கிறார்கள். (அல்மாஊன் 107: 4-6)

நிச்சயமாக இந்நயவஞ்சகர்கள் அல்லாஹ்வை வஞ்சிக்க நினைக் கின்றனர். ஆனால் அவன் அவர்களை வஞ்சித்து விடுவான். தொழு கைக்கு அவர்கள் தயாராகும் பொழுது சோம்பலுடையோராகவே நிற்கிறார்கள் - மனிதர்களுக்குத் (தங்களையும் தொழுகையாளியாக்கி) காண்பிப்பதற்காக (நிற்கிறார்கள்). இன்னும், மிகச் சொற்ப அளவேயன்றி அவர்கள் அல்லாஹ்வை நினைவுகூர்வதில்லை. (அந்நிஸா 4: 142)

ஆனால், இவர்களுக்குப் பின் சந்ததியினர் இவர்களுடைய இடத் திற்கு வந்தார்கள். அவர்கள் தொழுகையை வீணாக்கினார்கள். இச்சைகளைப் பின்பற்றினார்கள். அவர்கள் கேட்டைச் சந்திப்பார் கள். (மர்யம் 19: 59)

ஒருவர் தொழுகையில் உள்ளுணர்வுகளை சரிசெய்யா விட்டால் இத்தனை பெரிய ஆபத்தை சந்திப்பார் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். தொழுகை உடலோடு, வார்த்தையோடு மாத்திரம் தொடர்பானது அல்ல. மனிதன் படைப்பாளனிடமிருந்து சிறப்புத் தகுதியாக ஆன்மா என்ற அதிவிஷேட தகுதியைப் பெற்றுள்ளான். அதனை அதற்கே உரிய முறையில் பராமரித்துப் பாதுகாக்க வேண்டும்.

இந்த மாபெரும் பொறுப்பும் அவனுக்கு இருக்கின்றது. ஆன்மா சீர்பெற்றால் அவனது சிந்தனை, அவயவங்கள், நடத்தை அனைத்தும் சீர்பெற்று விடும். அது சீர்கெட்டால் எல்லாம் கெட்டுப்போகும்.

அல்லாஹ் கூறுகின்றான். "ஆத்மாவின் மீதும், அதை ஒழுங் குபடுத்தியவன் மீதும் சத்தியமாக- அப்பால், அவன் (அல்லாஹ்) அதற்கு அதன் தீமையையும் அதன் நன்மையையும் உணர்த்தினான். அதை (ஆத்மாவை)ப் பரிசுத்தமாக்கியவர் திடமாக வெற்றியடைந்தார்." (அஷ்ஷம்ஸ் 91: 7-9)

ஆன்மாவின் தூய்மையைப் பாதுகாத்துப் பராமரிப்பதற்கு மார்க் கம் பல்வேறு இறைவணக்கங்களை அறிமுப்படுத்தியுள்ளது. அதில் உன்னதமான ஒழுங்குகளைக் கொண்டதுதான் தொழுகை. நடத்தை யில் மாற்றம் ஏற்படுவதின் தர்க்க ரீதியான நியதி சிந்தனையில் மாற் றம் உருவாக வேண்டும். மனிதனின் உள்ளம் நேரிய சிந்தனையைப் பெற வேண்டும். அப்போதுதான் அவனது நடத்தை சீராகும்.

மனிதனின் இதயத்தில் மூளையின் செயற்பாடு போன்று சிந்திக் கும் பண்பு காணப்படுவதாக நவீன விஞ்ஞானம் இன்று கண்டறிந்துள்ளது. (அள்றுஆமர்)

மனித உள்ளம் சிந்திக்கிறது; அதனை நேரிய சிந்தனைக்கு வழிவகுப்பது மனிதனின் பொறுப்பு என்பதை அல்குர்ஆன் திரும்பத் திரும்ப வலியுறுத்துகிறது.

அல்லாஹ் கூறுகிறான்.

"...அவர்களுக்கு இருதயங்கள் இருக்கின்றன - ஆனால் அவற்றைக் கொண்டு அவர்கள் (சிந்தனை செய்து) நல்லுணர்வு பெற மாட்டார்கள்..." (அல்அஃராப் 7: 179)

"அவர்கள் பூமியில் பிரயாணம் செய்து (இவற்றைப்) பார்க்கவில் லையா? (அவ்வாறு பார்த்திருந்தால்) அவர்களுக்கு விளங்கிக் கொள்ளக்கூடிய உள்ளங்களும் (நல்லவற்றைச்) செவியேற்கும் காது களும் உண்டாகியிருக்கும். நிச்சயமாக (புறக்) கண்கள் குருடாக

வில்லை. எனினும், நெஞ்சுக்குள் இருக்கும் இதயங்கள் (அகக்கண் கள்) தாம் குருடாகின்றன." (அல்ஹஜ் 22: 46)

தொழுகை நடத்தையில் மாற்றம் ஏற்படுத்தும் என்று கூறுவதன் விளக்கம், அது மனிதனின் உள்ளத்தை அல்லாஹ்வை நோக்கி சிந்திக் கத் தூண்டுகின்றது. அதனால் படைப்பாளன் பற்றிய பதிவுகளைப் பசுமையாக்கிக் கொள்கிறது. வாழ்வில் எந்நிலையிலும் அல்லாஹ்வை அவனது மகத்துவத்தோடு அன்போடு, பயத்தோடு நினைவுகூருபவனாக அவன் மாறுகிறான். அது அல்லாஹ்வுக்குக் கட்டுப்படத் தூண்டுகிறது. இது தொழுபவர்களின் ஆச்சரியமான மாற்றங்களுக்குக் காரணமாக அமைகிறது.

இதற்கெல்லாம் அடிப்படை தொழுகையின் பெறுமானம், அதன் நோக்கம் பற்றிய விளக்கமும் அதில் வெளிப்படுத்தும் ஒவ்வொரு வார்த்தையிலும் செயலிலும் சிந்தனை தழுவிய பார்வையும் எனக் கூறினால் அதில் இரண்டு கருத்து இருக்க மாட்டாது.

இத்தகைய விளக்கத்தை, சிந்தனையை நோக்கி வழிநடத்துவதுதான் தொழுகை பற்றிய அகப் பார்வை எனக் கருதப்படுகிறது. அதற்கான சிறிய விழிப்பு, தூண்டுதல், வழிப்படுத்தல்தான் இந்த நூல்.

அத்தியாயம்: 01

மனிதனும் அவனது பின்னணியும்

1. மனிதனின் பிரமிக்கத்தக்க அந்தஸ்தும் அவன் சுமந்த பொறுப்பும்

இந்த பிரமாண்டமும் நுணுக்கமும் ஆச்சரியமும் நிறைந்த பிரபஞ்ச ஏற்பாடு மனிதனுக்காகத்தான் சிருஷ்டிக்கப்பட்டுள்ளது. அதாவது இந்த உலகம் எவ்வளவு பெறுமானத்தைக் கொண்டுள்ளதோ அதனைவிட மனிதன் இறைவனின் பார்வையில் பெறுமதி மிக்கவனாகக் கருதப்படுகிறான். அல்குர்ஆன் கூறுகிறது:

"அ(வ்விறை)வன் எத்தகையவன் என்றால் அவனே உலகத்திலுள்ள அனைத்தையும் உங்களுக்காகப் படைத்தான். பின் அவன் வானத்தின் பக்கம் முற்பட்டான். அவற்றை ஏழு வானங்களாக ஒழுங்காக்கினான். அன்றியும் அவனே ஒவ்வொரு பொருளையும் நன்கறிபவனாக இருக்கிறான்." (அல்பகரா: 29)

"நிச்சயமாக, நாம் ஆதமுடைய சந்ததியைக் கண்ணியப்படுத்தினோம். இன்னும், கடலிலும் கரையிலும் அவர்களைச் சுமந்து, அவர்களுக்காக நல்ல உணவு(ம் மற்றும்) பொருட்களையும் அளித்து, நாம் படைத்துள்ள (படைப்புகள்) பலவற்றையும் விட அவர்களை (தகுதியால்) மேன்மைப்படுத்தினோம்." (அல்இஸ்ரா: 70)

“அவனே வானங்களிலுள்ளவை, பூமியிலுள்ளவை அனைத்தை யும் தன் அருளால் உங்களுக்கு வசப்படுத்திக் கொடுத்திருக்கிறான். அதில் சிந்திக்கும் சமூகத்தாருக்கு நிச்சயமாகப் பல அத்தாட்சிகள் உள்ளன.” (அல்ஜாஸியா 13)

இவ்வாறு மனிதன் தனிப் பெரும் அந்தஸ்தும் மரியாதையும் பெற்றவனாக காணப்படுகின்றான். அதேபோன்று எந்த படைப் பினத்திற்கும் வழங்கப்படாத பகுத்தறிவு ஆற்றலும் இறைவன் தன்னிலிருந்து வழங்கியிருக்கும் ஆன்மாவையும் (ரூஹ்) பெற்றுள் ளான். இதனால் படைப்பினங்கள் அனைத்தையும் மிகைத்து விடும் வல்லமை கொண்டவனாக காணப்படுகின்றான்.

மனிதன் உலகில் இவ்வாறு கண்ணியம் பெற்றிருக்கும் அதேவேளை, அந்த சிறப்புக்கு ஏற்ற வகையில் வகை கூற வேண்டிய வனாகவும் இருக்கின்றான். அதில் உண்மையாளனாக வாழ்ந்து காட்டினால் முடிவில்லாத காலம் மரியாதைக்குரியவனாக, கற்ப னைக்கு எட்டாத சுகண்டியான வாழ்க்கை வாழும் வாய்ப்பைப் பெற்றவனாக ஆகிவிடுவான். அவன் சுமந்து கொண்ட பொறுப்பு என்னவென்றால், அவனைப் படைத்துப் பரிபாலிக்கும் எஜமானின் பிரதிநிதியாக உலகத்தில் செயற்பட வேண்டும். அதாவது தனது எஜமானனின் விருப்பத்தை விளங்கி, அதனை தனது விருப்பமாக ஆக்கி, அவனுடைய வழிகாட்டலின் அடிப்படையில் தனது வாழ்க்கையை அமைத்து, சக மனிதர்களும் அடுத்த ஜீவராசிகளும் பாதுகாப்பாகவும் சுபிட்சமாகவும் வாழ வழிகோல வேண்டும்.

சரியானதையும் பிழையானதையும் பிரித்தறியும் சிறப்பாற்றலை மதிக்கும் வகையில் பிரதிநிதித்துவ பொறுப்பில் அவனுக்குத் தேர்வு சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. அவன் விரும்பினால் இறை வனை ஏற்று அவனுக்கு நன்றி செலுத்தி வாழ முடியும் அல்லது தன் இச்சைப்படிவாழ முடியும்.

இறைவன் கூறுகின்றான். *“நாம் அவனுக்கு நேர்வழியைக் காட்டி னோம். ஒன்றில் அவன் நன்றி செலுத்தலாம் அல்லாது நிராகரிப்பா ளனாகலாம்.” (அத்தஹ்ர்: 3)*

இறைவனுக்கு நன்றி செலுத்தி, அறிவுடைமையான வாழ்க்கையை தேர்வு செய்தால், இறைவனை விளங்கி அவனை விசுவாசித்து அவன் வழங்கிய பிரதிநிதித்துவப் பதவியை மதித்து, அதனைத் தூய்மை யாக நிறைவேற்ற முன்வர வேண்டும். அதாவது இறை விருப்பங் களை அன்போடும் பணிவோடும் பயத்தோடும் தனது வாழ்வில் எடுத்து நடக்க வேண்டும். இதற்குத்தான் இறைநம்பிக்கை எனக் கூறப்படுகிறது. இது மனிதனின் பிரதிநிதித்துவ வாழ்வின் அடிப் படையாகும்.

(நபியே) இன்னும், உம் இறைவன் வானவர்களை நோக்கி "நிச்சயமாக நான் பூமியில் ஒரு பிரதிநிதியை அமைக்கப் போகி றேன்" என்று கூறியபோது, அவர்கள்" (இறைவா!) நீ அதில் குழப் பத்தை உண்டாக்கி, இரத்தம் சிந்துவோரையா அமைக்கப் போகி றாய்? இன்னும் நாங்களோ உன் புகழ் ஓதியவர்களாக உன்னைத் துதித்து, உன் பரிசுத்ததைப் போற்றியவர்களாக இருக்கின்றோம்" என்று கூறினார்கள். அ(தற்கு இறை)வன் "நீங்கள் அறியாதவற்றை யெல்லாம் நிச்சயமாக நான் அறிவேன்" எனக் கூறினான். (அல் பகரா 2:30)

நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வை அஞ்ச வேண் டிய முறைப்படி அஞ்சுங்கள். மேலும், (அல்லாஹ்வுக்கு முற்றிலும் வழிப்பட்ட) முஸ்லிம்களாக அன்றி நீங்கள் மரணிக்காதீர்கள். (ஆலு இம்ரான் 3:102)

உலகில் பிறந்த ஒரு மனிதன் அல்லாஹ்வின் பிரதிநிதியாக அல்லது அவனுக்கு முற்றிலும் கட்டுப்பட்ட முஸ்லிமாக வாழ வேண்டும். இதனை நிறைவேற்றுவதற்கு படைப்பாளனை சரியாக விளங்கி அவனை நம்பிக்கை கொண்டு, வாழ்வில் அவனது செல் வாக்கை உணர்ந்து, பணிவோடும் பயத்தோடும் அன்போடும் செயலாற்ற வேண்டும். இதுவே பிரதிநிதி, முஸ்லிம் என்ற வாழ்க் கைக்குக் கட்டுச்சாதமாகும்.

"நிச்சயமாக இறைவனை விசுவாசித்தவர்கள் யார் என்றால்

அவர்களுக்கு முன் அல்லாஹ்வின் பெயர் கூறப்பட்டால் அவர் களின் உள்ளங்கள் நடுங்கும்." (அல்அன்பால் 8:2)

"நிச்சயமாக அல்லாஹ்தான் எங்களது இரட்சகன் எனக் கூறுவார்கள். பின்பு அதில் நிலைத்திருப்பார்கள் (வாழ்வில் எடுத்து நடப்பவர்கள்)..." (புஸ்ஸிலத்: 30)

"நிச்சயமாக இறைவனை நம்பிக்கை கொண்டவர்கள் வெற்றி பெற்று விட்டார்கள்." (அல்முஃமினூன்: 1)

இறைவனை நம்பிக்கை கொண்டவர்கள் வெற்றி பெறுவதுதான் அடிப்படை. ஏனெனில், அவர்கள் (தக்வா) எனும் இறை அவதா னத்தை உணர்ந்து வாழ்வார்கள். அது அவர்களின் நடத்தையில் செல்வாக்குச் செலுத்தும். இதனால் அவர்களின் வாழ்க்கை இறை விருப்பத்தைப் பிரதிபலிக்கக் கூடியதாக இருக்கும். சுய ஊக்கம் கொண்டவர்களாக, வினைத்திறன் மிக்கவர்களாக, முன்னுரி மையை முற்படுத்துபவர்களாக, சேவையில் ஆர்வம் கொண்டவர்க ளாக காணப்படுவார்கள். இது வெற்றிக்கும் வளர்ச்சிக்கும் வழிகோலும். அதேவேளை அவர்கள் வாழ்வில் எல்லா நிலைகளி லும் அல்லாஹ்வை சார்ந்திருப்பார்கள். தங்கள் மீது விதிக்கப்படும் அல்லாஹ்வின் தீர்ப்பை சிறந்ததாகவே காண்பார்கள். அதாவது நலவுக்கு நன்றி செலுத்துபவர்களாகவும் துன்பத்தைப் பொறுத்துக் கொள்பவர்களாகவும் காணப்படுவார்கள். இத்தகையவர்கள் நேர் வழியில் நிலைத்திருப்பவர்கள். இறைவனின் மன்னிப்புக்கும் திருப்திக்குமுரியவர்களாக இருப்பார்கள். இதுவே வாழ்வின் வெற்றி என்கிறோம். இவர்கள் மறுமையிலும் வெற்றியாளர்களாக மாறி விடுகிறார்கள்.

"(பொறுமை உடையோராகிய) அவர்களுக்குத் துன்பம் ஏற்ப டும் போது, "நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள். நிச்சய மாக நாம் அவனிடமே திரும்பிச் செல்வோம்" என்று கூறுவார்கள். இத்தகையோர் மீதுதான் அவர்களுடைய இறைவனின் நல்லா சியும் நற்கிருபையும் உண்டாகின்றன. இன்னும் இவர்கள் தாம் நேர்வழியை அடைந்தவர்கள்." (அல்பகரா: 156, 157)

ஒரு சிந்தனை, அது சார்ந்த நிலைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளும் பொழுது இருந்த அதே நிலையிலேயே தொடர்ந்தும் அதன் உறுதியும் மனநிலையும் எப்பொழுதும் இருக்கும் என்பதற்கில்லை. காலத்தால், வாழ்க்கை அழுத்தங்களால் வெகுவாகப் பாதிக்கப் படும். காலப்போக்கில் அது தேய்ந்து அழிந்து போகவும் கூடும். அது உயிரோட்டமாகவும் நடத்தையில் செல்வாக்குச் செலுத்தக் கூடியதாகவும் இருக்க வேண்டுமானால், அது எதிர்கொள்ளும் தாக்கத்திற்கு நிகரான பரிகாரத்துடன் புதுப்பிக்கப்பட வேண்டும். அது சார்ந்த தொடர்பு பராமரிக்கப்பட வேண்டும். அப்பொழுது தான் அதன் அடைவுகளை, அது ஏற்படுத்தும் நடத்தை மாற்றங் களை வாழ்க்கையில் காண முடியும். இந்த நியதி இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாட்டுக்கும் பொருந்தும்.

அல்குர்ஆன் கூறுகிறது. “ஈமான் கொண்டவர்களே! (நீங்கள்) ஈமான் கொள்ளுங்கள். அல்லாஹ்வையும் அவனது தூதரையும் அவனது தூதருக்கு இறக்கி வைத்த வேதத்தையும்...”
(அன்னிஸா 3: 136)

இதனாலோ என்னவோ தீர்க்கதரிசனமாக இறை தூதர் (ஸல்) அவர்களின் ஒவ்வோர் உபதேசத்தின்போதும், இறை எண்ணம் (தக்வா) பற்றி நினைவுபடுத்தாமல் ஆரம்பம் செய்ய மாட்டார்கள். அதுபோல் நூதன செயல்கள் பற்றி எச்சரிக்காமல் இருக்க மாட்டார் கள். இந்த நடைமுறை மறுமை வரை பேணப்படும் சுன்னாவா கவும் ஆக்கப்பட்டுள்ளது.

ஒரு முஸ்லிமைப் பொறுத்தவரையிலும் நம்பிக்கையின் முக்கி யத்துவம் அதனை உயிரோட்டமாக பராமரிப்பதன் அவசியம் என்பது தொடர்பாக ஆழமான விளக்கத்துடன் இருப்பது கட்டா யமானதாகும். அப்போதுதான் அவன் சுமந்துள்ள வாழ்வின் நோக்கமான பிரதிநிதித்துவ பணியை கச்சிதமாக நிறைவேற்ற முடியும். இல்லாது போனால் ஈருலகிலும் இழிநிலையைத்தான் சந்திப்பான். இது அவனது படைப்பின் நோக்கத்தையே தலைகீ ழாக மாற்றிவிடும்.

தங்களை தகைமைப்படுத்திக் கொள்வதற்கான ஆலோசனை: 1

1. **உலகில் தான் பெற்றுள்ள அந்தஸ்தை அறிந்து கொள்ளல்.**
2. **உலக சம்பத்துகளை வைத்து பெருமைப்படுவதையும் இல்லாத போது தாழ்த்திக் கொள்வதையும் மாற்றிக் கொள்ளல்.**
3. **உலகில் தன்மீது சுமத்தப்பட்ட பொறுப்பை சரியாக விளங்கிக் கொள்ளல்.**
4. **எஜமானனைப் புரிதலும் அவனுக்குப் பணிந்து நடப்பதும் காலத்தால் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு மார்க்கம் ஏற்படுத்தியுள்ள வழியையும் அறிந்திருத்தல்.**

02. மனிதன் அறிவு, உடல், ஆன்மாவைப் பெற்றுள்ள ஓர் ஆன்மிக ஜீவராசி

மனிதன் பற்றிய கண்ணோட்டங்கள் பலவாறாக அமைந்துள்ளன. கண்ணோட்டத்தைப் பொறுத்தே அவனது வாழ்வு பற்றிய தீர்மானங்கள் உருவாகும். இங்கு பிழைத்தால் மனித வாழ்க்கையே சீரழிந்துவிடும்.

மனிதன் உடல் தேவைகள் மாத்திரம் கொண்டவன் என்பது ஒரு கருத்து. இதன் அடிப்படையில் மனிதன் பொருள் தேவையையும் உடல் இச்சை சார்ந்த தேவையையும் கொண்டவன். எனவே, இவை விரும்பியது போல கிடைப்பதற்கு தீர்வு வழங்கப்பட வேண்டும். அப்போதுதான் அவனது வாழ்வு வெற்றி பெறும். இது பின்வரும் தத்துவங்களால் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. "மனிதன் ஒரு பொருளாதாரப் பிராணி","மனிதன் சிந்திக்கும் சிரிக்கும் பிராணி", மனிதனின் பூர்விகம் மிருகத்தை அடிப்படையாகக் கொண்டது." நவீன உலகில் செல்வாக்குச் செலுத்தும் சிந்தனையாக இவை காணப்படுகின்றன. இன்று உலகம் எதிர்நோக்கியுள்ள ஒழுக்க வீழ்ச்சிக்கும் பொருள் மோகத்திற்கும் இந்தக் கண்ணோட்டமே அடிப்படை. இது வாழ்க்கை பற்றிய நீதமான பார்வையைச் சிதைத்துள்ளது. அடுத்தவர் நலனுக்குப் பகரமாக அவனை சுரண்டும், நசுக்கும் மனநிலையைத் தோற்றுவித்துள்ளது.

மனிதன் பற்றிய இஸ்லாத்தின் கோட்பாட்டை நோக்கினால், ஒன்று அவன் மண்ணினால் படைக்கப்பட்டவன். அல்லாஹ் கூறுகிறான் “அவனே தான் படைத்துள்ள ஒவ்வொரு பொருளையும் அழகாக்கினான் இன்னும், அவன் மனிதனின் படைப்பைக் களி மண்ணிலிருந்து ஆரம்பித்தான்.” (சஜதா: 7)

எனவே மனிதன் மண்வாசனை கொண்டவன். அதாவது, பொருளாசையும் உடல் இச்சையும் அதுபோல் அலங்காரங்களினால் ஈர்க்கப்படுவதும் அவனது இயல்பான தன்மையாகும். இவற்றை எல்லை மீறி கட்டுப்படுத்துவது அவனது வாழ்வின் சமநிலையைப் பாதிக்கும். இவற்றுக்கு ஏற்பாடும் உத்தரவாதமும் உறுதி செய்யப்பட வேண்டும்.

அதேநேரம் மனிதன் இன்னுமொரு விஷேட தன்மையைக் கொண்டவனாகவும் படைக்கப்பட்டிருக்கின்றான். அதுதான் ஆன்மா. அல்லாஹ் கூறுகினறான். “நான் அவரைச் செவ்வைப் படுத்தி, எனது ஆவியிலிருந்து அவருக்குள் ஊதிய பொழுது: அவருக்கு நீங்கள் விழுந்து ஸுஜூது செய்யுங்கள்” (எனக் கூறியதும்)” (சாத் 38: 72)

இது மனிதனுக்கு மாத்திரம் வழங்கப்பட்ட விஷேட அம்சமாகும். அதனாலேயே படைப்பாளனின் உறவை அடியார்கள் பராமரிக்கின்றார்கள். அதனை அடைந்தவர் மனிதத்தின் சிகரத்திற்குச் சென்று விடுவார். அவரின் செயல்கள் வியக்கத்தக்கதாக அமைந்து விடும். அதனைப் பாழ்படுத்தினால் கால்நடைகளை விட மோசமான நடத்தைளை வெளிப்படுத்துபவனாக மனிதன் மாறிவிடுவான். இந்த சோதனை அவனது கையில் வழங்கப்பட்டுள்ளது.

ஆன்மாவை வழங்கியவன் கூறுகின்றான்:

“ஆத்மாவின் மீதும், அதை ஒழுங்குபடுத்தியவன் மீதும் சத்தியமாக- அப்பால், அவன் (அல்லாஹ்) அதற்கு அதன் தீமையையும் அதன் நன்மையையும் உணர்த்தினான். அதை (ஆத்மாவை)ப்

பரிசுத்தமாக்கியவர் திடமாக வெற்றியடைந்தார். ஆனால் எவன் அதை(ப்பாவத்தில்) புகுத்தினானோ அவன் திட்டமாகத் தோல்வி அடைந்தான். (அஷ்ஷம்ஸ் 91: 7-10)

மனித ஆன்மா நேர்மறையின்பாலும் தூண்டும்; எதிர்மறை யின் பாலும் தூண்டும். அதனைத் தூய்மைப்படுத்தி, நன்மையின் பால் தூண்டும் நிலையைப் பராமரிப்பது மனிதனின் பொறுப்பு. அப்படி இல்லாமல் அதன்பாட்டில் விட்டுவிட்டால் அது களங்க மடைந்து விடும். அது அவனை தோல்வியின்பால் இட்டுச் செல்லும்.

மனித வாழ்வு என்பது பிரயத்தனங்களையும் சோதனைகளை யும் கொண்டது. எதனை அடைய விரும்பினாலும் முயற்சி என்பது அதன் நியதி. எனவே தனது காரியங்களில் நேரிய சிந்தனையுட னும் (நேர்மனப்பான்மை) விடாமுயற்சியுடனும் அவன் செயற்பட வேண்டும். இதுவே அவனது ஈருலக வெற்றிக்கும் வழிகோலும். இந்த விடயம் அவனது ஆன்மாவின் நிலையிலேயே தங்கியுள்ளது. ஆன்மாதான் மனித நடத்தைகளின் அடிப்படை. அவனது அறிவு சரி,பிழையை, கூடும், கூடாததை பிரித்துக் காட்டினாலும் அதனை செய்வதா இல்லையா என்பதை ஆன்மாவே தீர்மானிக்கிறது.

வரம்பு மீறல், உலக மோகம், பிழையான சிந்தனைகள் களையப் பட்டு அதனைத் தூய்மை பெறச் செய்ய வேண்டும். அதனோடு அதனைப் படைத்த இரட்சகனை அதில் இருத்திக் கொள்ள வேண் டும். இதுவே அவன் அறிவினூடாக விளங்கும் சரியானதை நோக்கி அவனது செயலை இட்டுச் செல்லும்.

இறை எண்ணத்தை உயிரோட்டமாக வைத்திருப்பது, வாழ்க்கை யின் எல்லாப் போராட்டங்களையும் எதிர்கொண்டு அதன் செல்வாக்கைப் பேணிப் பாதுகாப்பது தொடர்பாக அல்குர்ஆன் வழிகாட்டுகிறது.

“நிச்சயமாக வெற்றியடைந்து விட்டார், தூய்மையை மேற் கொண்டு மேலும் தன் இறைவனின் பெயரை நினைவுகூர்ந்து,

அதனோடு தொழுகையை நிறைவேற்றியவர்." (அல்அஃலா 14,15)

உள்ளத்தை உலக மாச்சரியங்களில் இருந்து விடுவித்து, இறைவனை ஏகனாக அதில் ஆழப் பதித்து அதனோடு தொழுகையில் ஈடுபட்டு வருபவர்கள் வெற்றியடைவார்கள் என்கிறது இறை வசனம். இதனூடாக வாழ்வின் எல்லாக் காலங்களிலும் எல்லா நிலைகளிலும் இறை எண்ணம் உயிரோட்டமாக செல்வாக்கு செலுத்தக் கூடியதாகப் பராமரிக்கப்பட வேண்டும் என்றால் அவர் தொழுகையில் ஈடுபட வேண்டும் என்பதனையே இந்த வசனம் விளக்குகிறது. இறை எண்ணம் செயல்களின் அடிப்படை என்பதால் அதனைப் பராமரிக்கும் தொழுகையை நிலைநிறுத்துமாறும் எப்பொழுதும் தொழுது வருமாறும் தொழுகையைப் பாதுகாக்குமாறும் மார்க்கம் திரும்பத் திரும்ப நினைவுபடுத்துவதை அல்குர்ஆனிலும் ஸுன்னாவிலும் பார்க்க முடியும்.

இப்னுல் கையிம் (ரஹ்) கூறுவதாக யூசுப் அல்கர்ளாவி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள் (அல் ஈமான் வல் ஹயா): "உள்ளத்தில் ஒரு தனிமை உள்ளது. அதனை அல்லாஹ்வுடனான நட்பே நீடிக்க முடியும். உள்ளத்தில் ஒரு கவலை உள்ளது. அல்லாஹ்வை அறிந்து கொள்வதால் ஏற்படும் மகிழ்ச்சியே அதனைப் போக்கும். அதில் ஒரு கலக்கமும் குழப்பமும் உள்ளது. அல்லாஹ்வை (தொழுகை) நோக்கி விரைவதன் மூலமே அதனை அமைதிப்படுத்தலாம்.

படைப்பாளனுடன் ஏற்படும் தொடர்பே மனிதனின் அனைத்துத் தேவைகளுக்கும் தீர்வு. அவன் தனிமையை உணரும்போதே பிரச்சினைகளை சந்திக்கத் துவங்குகிறான். Alexis Carrel தனது Man the unknown எனும் நூலில் கூறுகிறார். மனிதன் உள ஆரோக்கியத்தை இழப்பதற்கான ஆரம்பம் தான் தனிமைப்பட்டு விட்டேன் என்ற உணர்வுதான். அவர் அதற்கு கூறும் பரிந்துரை, தனிமை உணர்வை நீக்கி தனக்கோர் உற்ற துணை உள்ளது என்ற உள்ளுணர்வை ஊட்டி உற்சாகமாக வாழவைப்பதில் தொழுகைக்குப் பெரிய பங்குண்டு" என்கிறார். (தொழுகை- றஸீன் ஐதுறூஸ் 2016)

இஸ்லாமிய வாழ்வின் அடிப்படை இறை நம்பிக்கை. இது வாழ்க்கைப் போராட்டம், சிந்தனைத் தாக்கங்களால் பாதிப் படைய முடியும். அத்தகைய பாதிப்புக்களில் இருந்து பாதுகாத்து உயிரோட்டமாகப் பராமரிப்பதில் தொழுகைக்கு அலாதியான பங்கு இருக்கிறது. எனவே, இஸ்லாம் விரும்பும் சிந்தனையை, செயற்பாட்டைத் தொடர்ந்தும் பாதுகாத்து பசுமையாக வைத்தி ருப்பதற்குத் தொழுகை இன்றியமையாதது என்பதையே இங்கு நாம் காண்கின்றோம்.

தங்களை தகைமைப்படுத்திக் கொள்வதற்கான ஆலோசனை: 2

1. **மனிதன் அறிவு, உடல், ஆன்மா என்ற மூன்றையும் அதன் தேவைகளையும் கொண்டவன் என்பதை விளங்குதல்.**
2. **பொருள் பற்றிய தீவிர சிந்தனையில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ளல்.**
3. **ஆன்மா பரிசுத்தத்தை வேண்டி நிற்கிறது என்பதை அறிந்து அதற்கான பரிகாரத்தைக் காணல்.**

அத்தியாயம்: 02

தொழுகையின் முன்

1. இறை வணக்கங்களும் அதன் நோக்கங்களும்

ஆன்மாவின் தூய்மையையும் உயிரோட்டத்தையும் கச்சிதமாகப் பராமரிக்கும் வேலையைச் செய்வதாகவே "ஷஆயிர்"என அழைக் கப்படும் இறைவணக்கங்கள் காணப்படுகின்றன. அதன் முக்கியத்து வம் கருதி இவை மார்க்கத்தின் தூண்களாக ஆக்கப்பட்டிருக்கின் றன. அதன் மீதுதான் இஸ்லாம் எனும் அழகிய (பண்பாடுகள்) வீடு நிர்மாணிக்கப்பட்டுள்ளது. ஆகவே இறைவணக்கங்களின் நோக் கங்களையும் நடைமுறையையும் மிகச் சரியாக விளங்கி தங்களை அதற்கே உரிய பயிற்சிக்கு உட்படுத்திக் கொள்ள முடியுமாக இருந் தால் இஸ்லாமிய வாழ்வு இலகுவானதாகவும் இயல்பானதாகவும் அமைந்து விடும்.

இறைவணக்கங்கள் பற்றி அல்குர்ஆனும் அல்ஹதீஸும் அதன் முக்கியத்துவம், அதனால் அடையப் பெறும் நற்பேறுகள் பற்றி கூறு வதோடு அவை ஒவ்வொன்றும் என்ன நோக்கத்தைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது என்பதையும் கூறத் தவறவில்லை. அதனை சற்று அவதானிப்போம்.

நோன்பைப் பற்றிக் கூறும்போது பின்வருமாறு கூறுகிறது:

“ஈமான் கொண்டோர்களே! உங்களுக்கு முன் இருந்தவர்கள் மீது நோன்பு விதிக்கப்பட்டிருந்தது போல் உங்கள் மீதும் (அது) விதிக்கப்பட்டுள்ளது. (அதன் மூலம்) நீங்கள் இறையச்சமுடை யோர் ஆகலாம்.” (அல்பகரா 183)

ஹஜ் பற்றிக் கூறும்போது “(எனினும்), குர்பானியின் மாமிசங் களோ, அவற்றின் உதிரங்களோ அல்லாஹ்வை ஒருபோதும் அடை வதில்லை. ஆனால் உங்களுடைய தக்வா (பயபக்தி) தான் அவனை அடையும். அல்லாஹ் உங்களுக்கு நேர்வழி காண்பித்ததற்காக அவனை நீங்கள் பெருமைப்படுத்தும் பொருட்டு - இவ்வாறாக அவற்றை உங்களுக்கு வசப்படுத்திக் கொடுத்திருக்கிறான். ஆகவே நன்மை செய்வோருக்கு நீர் நன்மாராயங் கூறுவீராக!” (ஹஜ் 37)

ஸகாத் பற்றி கூறும்போது “(நபியே!) அவர்களுடைய செல்வத் திலிருந்து தர்மத்திற்கானதை எடுத்துக் கொண்டு, அதனால் அவர் களை உள்ளும் புறமும் தூய்மையாக்குவீராக! இன்னும் அவர் களுக்காகப் பிரார்த்தனை செய்வீராக! நிச்சயமாக உம்முடைய பிரார்த்தனை அவர்களுக்கு (சாந்தியும்) ஆறுதலும் அளிக்கும் அல்லாஹ் (யாவற்றையும்) செவியுறுவோனாகவும் அறிபவனா கவும் இருக்கின்றான்.” (அத்தௌபா 103)

மேலுள்ள வணக்கங்கள் குறிப்பிட்ட சாராருக்கும் குறித்த காலத்திலும் கடமையானவை. அதே நேரம் நியாயமான காரணங் களினால் தவிர்ப்பதற்கும் வாய்ப்புகள் உள்ளன. ஆனால் இஸ்லாத் தின் தூண்களில் இரண்டாவது தூணாகக் கருதப்படும் தொழுகை பல்வேறு வகையிலும் தனித்தன்மை வாய்ந்ததாக அடியார்க ளுக்கு வழங்கப்பட்டிருப்பதை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

1) இறைவன் தன்னளவில் அழைத்து வழங்கியது.
2) மனிதன் தோன்றிய காலத்தில் இருந்து பேணப்பட்டு வருவது.
3) மறுமை விசாரணையில் முதன்மையானது.
4) உலகத்தின் கர்த்தாவோடு உரையாடும் வாய்ப்பைப் பெற்றுத் தருவது.

5) ரஸூல் (ஸல்) அவர்கள் கண்குளிர்ச்சியைக் கண்டது.

6) எல்லாத்தரப்பினரும் எந்நிலையிலும் நிறைவேற்ற வேண்டியது.

7) செயல்களில் சிரேஷ்டமானது என வர்ணிக்கப்பட்டது.

8) மார்க்கத்தை ஏற்ற ஒருவர் முதன் முதலில் நிறைவேற்ற வேண்டியது.

9) ஒருவர் மார்க்கத்தில் இருப்பதையும் இல்லாததையும் பிரித்தறிவிக்கக் கூடியது.

இவ்வாறு அனைத்து அமல்களை விடவும் முதன்மை நிலையில் வைத்து பார்க்கப்படும் ஓர் அமலாக தொழுகை காணப்படுகிறது. இஸ்லாமிய வாழ்வைப் பராமரிப்பதிலும் இன்றியமையாத பாத்திரத்தை இந்த தொழுகைதான் வழங்க இருக்கிறது. தொழுகையின் நோக்கம் பற்றி இஸ்லாம் கூறும்போது:

"என்னை நினைவுகூருவதற்காக தொழுகையை நிலைநாட்டுங்கள்."

"அல்லாஹ்வை நினைவுகூருவதே மிகப் பெரியது."

ஒருவர் தொழுத தொழுகையில் அவருக்கு எழுதப்படுவது 1/10, 1/9, 1/8, ...1/2 (அபூதாவூத்)

அல்லாஹ் கூறுகின்றான்:

எல்லா வணக்கங்களினதும் பொதுவான எதிர்பார்ப்பு இறை எண்ணத்தைப் புதுப்பிப்பதும் உயிரோட்டமாகப் பராமரிப்பதும் தான் என்பதை இந்த வசனங்கள் எடுத்துரைக்கின்றன. குறிப்பாக தொழுகை இறை எண்ணத்தை வளர்ப்பதற்கான பிரத்தியேக ஏற்பாடாகக் காணப்படுவதை அறிந்து கொள்ள முடியும். அதனை விளக்க முயற்சிப்பதே நூலின் எதிர்பார்ப்பு.

தங்களைத் தகைமைப்படுத்திக் கொள்வதற்கான ஆலோசனை: 3

1. **தொழுகைக்குரிய தனித்துவத்தையும் அதன் எதிர்பார்ப்பையும் விளங்குதல்.**

2. தொழுகையே வாழ்க்கையா? வாழ்க்கையில் தொழுகையா?

வாழ்க்கை என்பது தேவைகள், பிரயத்தனங்கள், சோதனைகளைக் கொண்டது. அதில் மனிதன் தளம்பாமல், விரக்தியுறாமல், சோர்ந்துவிடாமல் உத்வேகத்துடன், விடாமுயற்சியுடன் தொடர வேண்டும். அவ்வாறு தொடர்வது எப்பொழுது சாத்தியம் என்றால் அவனது மனநிலை அமைதியாகவும் திருப்தியாகவும் காணப்பட வேண்டும். அமைதி, திருப்தி என்பது அறிவோடும் உடலோடும் மாத்திரம் தொடர்பானது அல்ல. அவனது உளநிலைக்கும் பெரிய பங்குண்டு. அதாவது எதிர்கொள்ளும் நிகழ்வு பற்றிய மிகச் சரியான சிந்தனை அவனிடம் இருக்க வேண்டும். இங்கு சிந்தனை என்பது தகவல்கள் அல்ல, பல தகவல்களினூடாக ஏற்றுக் கொண்ட, சரிகண்ட நிலைப்பாடாகும். அது அவனுடைய மனநிலையில் செல்வாக்குச் செலுத்தும்.

எந்த ஒரு நிகழ்வும் காரண காரிய விதியின் ஒழுங்கிலேயே நிகழும். அதுதான் நிகழ்வுகளுக்கான அடிப்படை. அந்த விதியின் பின்னால் இருப்பவன் பிரபஞ்சத்தின் படைப்பாளன். அந்த விதிகளுக்கு அவன் கட்டுப்பட்டவனல்ல. அவனது நாட்டம், விருப்பம், நிர்ணயம் அந்த நிகழ்வில் தாக்கம் செலுத்தும்.

ஒரு மனிதன் எதிர்கொள்ளும் விடயம் அணுவளவான மிகச் சிறிய பெறுமானமாக இருந்தாலும் அல்லது அதற்கு மாற்றமாக பிரமாண்டமானதாக இருந்தாலும் அது இறைவனின் நாட்டத்திற்குட்பட்டது. இறைவனின் நாட்டம் என்பது மறைவான, வெளிப்படையான, முன்னால், பின்னால் உள்ளவை பற்றிய பரிபூரணமான அறிவோடு முன்னதாகவே எழுதப்பட்டது. அது அறிவுபூர்வமானது, நீதியின் பாற்பட்டது, கருணை வடிவானது. இத்தகைய பரிபூரணத் தன்மையைக் கொண்டதாகவே நிகழும் ஒவ்வொரு காரியமும் காணப்படும்.

இத்தகைய ஒரு விடயத்தை நான் எதிர்கொண்டால் அதனை நான் ஏற்றுக் கொள்வது சரியா, முரண்படுவது சரியா என

சிந்தித்தால் ஏற்றுக் கொள்வதுதான் அறிவுடைமை. அந்த இறை நாட்டத்தோடு உடன்படுவதுதான் சரியானது என்ற நிலைப்பாட்டிற்கே அறிவுபூர்வமாக சிந்திக்கும் ஒருவர் வர வேண்டும். இதுவே பொறுமையின் முதல் தகுதி. ஒவ்வொரு நிகழ்விலும் அதன் பின்னணியில் இந்தப் பார்வையையும் இதற்கே உரிய உள நிலையையும் பெறுவதுதான் இறைநம்பிக்கையின் தலையாய எதிர்பார்ப்பாகும்.

இது வெறும் பார்வை மாத்திரம் அல்ல, இதன் விளைவு ஆச்சரியமானது. அவனை மனிதத்தின் சிகரத்திற்கே கொண்டு சென்று விடும். அதன் முதல் விளைவு அவனை உணர்வின் கொந்தளிப்பில் இருந்து பாதுகாத்து நிதான நிலைக்கு இட்டுச் செல்கிறது. இதனால் அவனது நடவடிக்கைகள் அறிவுபூர்வமாக அமையும். இறைஞாபகம் செல்வாக்குச் செலுத்துவதனால் துன்பகரமான விடயமாக இருந்தால் பொறுமையாக இருப்பார். மகிழ்ச்சிகரமான விடயமாக இருந்தால் நன்றியுணர்வு பிறக்கும்.

இப்போது அவனது செயல் நீதியும் உண்மையும் நிறைந்ததாக அமையும். அவன் எதிர்கொண்ட அசாதாரண சூழ்நிலை இயல்பு நிலைக்குத் திரும்பி விடுகிறது. தான் எதிர்கொண்ட நிகழ்வைத் தனக்குரிய உரிமை, கடமையின் பின்னணியில் மேற்கொள்வான். இது அவனுக்கு வழங்கப்பட்ட சமூக நீதியும் மார்க்க அனுமதியுமாகும்.

இவ்வாறு துன்பத்திலும் இன்பத்திலும் ஒரே மனோநிலையைப் பராமரிக்கும் ஆச்சரியமான வாழ்வு முஃமினுக்கு மாத்திரம் கிடைக்கப் பெற்ற வரமாகும்.

இறை நம்பிக்கை பரிசளிக்கும் சுவை இதுதான். "நம்பிக்கை கொண்டவர்கள் அமைதியடைகிறார்கள், அல்லாஹ்வின் நினைவால்."

இத்தகைய ஒரு முஃமினுடைய விடயம் ஆச்சரியமானது. ரஸூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள். "ஒரு முஃமின் ஆச்சரியமானவன். அவனது எல்லாக் காரியமும் அவனுக்கு சிறந்ததாகவே அமைந்து

விடுகிறது. அவனுக்கு ஒரு துன்பம் ஏற்பட்டால் பொறுமையாக இருக்கின்றான். அது அவனுக்கு சிறந்ததாக இருக்கிறது. அவனுக்கு ஒரு நலவு நடந்தால் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துகின்றான், அதுவும் அவனுக்கு சிறந்ததாக அமைந்து விடுகிறது. இது முஃ மினுக்கு மாத்திரமே இருக்க முடியும்."

இவர்களுக்கு வெற்றியேயன்றி தோல்வி இருக்க மாட்டாது. அல்லாஹ் கூறுகின்றான்:

"நிச்சயமாக நம்பிக்கை கொண்டவர்கள் வெற்றி பெற்று விட்டனர்." (அல்முஃமினூன்: 1)

இறைவணக்கங்களில் தலையாயதும் அமல்களில் முதன்மையானதும் ஒரு முஃமினுடன் எந்நிலையிலும் தவிர்க்க முடியாததாக இணைத்து வைக்கப்பட்டிருப்பதுமான வணக்கம்தான் தொழுகை. அதனது எதிர்பார்ப்பு, குறிக்கோள் பற்றி அல்குர்ஆன் கூறும்போது, "தொழுகையை நிலைநாட்டுங்கள்; என்னை நினைவுபடுத்துவதற்காக" எனக் கூறுகிறது. இன்னுமோர் இடத்தில் "அதன் மிகப் பெரிய விடயம் அல்லாஹ்வை நினைவுகூருவதுதான்" எனக் கூறுகிறது. ஒரு முஃமினின் வாழ்வில் எல்லா சந்தர்ப்பங்களிலும் அவனது செயலுக்குப் பின்னால் இருந்து தூண்டும் சக்தியையே தொழுகை வழங்குகிறது.

"அவர்களுடைய அடையாளமாவது: அவர்களுடைய முகங்களில் ஸுஜூது துடைய அடையாளமிருக்கும்." (அல்பத்ஹ் 48: 29)

அவர்களின் சிந்தனையில், நடத்தையில் சுஜூதின் பணிவும் பயமும் இழையோடி இருக்கும். தொழுகை அவர்களின் வாழ்க்கையை வடிவமைக்கும் சக்தியைப் பெற்றிருக்கும். உண்மையில் ஒருவருடைய நடத்தையை அவ்வப்போது ஏற்படும் சந்தர்ப்பமும் சூழலும் தீர்மானித்தாலும் உண்மையான நடத்தை எதுவென்றால் அவனது ஆழ்மனம் தீர்மானிப்பதுதான். அதனையே அல்லாஹ்வும் அவதானிக்கின்றான். அதனைத் தீர்மானிப்பதில் தொழுகைக்குப் பாரிய பங்கு இருக்கிறது. அதாவது அவரது வாழ்க்கையின் ஒவ்வோர் அசைவுக்குப் பின்னாலும் தொழுகையின் தாக்கம்

இருக்கும். அதனால் தொழுகையே வாழ்வாக மாறிவிடுகிறது.

ரஸூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள். "நீங்கள் எந்நிலையில் இருந்தாலும் இறை எண்ணத்தோடு இருங்கள்."

இறை எண்ணம் ஒருவரிடம் குடிகொண்டிருப்பது என்பது, நிறைவான அருள் பண்பு கொண்ட, வானம், பூமியை ஆட்சி செய்கின்ற, எல்லாவற்றையும் பற்றிய ஞானமுள்ள, தான் நாடியதை ஆகுக! என்ற வார்த்தையினூடாக நிலைபெறச் செய்யும் எல்லாம் வல்ல இறைவனோடு உறவு கொண்டிருப்பதாகும். இந்தப் பாக்கியம் பெற்ற ஒருவர் எப்படியான சிந்தனையும் மனவலிமையும் தனது வாழ்வில் இறை பண்புகளை அணிகலன்களாகவும் கொண்டிருப்பார் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இவ்வாறு வார்த்தெடுக்கப்பட்டவர்கள்தாம் சிறந்த சமுதாயம் என அல்லாஹ்வால் வர்ணிக்கப்பட்ட சஹாபா சமூகம். அவர்களின் இறைவணக்கங்கள் குறிப்பாக தொழுகை அவர்களை இன்றுவரை உலக மாந்தரை புருவத்தை உயர்த்திப் பார்க்க வைத்தது.

தொழுகை அத்தனை சிரேஷ்டமானது என்பதால்தான் அல்லாஹ் தனது அன்பு அடியாரை தன்னளவில் அழைத்து அதனைப் பரிசாக வழங்கினான். மிஃராஜில் முஹம்மத் (ஸல்) அவர்கள் தனது எஜமானோடு உரையாடிய அந்த வாய்ப்பைத்தான் தொழுகையின் மூலம் ஈமான் கொண்டவர்கள் பெற்றுக் கொள்கிறார்கள்.

படைப்பில் மனிதன் சிறப்பையும் கண்ணியத்தையும் பெற்றிருக்கின்றான். அவனது நேரிய சிந்தனையும் தூய நடத்தையும் படைப்பினங்கள்மீது அருள் பார்வையையும் இறை நம்பிக்கை உருவாக்குகிறது. தொழுகை இந்த அணிகலன்களை நிரந்தரமானதாகவும் அழகிய செயலாகவும் பரிணமிக்கச் செய்கிறது. ஈற்றில் அந்த சமூகம் "கைர உம்மத்" உன்னத சமுதாயமாக மிளிருகிறது. அவர்கள் வாழ்வின் நோக்கத்தை நிறைவுசெய்து இறை திருப்திக்குரியவர்களாக மாறிவிடுகின்றனர்.

"அவன்தான் உங்களில் யார் அழகிய நடத்தை உள்ளவர் என்பதை

சோதிப்பதற்காக மரணத்தையும் வாழ்வையும் படைத்தான்." (அல்முல்க்: 2)

வாழ்வின் நோக்கம் மனிதன் தன்னை இறைவனின் பிரதிநிதியாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்பதாகும். இந்த உயர் பதவிக்குத் தகுதி பெறுவதற்கு அவன் இறை நம்பிக்கை கொள்ள வேண்டும். செயல்களில் அழகானதைத் தனது அணிகலன்களாக ஆக்கிக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் பிரதிநிதி என்ற உயர் அந்தஸ்தை வகிக்க முடியும். இந்தப் பதவியில் உறுதியாகவும் தொடர்ந்தேர்ச்சியாகவும் அவனைத் தக்கவைத்திருப்பது அவனது தொழுகையாகும். இந்தப் பின்னணியிலேயே மார்க்கத்தில் தொழுகை கட்டாயமானதாக ஆக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய பார்வையில் தொழுகையைப் புரிந்து கொள்ளும் ஒருவர் தனக்குத் தானே அதனைக் கட்டாயமாக்கிக் கொள்வார். இந்த மனோ நிலையே தொழுகையின் கண்ணியத்தையும் அதன் பெறுமானத் தையும் பாதுகாப்பதற்கு வழிகோலும். இத்தகையவர்கள் தொழுகை யின் பயன்பாட்டை முழுமையாகப் பெற்றுக் கொள்வார்கள்.

இறை எண்ணத்தை வளர்த்துக் கொள்வதற்கான பரந்துபட்ட ஏற்பாட்டை அது கொண்டிருக்கிறது. தொழுகைக்கான அழைப்பு, அதற்காகத் தயாராகுதல், ஒரு திசையை நோக்குதல், புனிதம் நிறைந்த செயலை துவங்குதல் (தக்பீர்), உலகைப் பிரிந்திருத்தல், உடல் அவயவங்களின் தொழிற்பாடு, ஓதலும் தியானமும் பிரார்த் தனையும், ஐந்து நேர ஒழுங்கமைப்பு இவை அனைத்தையும் ஆழ அகலத்தோடு விளங்க முடியுமாக இருந்தால் இறை எண்ணம் என்ற கடலில் நனைந்து, தூய்மையடைந்து, புத்தூக்கம் பெற்று, மன்னிப்பு என்ற பரிசுடன் விடைபெறுவார்.

தங்களைத் தகைமைப்படுத்திக் கொள்வதற்கான ஆலோசனை: 4

1. **வாழ்க்கைப் போராட்டத்தையும் அதற்கான கட்டுச்சாதத்தையும் அறிந்திருத்தல்.**
2. **எப்பொழுதும் செயல் சரியானதாக, தூய்மையானதாக இருப்பதற்கு தொழுகையின் தேவையை விளங்குதல்.**
3. **சுஜூதுடைய தாக்கம் முகத்தில் அறிவதை சரியாக விளங்கி தொழுகையின் பெறுமானத்தை உணர்தல்.**
4. **தொழுகையின் குறிக்கோள் முழு வாழ்க்கையோடும் இணைக்கப் பட்டிருப்பதை விளங்குதல்.**

இந்த இறை வணக்கத்தை எவ்வாறு நிறைவேற்றுவதன் மூலம் அதன் உச்ச பயன்பாட்டை அடைய முடியும் என்பதை அறிவூட்டி, ஆர்வப்படுத்தி, வழிகாட்டுவதே நூலின் எதிர்பார்ப்பு,இன்ஷா அல்லாஹ்.

3. ஒரு செயலின் நடைமுறையும் நோக்கமும்

மனிதன் பகுத்தறிவு ஆற்றல் பெற்றவன். எந்த ஒரு விடயத்தை யும் தர்க்க ரீதியாக நோக்குவதே அவனது இயல்பு. குறித்த செயல் பயனுள்ளதா, பயனற்றதா, இந்த செயல் தனக்கு அவசியமானதா, அவசியமற்றதா என்பதை தீர்மானித்ததன் பின்னரே அதில் அவன் ஈடுபடுவான். அப்படிச் செயலாற்றுவதே இறைவனின் எதிர்ப் பார்ப்பாகவும் இருக்கிறது. அதுபோல் செய்யும் செயலுக்கு நோக்கமும் அடைவும் இருக்க வேண்டும். நோக்கம் இல்லாமல் எந்த ஒரு செயலையும் மனிதன் செய்வதில்லை, செய்யவும் கூடாது. அப்படி செயற்படுவது 'அக்ல்' பகுத்தறிவு எனும் இறைவனின் ஏற்பாட்டிற்கு அவன் செய்யும் அநியாயமாகும். ஒரு செயலை நோக்கமின்றி தொடர்ந்து இரண்டு முறைக்கு மேல் செய்தால் அவனைப் பற்றி அடுத்தவர்கள் வித்தியாசமான முடிவுக்கு வருவார்கள். இந்தளவுக்கு செயலின் நோக்கம் பற்றிய பார்வைக்கு கனதி ஒன்று இருக்கின்றது.

சன்மார்க்க விடயத்திலும் இதனையே இஸ்லாம் வலியுறுத்து கின்றது. மார்க்கம் அறிவுபூர்வமானது, அது சத்தியத்தின்

அடிப்படையில் உருவானது. அல்லாஹ் கூறுகிறான்:

“இன்னும், முற்றிலும் சத்தியத்தைக் கொண்டே நாம் இதனை (குர்ஆனை) இறக்கிவைத்தோம். முற்றிலும் சத்தியத்தைக் கொண்டே இது இறங்கியது. மேலும், (நபியே!) நாம் உம்மை நன்மாராயங் கூறுபவராகவும் அச்சமூட்டி எச்சரிப்பவராகவுமேயன்றி அனுப்ப வில்லை.” (அல்இஸ்ரா 17:105)

செயல்களின் நோக்கம், அது ஏற்படுத்தும் நடத்தை மாற்றம் பற்றி அல்குர்ஆனும் சுன்னாவும் விவரித்துள்ளன. அவை அடை யப் பெறும் வகையில் அவை நிறைவேற்றப்பட வேண்டும் என்பதுதான் மார்க்கத்தின் எதிர்பார்ப்பு. அதாவது குறித்த செயல் பற்றிய சரியான விளக்கம், அதற்கே உரிய உளநிலை, அதில் காட்டப்பட வேண்டிய ஈடுபாடு இவை ஆரோக்கியமானதாக அமைதல் வேண்டும். இதுவே குறித்த செயலின் கண்ணியத்தைப் பேணுவதாகவும் அந்த செயலின் இம்மை, மறுமைப் பயனை அடையக் கூடியதாகவும் அமைய முடியும். இங்குதான் மார்க்கம் அறிவாளியையும் வணக்கசாலியையும் வேறுபடுத்தி பார்க்கிறது. வணக்கவாளி செயலில் கண்ணும் கருத்துமாக இருப்பார். அறிவு பெற்றவர் நோக்கம் நிறைவேறுவதிலும் அடைவைக் காண்பதிலும் கவனம் செலுத்துவார்.

“ஒரு வணக்கவாளியைவிட ஓர் அறிஞரின் சிறப்பு உங்களில் சாதாரண தோழரைவிட என் சிறப்பு போலாகும்.” (அத்திர்மிதி)

ரஸூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள். “ஒரு வணக்கவாளியின் 1000 ரக்அத்துகள் அறிவாளியின் இரண்டு ரக்அத்துகளுக்கு ஈடா காது.”

நவீன யுகத்தில் அமல்கள் உயிரிழந்து தோற்றம் மட்டும் காணப் படுவதாகப் பரவலாகப் பேசப்படுகிறது. தொழுகையும் இதில் விதிவிலக்கில்லாமல் பாதிப்படைந்திருக்கிறது. சம்பிரதாயமாக, பழக்கவழக்கமாக மாறியுள்ளது. வணக்கங்களில் தலையாயதாகக் காணப்படும் தொழுகையைக் கூட கற்று நிறைவேற்றுவது கானல்

நீராகியுள்ளது. பார்த்துப் பழகி நிறைவேற்றும் பாரம்பரியமாகவே தொடர்கிறது. பொதுவாக தொழுகையின் நடைமுறையிலேயே கவனம் குவிந்துள்ளது. அதன் 'ரூஹ்' உயிர் பற்றி சற்றும் அலட்டிக் கொள்ளாத நிலையே தொடர்கிறது. நிறைவேற்றி விட்டால் பெரிய விடயம் என்ற மனநிலை அதிகரித்துள்ளது. இது ஓர் ஆபத்தான நிலை. அல்லாஹ் பாதுகாக்க வேண்டும். என்னவென்றால், சிந்தனையும் உணர்வும் இணைக்கப்படாத தொழுகை சிலபோது அவமதிக்கும் நிலையைத் தோற்றுவிக்கும். அல்லாஹ் கூறுகின்றான்.

"...தொழுகைக்கு அவர்கள் தயாராகும் பொழுது சோம்பலுடையோராகவே நிற்கிறார்கள் - மனிதர்களுக்குத் (தங்களையும் தொழுகையாளியாக்கி) காண்பிப்பதற்காக (நிற்கிறார்கள்) இன்னும், மிகச் சொற்ப அளவேயன்றி அவர்கள் அல்லாஹ்வை நினைவுகூர்வதில்லை." (அன்னிஸா 142)

ஒரு பிரிவினர் தொழுகையை ஏறெடுத்தும் பார்க்காதவர்களாக இருக்கின்றனர். அவர்கள் பற்றி தொழுகையாளிகளும் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை. தானும் தன்பாடும் என்றிருக்கின்றார்கள். தொழுகின்ற இவர்கள் தொழுகையில் பெற்ற தாக்கத்தின் விளைவு இதுதான்.

இவர்களிடம் எவ்வாறு தொழுகை ஏற்படுத்தும் மாற்றங்களை, அடைவுகளைக் காண முடியும்? இத்தகையவர்கள் இறைவனை சந்திப்பதற்கும் செல்வார்கள், பாவகாரியங்களிலும் சாதாரணமாக ஈடுபடுவார்கள். அன்றாட வாழ்வில் இறை நம்பிக்கையற்றவர்களுக்கும் இவர்களுக்கும் வித்தியாசத்தைக் கண்டுகொள்வதும் கடினமாக இருக்கும். அடுத்த சமூகத்தின் விமர்சனத்திற்கும் ஆளாவார்கள். சிலபோது அவர்கள் இஸ்லாத்தை விளங்குவதற்குத் தடையாகவும் இருந்துவிடும் துர்ப்பாகிய நிலையும் உருவாகும். இவ்வாறான நிலை இன்று மேலிருந்து கீழ் வரை எல்லாத் தரப்பினர்களிடமும் அவதானிக்கப்படுகிறது.

எனவே, தொழுகையின் எதிர்ப்பார்ப்பு என்ன, அதனை அடைந்து கொள்ளும் வகையில் எவ்வாறு நிறைவேற்ற வேண்டும்

என்ற விளக்கத்தை ஒவ்வோர் இறை நம்பிக்கையாளனும் பெற்றிருப்பது இன்றியமையாததாகும்.

தங்களைத் தகைமைப்படுத்திக் கொள்வதற்கான ஆலோசனை: 5

1. **தொழுகை விடயத்தில் ஓரளவாவது ஆலிம் தரத்தில் இருக்கின்றேனா அல்லது பாமரத்தனத்தில் இருக்கின்றேனா என்பதை அளந்து பார்த்துக் கொள்ளுங்கள்.**
2. **எனது வாழ்க்கைக்கும் தொழுகைக்குமிடையிலுள்ள உறவை யதார்த்தத்தில் காண முடிகிறதா என்பதை அவதானியுங்கள்.**
3. **சுய ஊக்கத்துடன் தொழுகையை கற்பதற்கு நான் எடுத்துக் கொண்ட முயற்சி என்ன என்பதை நினைத்துப் பாருங்கள்.**

4. வாழ்வில் திருப்தி, நடத்தையில் மனிதம், சமூகத்தில் பாதுகாப்பு முதலியவற்றை பரிசளிக்கும் தொழுகை [தொழுகை ஏற்படுத்தும் மாற்றம்]

தொழுகையை நிறைவேற்றுவது மார்க்கத்தில் சிரேஷ்டமானதாக, தனித்துவமானதாக, எந்நிலையிலும் விடுபடாத ஒன்றாக இஸ்லாம் அறிமுகம் செய்துள்ளது. ஏனெனில், உலக வாழ்வில் சீரிய நடத்தையையும் மறுமை வாழ்வில் வெற்றியையும் பெற்றுத் தருவதில் இன்றியமையாத ஒன்றாக அது காணப்படுகின்றது. தொழுகையின் ஆழ அகலத்தையும் அது ஏற்படுத்தம் வியத்தகு மாற்றங்களையும் பேறுகளையும் மூலத்தில் இருந்து விளங்கி, அதன் பெறுமானங்களைப் பேணி, அறிவும் உடலும் உள்ளமும் ஒரு புள்ளியில் இணையும் வண்ணம் அதனை நிறைவேற்ற வேண் டும் என்பதே அதன் எதிர்பார்ப்பு. அவ்வாறு அமைந்தால் நிச்சயமாக மனிதம் பாதுகாக்கப் பெற்று, பலமான, வளமான சமூகத்தையும் அது தோற்றுவிக்கும்.

தொழுகை ஏற்படுத்தும் மாற்றம் தொடர்பாக இப்பொழுது நோக்குவோம்.

1. சமூக, பொருளாதார பாதுகாப்பு

தொழுகை கூட்டாக நிறைவேற்றப்பட வேண்டும் என்பது

வலியுறுத்தப்பட்ட ஒரு நடைமுறை. இதன் தாத்பரியங்களை விளங்கி குறித்த பகுதியில் வாழும் இறையடியார்கள் ஒன்று சேர்வார்கள் என்றால், தொழுகையில் அவர்கள் பெறும் இறை ஞாபகம், அது போல் சமத்துவத்திற்கான பயிற்சி, சக சகோதரர் களின் அறிமுகமும் புரிந்துணர்வும் அடுத்த சகோதரர் பற்றிய பிரக்ஞையை வலுவாகப் பதித்துவிடும். இது சமூகத்தின் பால் அவர்களின் கவனத்தைத் திருப்பிவிடும். சமூகத்தின் தேவைகள், அதன் வளர்ச்சி பற்றி ஆக்கபூர்வமான செயற்பாட்டை உருவாக்கும்.

“மறுமையை பொய்ப்பிப்பவனைப் பார்த்தீரா? அவன்தான் அநாதைகளை விரட்டுகின்றான்; ஏழைகளுக்கு உணவளிக்க தூண்டுவதில்லை. எனவே தொழுகையாளிகளுக்குக் கேடுதான். அவர்கள் தொழுகையை விட்டும் பராமுகமாக இருக்கிறார்கள்.” (அல்மாஊன் 1-5)

தொழுகையில் ஈடுபாடுள்ள ஓர் அடியான் இறை அன்பை, அவனது அருளை சுவைப்பார். அந்த ரஹ்மத் எனும் கருணைப் பண்பை தனது பண்பாகவும் ஆக்கிக் கொள்வார். இந்த அடியான் அல்லாஹ்வின் இந்த வசனம் கூறும் கடுமையான விமர்சனத்தை பொருட்படுத்தாமல் இருக்க மாட்டார். மாற்றமாக இறைவனின் வேண்டுகோளுக்கு முன்னுரிமை வழங்குபவராக இருப்பார். இறைவனின் எதிர்பார்ப்பில் முதன்மையானது அல்லாஹ்வின் குடும்பத்தினர் (இயாலுல்லாஹ்) சுபிட்சம் பெற வேண்டும் என்பதாகும். கருணை உள்ளம் கொண்ட அந்த அடியான் மறுமைப் பேற்றில் ஆர்வங்கொண்டு தன்னைச் சுற்றி வாழ்பவர்களின் தேவைகளுக்கு தீர்வு காணும் முயற்சியில் ஈடுபடுவார். இந்த மனநிலை ஒரு சமூகமாகப் பரிணமிக்கும்போது அங்கு வாழும் அநாதைகள், ஏழைகளின் பிரச்சினைக்கு தீர்வுகள் முன்மொழியப்படும். இதன் வளர்ச்சி அந்த சமூகத்தின் பொருளாதார உத்தரவாதத்தை உறுதி செய்யும்.

தொழுகையின் இந்த நோக்கத்தை அடையத் தவறுபவர் பிழையான எதிர்பார்ப்புடனேயே தொழுகையை நோக்கிச் செல்கிறார்.

அவருக்கு அது கேடாகவே அமைந்து விடுகிறது.

2. நம்பகத்தன்மையும் ஒழுக்கமும் சீரிய நடத்தையும் நிறைந்த வாழ்வு

வாழ்க்கை பசுமையும் அலங்காரமும் நிறைந்தது. மனிதன் விருப்பமும் இச்சையும் கொண்டவன். இந்த இண்டும் சேர்ந்திருந்தால் என்னவாகும் என்பது யாவரும் அறிந்ததே. இதனை உச்ச நிலையில் வளர்த்து வியாபிக்கச் செய்ய அவனது அறிவு துணை நிற்கும். வாழ்க்கை எங்கே செல்லும்? அல்லாஹ்வும் மலக்குமார்களும் செய்த சம்பாஷணையில், மனிதனின் ஒரு பக்கத்தை மாத்திரம் அறிந்த மலக்குகள் கூறுகிறார்கள்:

“(நபியே) இன்னும், உம் இறைவன் வானவர்களை நோக்கி ‘நிச்சயமாக நான் பூமியில் ஒரு பிரதிநிதியை அமைக்கப் போகிறேன்’ என்று கூறியபோது, அவர்கள் ‘(இறைவா!) நீ அதில் குழப்பத்தை உண்டாக்கி, இரத்தம் சிந்துவோரையா அமைக்கப் போகிறாய்? இன்னும் நாங்களோ உன் புகழ் ஓதியவர்களாக உன்னைத் துதித்து, உன் பரிசுத்ததைப் போற்றியவர்களாக இருக்கின்றோம்’ என்று கூறினார்கள். அ(தற்குஇறை)வன் ‘நீங்கள் அறியாதவற்றையெல்லாம் நிச்சயமாக நான் அறிவேன்’ எனக் கூறினான்.” (அல்பகரா: 2- 30)

ரஸூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள். “நிச்சயமாக உலகம் இனிமையும் பசுமையும் மிக்கதாக இருக்கும். நிச்சயமாக அல்லாஹ் அதில் உங்களை பிரதிநிதிகளாக ஆக்கியுள்ளான். நீங்கள் எப்படி செயற்படுகிறீர்கள் எனப் பார்க்கிறான். எனவே இவ்வுலகத்தைப் பயந்து கொள்ளுங்கள். பெண்களையும் பயந்து கொள்ளுங்கள். (முஸ்லிம்)

இந்தச் சோதனையில் சிக்கி சிதைந்து சின்னாபின்னமாகிவிடாமல் மனிதனை உலகவாழ்க்கையில் நடுநிலை பேணி நம்பிக்கைக்கு உரியவனாக, ஒழுக்கத்தைச் சிரமேற் கொண்டவனாக, மனிதம் நிறைந்த பண்பாடுமிக்கவனாக அவனை மாற்றுவதில் தொழுகைக்கு

நிகர் தொழுகைதான் என்பதை ஒரு முஃமின் அறிய வேண்டும். அதனை அழகுற விளங்கி, தேவையான பயிற்சிக்குத் தங்களை உட்படுத்தி, அதற்கே உரிய மனநிலையுடன் நிறைவேற்றினால் அது ஏற்படுத்தும் மாற்றங்களுக்கு நிச்சயமாக உட்படுவார். அல்லாஹ் கூறுகிறான்.

"தொழுகையை நிலைநிறுத்துங்கள். நிச்சயமாக தொழுகை மானக்கேடானவற்றிலிருந்தும் பாவங்களிலிருந்தும் தடுக்கும்." (அல்அன்கபூத்: 45)

3. அபிவிருத்தியின் அடிப்படைச் செயலான தீயது விலக்கலும் நன்மையை வளர்த்தலும்

ஒரு சமூகத்தின் முன்னேற்றம் அபிவிருத்தி அந்த சமூகம் எதிர்கொள்ளும் அனாச்சாரங்களையும் அறிவீனங்களையும் களைந்து மக்களின் பாதுகாப்பையும் புத்தூக்கத்தையும் மேம் படுத்துவதிலேயே தங்கியுள்ளது. அந்த சிந்தனையை, அதனை செயலுருப் பெறச் செய்யும் உத்வேகத்தையும் தொழுகை வழங்கு கிறது.

"சுஐபே! தொழுகைதானா உம்மை தடுக்கிறது? எங்களது மூதாதையர் வணங்கி வந்ததை வணங்குவதிலிருந்தும் நாங்கள் விரும்பியது போல் உழைப்பதிலிருந்தும்..." (ஹூத்: 87)

இறை எண்ணம் மனதில் குடிகொண்டிருக்கும் ஒருவர் அசத்தி யத்தையும் அனாச்சாரத்தையும் வெறுப்பவராக இருப்பார். அதுபோல் மனிதர்களுக்கு அநியாயம் இழைக்கப்படுவதை சகித் துக் கொள்ள மாட்டார். இதனால் தீயதைத் தட்டிக் கேட்பதும் மனிதர்களின் பாதுகாப்பையும் அபிவிருத்தியையும் உறுதி செய்வ தும் தங்களின் தார்மிகப் பொறுப்பாக ஆக்கிக் கொள்வார்கள். இவர்களால் சமூகம் செழித்தோங்கும்.

4. வாழ்க்கைத் தேவைகள், பிரச்சினைகளுக்கு பரிகாரம்

மனித வாழ்வு சோதனைகள் நிறைந்தது. பிரயத்தனங்களையும் போராட்டங்களையும் வேண்டிநிற்பது. இதனைத் தீர்ப்பதில்

அவன் தனக்கு மேலுள்ள ஒன்றில் தங்கியிருக்கும் தேவை அவனுக் குத் தவிர்க்க முடியாது. இதற்குப் பரிகாரம் இல்லாதபோது அவன் கவலையில் தோய்ந்து விடுகிறான். விரக்தியின் விளிம்புக்கே சென்று விடுகிறான். இதற்கான காத்திரமான தீர்வை தொழுகை வழங்குகிறது. அல்லாஹ் கூறுகிறான்:

"ஈமான் கொண்டவர்களே! தொழுகையைக் கொண்டும் பொறு மையைக் கொண்டும் உதவி தேடுங்கள்." (அல்பகரா: 45)

ரஸூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள். "ஓர் அடியான் சுஜூதில் தனது எஜமானை மிகவும் நெருங்கி இருக்கிறான். அந்த வேளையில் தனது தேவைகளைக் கேட்கட்டும்."

மனிதர்களின் வாழ்வை தன் கையில் வைத்திருக்கும் எஜமான னிடமே உதவி கேட்டு தீர்வைப் பெற அவனுக்குக் கிடைத்த அரிய வாய்ப்புதான் தொழுகை. தனது தேவைகளுக்கும் பிரச்சினை களுக்கும் தீர்வு இருக்கிறது என்ற நம்பிக்கை அவனை தன்னம் பிக்கையோடும் விடாமுயற்சியோடும் வாழ்க்கையைத் தொடர வழிசெய்கிறது.

5. எந்நிலையிலும் திருப்தி காணும் உலகின் உச்ச அடைவு

வாழ்க்கையில் மனிதன் எதிர்பார்ப்பதும் தவிர்க்க முடியாதது மான விடயம் திருப்தி. எந்த முயற்சியில் ஈடுபட்டாலும் இறுதி யாக அவன் எதிர்பார்ப்பது இதனைத்தான். அதை வைத்தே தனது முயற்சி வெற்றியா, தோல்வியா என தீர்மானிக்கின்றான். அது சிலபோது இருந்து பலபோது இல்லாத நிலை காணப்பட்டால், அந்த வாழ்க்கை பயன் தரக்கூடியதாக, வெற்றியளிக்கக் கூடியதாக இருக்க மாட்டாது. இழப்பைக் கண்டால் கவலையின் எல்லைக் குச் செல்வான். அதுவும் அவனுக்குக் கேடுதான். அடைவைக் கண்டால் புகழ், ஆசை, பெருமை, ஆணவம் இவற்றின் பால் இட் டுச் செல்லப்படுவான். இதுவும் அவனுக்குக் கேடாகவே அமையும். இங்கு நாம் திருப்தி எனக் கருதுவது சந்தோசத்திலும் துக்கத் திலும் ஒரே மனநிலையில் காட்சியளிப்பது. இதுதான்

அவரின் வாழ்க்கைக்குப் பயனுள்ளதாக இருக்க முடியும். இதுவே உலகத்தில் மனிதன் அடையும் உன்னதமான அருட் பாக்கியமாகும். இதனை ஓர் உண்மையான தொழுகையாளியே பெற்றுக் கொள்ள முடியும். அல்குர்ஆன் கூறுகிறது:

“நிச்சயமாக மனிதன் பதற்றக்காரனாகப் படைக்கப்பட்டுள்ளான். அவனுக்கு ஒரு தீங்கு ஏற்பட்டால் துவண்டு விடுகிறான். நன்மை ஏற்பட்டால் கருமியாக மாறிவிடுகிறான், தொழுகையாளிகளைத் தவிர.” (மஆரிஜ் 19-22)

தொழுகையாளிகள் உலகில் அடையும் இந்தப் பேறு அவர்களின் மறுமை வாழ்வின் கட்டுச்சாதமாக அமைகின்றது.

6. “(ஆனால், அந்நாளில் நல்லடியார்களிடம்) சாந்தியடைந்த ஆத்மாவே! நீ உன்னுடைய இறைவன்பால் திருப்தி அடைந்த நிலையிலும் (அவன்) உன்மீது திருப்தியடைந்த நிலையிலும் மீளுவாயாக. என் நல்லடியார்களில் சேர்ந்துகொள்வாயாக மேலும், நீ என் சுவர்க்கத்தில் பிரவேசிப்பாயாக (என்று இறைவன் கூறுவான்).” (அல்பஜ்ர் 89: 27-30)

கூட்டுத் தொழுகை ஏற்படுத்தும் வியக்கத்தக்க மாற்றங்கள்

❖ ***சமூக வாழ்வின் ஆரோக்கியத்தின் அச்சாணியாக விளங்குவது சமத்துவம்.***

கூட்டுத் தொழுகையில் தொடராக பங்கேற்கும் ஒருவர் அடுத்த சகோதரரோடு கால் சேர்த்து, தோள் சேர்த்து, அணி குழம்பாமல், முன்பு வந்தவருக்கு முன்னுரிமை வழங்கி எல்லோரையும் சமமாகக் கருதி பங்கு கொள்ள வேண்டும். தனக்கு முன்னால் தன்னிடம் வேலை செய்பவர் நிற்கலாம். தன்னோடு கால் சேர்த்து, தோள் சேர்த்து ஒரு பரம ஏழை நிற்கலாம். இவை அனைத்தையும் மனப்பூர்வமாக ஏற்று கூட்டுத் தொழுகையில் பங்கேற்க வேண்டும். இந்தப் பயிற்சி அடுத்தவர் பற்றிய சிந்தனையை சீர்செய்வதுடன், காலப்போக்கில் அடுத்தவர் எந்தப் பின்னணியைக் கொண்டிருந்தாலும்

அவரை ஏற்று, அங்கீகரித்து, தோழமை கொள்ளச் செய்யும். இத்தகைய ஒரு நடைமுறையை வேறு எங்கும் காண முடியாது.

- ***சமூக வளர்ச்சியின் அடிப்படை கட்டுக்கோப்பு. அதனை அழகாக பயிற்றுவிக்கின்றது கூட்டுத் தொழுகை.***

அதான் என்ற அழைப்புக்கு ஒரே நேரத்தில் குறித்த பகுதி மக்கள் பதிலளிக்கின்றனர். தொழுகையை நிலைநாட்டும் (இகாமத்) அழைப்பை எதிர்பார்த்துக் காத்திருக்கும் அவர்கள், அந்த அழைப்பு அல்லாத வேறு ஒரு தொழுகையில் ஈடுபட்டிருந் தாலும் அதனைத் தவிர்த்து அழைப்புக்கு பதிலளிப்பார்கள். தலைமை வழங்குபவர் ஏதாவது காரணத்தால் தாமதித்தால் அதற்காகப் பின்தொடர்பவர்கள் காத்திருப்பது கடமையாகும். அவரின் வழிநடத்தலை அச்சொட்டாகப் பின்தொடர வேண் டும். அவரை முந்துவதும் அளவு மீறி பிந்துவதும் தடுக்கப் பட்டுள்ளது. பின்தொடர்பவர்களின் நிலை அறிந்து தலை மையை வழங்குவது இமாமின் பொறுப்பாகும். இவ்வாறு நாள்தோறும் பயிற்சியளிக்கப்படுகிறது. தலைமை வழங்கும் இமாம் தன்னைப் பின்தொடரும் மஃமூம்களிடம் ஆளுமை செலுத்துபவராக, அறிவு, அனுபவத்தில் தேர்ந்தவராக இருக்க வேண்டும் என மார்க்கம் எதிர்பார்க்கிறது. இந்த தகைமைகள் தொழுகை போன்று, பின்தொடர்பவர்களின் வாழ்க்கையிலும் வழிகாட்டல் வழங்கி சமூக மேம்பாட்டின் அச்சாணியாக திகழ வேண்டும் என்பதே ஷரீஆவும் ஸீறாவும் கற்றுத்தரும் பாடமா கும்.

- ***அறிமுகம், தொடர்பாடல், தோள் கொடுப்பு***

திரும்பத் திரும்ப சந்திப்பவர்கள் அறிமுகமாவதும் அது நேர் மறையாக அமையும்போது நட்பை வளர்த்துக் கொள்வதும் இயல்பானது. ஒரே நோக்கத்திற்காக தினந்தோறும், கூடியது ஐந்து தடவைகள் ஒன்றுகூடுபவர்கள் நிச்சயமாக சிநேகம் கொள்வார்கள. சமூகமளிக்காத போது விசாரிப்பதும்

சுகதுக்கங்களில் பங்கேற்பதும் இயல்பாக மாறும். வாழ்க்கைப் பிரச்சினைகளில் சிக்கியவர்கள், நீண்ட துயரில் வீழ்ந்தவர்கள் விடயங்களை தங்களுக்கு மத்தியில் கலந்துரையாடும் வாய்ப்பு கள் அதிகம் ஏற்படும். அது நிச்சயமாக தோள் கொடுப்பதற்கான கூட்டு முயற்சியாகப் பரிணமிக்கும்.

❖ **நேர முகாமைத்துவம்**

தொழுகை வாழ்க்கையுடன் இரண்டறக் கலந்தது. அது தொழுபவரின் மனப்பாங்கிலும் நடத்தையிலும் செல்வாக்குச் செலுத்துவது போன்று, வாழ்க்கையிலும் தாக்கம் செலுத்து கின்றது. தொழுகை பற்றி ஒரு முஃமினின் பார்வை எத்தகை யது என்றால், எஜமானின் அழைப்பு எப்பொழுது வரும் என்று தொழுகை அவரை எதிர்பார்த்திருக்கச் செய்யும். அவர் நாளொன்றுக்கு ஐந்து விடுத்தம் அழைப்பொலியை எதிர் பார்த்து தனது பணிகளை அமைத்துக் கொள்வார். உரிய நேரத்தில் நிறைவு செய்வதில் கண்டிப்பாக இருப்பார். இவ்வாறு ஒரு நாளைக்கு ஐந்து முறை அழைக்கின்றபோதும் தயார் நிலையில் இருப்பது, தனது அன்றாடப் பணிகளைத் திட்ட மிட்டு ஒழுங்கமைத்துக் கொள்ள வழிசெய்யும். இதன் மறுபக் கம் அவரின் பணிகள் உரிய நேரத்தில் நிகழ்வதை அவர் பழக்கப் படுத்திக் கொள்ள முயற்சிப்பார். இதனால் அவரின் செயல்கள் நேர முகாமைத்துவம் செய்யப்படும்.

இத்தனை மாற்றங்களையும் கற்றுத் தருவது அல்குர்ஆனும் சுன்னாவும் ஸீறாவுமாகும். இதற்கு மேல் நம்பகத்தன்மை ஒன்று இருக்க முடியாது. ஆகவே, தொழுகை எனும் உன்னத செற்பாட்டின் பயன்பாட்டைப் பெற்ற ஒரு தனிமனிதன் அல்லது சமூகம் எத்தனை உயர்வைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதை உணரக் கடமைப்பட்டுள்ளோம்.

7. மறுமை வெற்றி

மறுமையில் அனைத்து செயல்களுக்கும் கணக்குக் கொடுக்க வேண்டும். உலகில் தொழுகையாளியின் வாழ்வின் அனைத்து

விடயங்களும் சீர்செய்யப்படுகிறது. சிறுபாவங்களை அவரின் தொழுகை அழித்து விடுகிறது. பெரிய பாவங்களை நெருங்க விடாமல் தடுக்கிறது. வாழ்வின் அனைத்து செயல்களையும் கண்காணித்து சீரமைக்கிறது. இதனால் மறுமையில் அவருடைய தொழுகை பற்றிய விசாரணையில் வெற்றி பெற்றுவிட்டால் அவருடைய அனைத்து செயல்களும் சரியாகிவிடுகிறது. ரஸூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "மறுமையில் அடியானிடம் முதலில் கேட்கும் கேள்வி தொழுகையைப்பற்றியதாகும். அது சரியானால் அனைத்தும் சரியாகிவிடும்."

தங்களைத் தகைமைப்படுத்திக் கொள்வதற்கான ஆலோசனை: 6

1. **தொழுகையின் நோக்கம் அது வாழ்க்கையில் ஏற்படுத்த இருக்கும் மாற்றங்கள் பற்றிய அறிவும் அதை அடைவதில் ஆர்வமும் எப்படி இருக்கிறது?**
2. **எனது தொழுகை என்னை மாற்றும் விடயத்தில் எவ்வாறு அமைந் துள்ளது?**
3. **சமூக மாற்றத்தில் சுயமாகப் பங்கேற்கும் ஆர்வம் என்னிடம் காணப் படுகின்றதா என்பதை அவதானியுங்கள்.**

5. பார்வையில் சீர்திருத்தம் தேவை

- கடமை, கட்டாயம், பொறுப்பு என்ற நிலைக்கு மாறியுள்ள இன்றைய தொழுகை.

  உள்ளங்களையும் எண்ணங்களையும் அறிந்தவன் அல்லாஹ். அவனே அவர்களுக்கான கூலியையும் வழங்குபவன். ஆனால் அறிவுபூர்வமாக செயற்படுவதும் குறைகளை இனங்கண்டு சீர்திருத்திக் கொள்வதும் கட்டாயம் என்ற வகையில், இன்றைய தொழுகையாளிகளையும் தொழுகையையும் உற்றுநோக்கி னால், தொழுகை பலபோது பாரம்பரியம், சடங்கு என்ற வகை யில் அதன் தோற்றம் மாத்திரம் எஞ்சியிருக்கும் நிலையைக் காண முடியும். அவதானம் இருக்கிறது என்று கூறினால் தொழுகையின் நடைமுறையில் சற்று இருப்பதாக கூற முடியும்.

எப்படியோ தோற்றத்தில் மாத்திரம் கரிசனை செலுத்தும் நிலையே பெரும்பாலானவர்களிடம் தொடர்கிறது.

இன்னும் சற்று ஆழ்ந்து நோக்கினால், நிறைவேற்றி விட்டால் கடமை முடிந்து விட்டது என்ற எண்ணம், நிறைவேறினால் ஒரு பெருமூச்சு, வேலை சோலிகளில் இருக்கும்போது 'அதான்' ஒலித்தால் அதனை செவிமடுக்கும் எதிர்மறையான மனநிலை, இப்பொழுதுதானே தொழுதோம் என்ற எண்ணம், பயணம் போன்ற காரணிகளால் தாமதமாக தொழும்போது உணரப் படும் அசௌகரியம், விரைவாக முடித்துக் கொள்வதை வழக்க மாக்கிக் கொள்வது… இவ்வாறான நிலை பொதுத்தன்மையாக மாறிவரும் அபாயம் அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகிறது. அது போல் தொழுவது கட்டாயமானது. அது ஒரு பொறுப்பு எவ்வாறாவது நிறைவேற்றிவிட வேண்டும் என்ற பதிவும் காணப்படுகிறது. இது தொழுகையை சுமையாகப் பார்க்கும் நிலையைத் தோற்றுவிக்கும் என்பதுதான் உண்மை.

எல்லோரும் இதே நிலையில்தான் இருக்கின்றார்கள் எனக் கூற முடியாது. ஆனால், கணிசமான அளவு இந்தப் பாதிப்பு காணப் படுகிறது என்றே கூற வேண்டும். ஏனென்றால், சமூகத்தில் காணப்படும் ஒழுங்கீனங்களும் குளறுபடிகளும் பாவங்களின் அதிகரிப்பும் இளைஞர்களின் பொறுப்பற்ற நடத்தையும் இதனை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

இன்னுமோர் அவதானமும் உள்ளது. தொழுவதற்கான பருவ வயதை அடைவதும் தொழுகையில் ஈடுபடுவதும் பொதுவாக எவ்வாறான வழக்கம் என்றால், சிறுவயதில் பெற்றாரைப் பார்த்து தொழுகையைப் பழகி அவ்வப்போது அதன் ஓதல் களை மனனம் செய்து, தொழுகையில் ஈடுபடும் ஒரு பாரம் பரியம் சமூகத்தில் காணப்படுகிறது. அதாவது தொழுகையின் நடைமுறை தொடர்பான பர்ளுகள், சுன்னத்துகளை தெரிந் திருத்தல். தொழுகையை கற்றுத் தேர்ந்த ஒன்றாக அல்லாமல், பார்த்துப் பழகிய ஒன்றாக ஆக்கியிருப்பது தொழுகையின்

பெறுமானம், மார்க்கத்தில் அதன் அந்தஸ்து, அதன் நோக்கம், அதனால் அடையப் பெற வேண்டிய மாற்றங்கள் பற்றியெல்லாம் கண்டும் காணாத நிலையே தொடர்கிறது. தொழுகை ஒரு சடங்காக, சம்பிரதாயமாக மாறியிருப்பதற்கு இது ஓர் அடிப்படைக் காரணமாகும். இதன் விளைவை அல்குர்ஆன் இப்படிக் கூறுகிறது:

"அவர்களுக்குப் பிறகு அவர்களின் பிற்சந்ததிகளாகத் தோன்றினார்கள். அவர்கள் தொழுகையை வீணாக்கினார்கள்; மன இச்சைகளைப் பின்பற்றினார்கள். அத்தகையவர்கள் தங்கள் தீவினையை சந்திப்பார்கள்." (மர்யம்: 59)

இத்தகைய தொழுகையாளிகள் தொழுகை ஒரு தனிப்பட்ட காரியம், அதனை அவ்வப்போது சென்று நிறைவேற்றிவிட்டால் போதுமானது, கடமை முடிந்துவிட வேண்டும் என்பதில் தான் கவனம் செலுத்துகிறார்கள். வாழ்க்கையோடு இணைத்துப் பார்ப்பதும் அது ஏற்படுத்தும் மாற்றங்களில் கவனம் செலுத்துவதும் அதன் பெறுமானத்தைப் பேணி நடப்பதும் அவசியமற்றது என்ற நிலை வளர்ந்திருப்பதைப் பார்க்கிறோம்.

- தொழுகை எனக்குக் கிடைத்த வரம், எனது உரிமை, எனது தவிர்க்க முடியாத தேவை

தொழுகை பற்றிய பார்வை, மனநிலையை இப்படி சிந்தித்துப் பாருங்கள். மனிதன் இறைவனின் சிரேஷ்டமான படைப்பு. அவனுக்கு அறிவு, ஆன்மா எனும் சிறப்பு தகைமைகள் வழங்கப்பட்டு, தனது வாழ்வை தானே ஒழுங்கமைத்துக் கொள்ள வேண்டும் என்ற பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளது. அதேவேளை உடல் சார்ந்த வாழ்க்கைத் தேவைகள், மனிதனின் படைப்பின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான வழிகாட்டல் இவற்றில் படைப்பாளனில் தங்கியிருக்கின்றன. எனவே, இறைவனை சார்ந்திருப்பது அவனது வாழ்வில் இன்றியமையாதது.

தன்னைப் படைத்தவனை சார்ந்திருப்பதற்கு இன்னுமொரு தேவையும் அவனுக்கு உண்டு. மனிதன் மன தைரியத்தோடு,

சலனம், சபலம் இல்லாமல், திருப்தியும் அமைதியும் பெற்று எதிலும் முன்வைத்த காலை பின்வைக்காமல் வாழ்க்கையைத் தொடர வேண்டும். இதற்கு அவன் பெற்றிருக்க வேண்டிய கட்டுச்சாதம் இறை உணர்வு (தக்வா). இதனை அல்லாஹ்வுடன் உள்ள உறவே வளர்க்க முடியும்.

...தவிர, எவர் அல்லாஹ்வுக்கு அஞ்சி நடக்கின்றாரோ, அவருக்கு அவன் (தக்க ஒரு) வழியை உண்டாக்குவான். அ(த்தகைய)வருக்கு, அவர் எண்ணியிராத புறத்திலிருந்து, அவன் உணவு (வசதி)களை அளிக்கிறான். மேலும், எவர், அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டு அவனை முற்றிலும் சார்ந்திருக்கிறாரோ, அவருக்கு அவன் போதுமானவன். நிச்சயமாக அல்லாஹ் தன் காரியத்தை நிறைவாக்குபவன் - திண்ணமாக அல்லாஹ் ஒவ்வொரு பொருளுக்கும் ஓர் அளவை உண்டாக்கி வைத்திருக்கின்றான்.
(அத்தலாக் 65: 2,3)

ரஸூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள். "நீ எங்கிருந்தாலும் இறை எண்ணத்தோடு (தக்வா) இரு. தீமையைச் செய்தால் தொடர்ந்து நனமையைச் செய்வாயாக! அது தீமையை அழித்துவிடும். அழகிய குணத்துடன் மக்களுடன் பழகுவாயாக!" (அத்திர்மிதி)

மனிதனுக்குப் படைப்பாளனுடைய தேவை எத்தனை ஆழமானது என்பதைப் பின்வரும் பிரயோகம் உணர்த்துகிறது. "லா ஹவ்ல வலா குவ்வத இலா பில்லாஹ்" எந்த மாற்றங்களும் இல்லை, ஆற்றலும் இல்லை. இந்தப் பிரயோகத்தின்படி மனிதன் அலாஹ்வுடன் ஒப்பிடும்போது பூச்சிய நிலையிலேயே காணப்படுகிறான். தனக்குத் தேவையான அனைத்து விடயங்களிலும் அல்லாஹ்வைச் சார்ந்தவனாகவே இருக்கின்றான். இறைவனது தயவு இன்றி மனிதனுக்கு வாழ்வு என்பது இல்லை. அவனே அனைத்தும். ஆகவே இறைவனது உதவியை அவனது அன்பு கலந்ததாகப் பெற்றுக் கொள்வதற்கு எஜமானனோடு போற்றத்தக்க உறவு என்பது கிடைத்தற்கரிய பாக்கியமாகும். இந்தப் பாக்கியத்திற்கு வழிகோலும் சிரேஷ்டமான வழிதான் தொழுகை.

தொழுகை எனும் உரையாடலும் உறவாடலும் நமது வாழ்வின் அடிப்படை, நமக்குக் கிடைத்த கிடைத்தற்கரிய வாய்ப்பு, எமது உலக வாழ்வுக்கான பரிகாரம். அதனை எஜமானனே மனமுவந்து நமக்கு வழங்கியிருப்பது எத்தனை பெரிய பாக்கியம்! தோட்டத்தை விலை பேசியவனுக்கு அதற்கான விலையாக அவனை விருந்தாளி யாக ஆக்கிய கதை போல் உள்ளது எஜமானே அடியானுக்கு தனது உறவுக்கான வாய்ப்பை வழங்கியிப்பது.

ஒவ்வொரு செயலின் தூய்மைக்கும் மறுமை விமோசனத்திற்கு மான கட்டுச்சாதம் 'தக்வா'. அதனை அழகாக அள்ளி வழங்கும் தொழுகை அவசியம் என்பதனாலேயே ஒரு முஸ்லிமுக்கு தொழுகை கட்டாயமாக்கப்பட்டுள்ளது வாழ்க்கைப் போராட்டத் தின் உச்சநிலையின்போதே இறைஞாபகம் சக்திவாய்ந்ததாக இருக்க வேண்டும். எனவே, கஷ்டங்களை எதிர்கொள்ளும்போது, போராட்டத்தின்போது அதற்கே உரிய முறையில் தொழுகை நிறைவேற்றப்பட வேண்டும் என வேண்டப்பட்டுள்ளது.

மனிதனின் கண்ணியத்தையும் அவனது செயலின் ஸ்திரத் தையும் மறுமை நற்பேற்றையும் பாதுகாத்து, வளப்படுத்தவே தொழுகையோடு ஓர் அடியான் இத்தனை பலமாக இணைத்து வைக்கப்பட்டுள்ளான் என்பதனை ஒருவர் புரிந்து கொண்டால் அவரின் தொழுகை பற்றிய பார்வை பரந்ததாக விரிந்ததாக மாறி விடும். இந்தப் பார்வையின் இயல்பான விளைவுதான் தனக்குத் தானே கடமையாக்கிக் கொள்வது. தனக்குத் தானே ஏற்றுக்கொள் ளும் ஒரு செயற்பாட்டில் அவனது ஈடுபாடு காத்திரமாக அமையும். காரணம், அவனது சிந்தனை அதனை ஏற்றுக்கொண்டுள்ளது, அவனது உள்ளம் அதில் இன்பம் காண்கிறது. ஒரு செயலின் காத்திர மான, அழகிய ஈடுபாட்டுக்கு இந்த மனோநிலையே அடிப்படை. இப்படி புரிந்து கொள்வதுதான் அதன் பெறுமானத்தைப் பாது காத்து அதன் பயன்பாட்டை முழுமை பெற வழிசெய்யும்.

தான் விரும்பும் விடயத்தில் அடுத்தவர்கள் மெச்சும் அளவு ஈடுபாடு ஏற்படுவது இயல்பு. அத்தகைய ஈடுபாடு தொழுகை

யிலும் வெளிப்படும். இது அதன் அடைவை உச்ச நிலைக்குக் கொண்டு செல்லும். எனவே, எந்த ஒரு விடயமும் அதன் ஈடுபாடு எவ்வாறு அமையவிருக்கிறது என்பதை அது பற்றிய பார்வை, கண்ணோட்டமே தீர்மானிக்கிறது. அதனால் தொழுகை பற்றிய சரியான பார்வையைப் பெற்றிருப்பது அவசியமாகும்.

தங்களைத் தகைமைப்படுத்திக் கொள்வதற்கான ஆலோசனை: 7

1. **பார்வையை சரிபார்த்துக் கொள்ளுங்கள். சரியான பார்வை வெற்றி யைத் தரும். பிழையான பார்வை இழிவையும் அழிவையும் தரும் என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.**
2. **தொழுகை பற்றி தனது மனநிலை எவ்வாறு உள்ளது என்பதை பரிசீலனை செய்வது உடனடித் தேவை என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.**
3. **அதில் குளறுபடிகள், தளம்பல்கள் தென்பட்டால் அதனை குர்ஆன், சுன்னாவுடன் உரசிப் பார்த்துக் கொள்ளுங்கள்.**
4. **சரியான பார்வை உள்ளத்தை எவ்வளவு உயரத்திற்குக் கொண்டு செல்கிறது என்பதை உணர்ந்து செயற்படுங்கள்.**
5. **அல்லாஹ் தோற்றத்தைப் பார்ப்பதில்லை. உங்கள் உள்ளத்தையும் செயலையுமே பார்க்கிறான் என்பதில் கவனமாக இருங்கள்.**

06.அல்லாஹ் சுபஹானஹுவதஆலா ரஸூல் [ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம்] ஸஹாபாக்கள் பார்வையில் தொழுகை

✓ *அடியார்கள் சந்திப்பதை எதிர்பார்க்கிறான் எஜமான்*

மனிதன் உருவான காலம் தொட்டு தொழுகை கடைப்பிடிக் கப்பட்டு வந்துள்ளது. அனைத்து நபிமார்களும் இறைவனோடு உரையாடும் உறவாடும் வாய்ப்பை அடியார்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதில் கவனம் செலுத்தி வந்துள்ளனர். ரஸூல் (ஸல்)

அவர்களின் போதனைகளிலும் தொழுகை எனும் இறை சந்திப்பு முன்னுரிமை பெற்றிருப்பதை அவதானிக்க முடியும். அவர்களி டம் அமல்களில் சிறந்தது எது என கேட்கப்பட்டது. அவர்கள் கூறினார்கள், “தொழுகையை அதன் நேரத்தில் தொழுவதாகும்” என்று. வாழ்வின் எந்த நிலையிலும் அறுபடாத தொடர்பு தொழுகையோடு ஏற்படுத்தப்பட்டிருப்பதை நாம் புரிந்து வைத் திருக்கின்றோம்.

ஒருவர் இஸ்லாத்தில் இணையும் தருணத்தில் இருந்தே இறைவனோடு இணைத்துவைக்கும் ஏற்பாடும் நடைபெறுகிறது. எங்கேயும் எப்போதும் எந்நிலையிலும் இறைவனோடு தொடர்பு கொள்ளும் வாய்ப்பு அடியார்களுக்கு உருவாக்கி கொடுக்கப்பட் டுள்ளது. இவ்வாறு தொழுகை ஒரு முஃமினுடன் இரண்டறக் கலந்திருப்பதைக் காண முடியும்.

எல்லாவற்றுக்கும் மேலாக அல்லாஹ் தனது அடியாரை தன்னளவில் அழைத்தபோது (மிஃறாஜ்) தனது அன்புக்குரிய அடியாருக்கு விஷேடமான ஒன்றாக வழங்கியது தொழுகை. இதிலிருந்து உலக வாழ்வில் அடியார்களுக்குக் கிடைக்கப்பெறும் அருட்பேறுகளில் சிரேஷ்டமானதும் மிகச் சிறப்பு வாய்ந்ததுமான அருட்பேறு தொழுகை என்பதை நாம் விளங்க முடியும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வோடு உரையாடிய பாக்கியமே மிஃறாஜ். அந்த கிடைத்தற்கரிய அருளையே அல்லாஹ் தொழுகை என்னும் பெயரில் அடியார்களுக்கும் வழங்கியுள்ளான். வாழ்க்கை வழிகாட்டல் அனைத்தும் வஹி மூலம் பூமியில் வைத்தே கடமை யாக்கப்பட்டது. தொழுகை விண்ணுலக யாத்திரையின்போது அர்ஷில் வைத்து வழங்கப்பட்டது. இந்த வகையில் தொழுகைக் குத் தனித்துவமான இடம் வழங்கப்பட்டிருப்பதை விளங்க முடி யும்.

ஒரு கூற்று “வாழ்வில் எல்லாப் பாக்கியங்களும் கிடைத்து அல்லாஹ் என்ற இறை நம்பிக்கை கிடைக்கா விட்டால் அவர் எதுவும் பெறாதவர் போன்றவராவார். வாழ்வில் எதுவும்

கிடைக்கா விட்டாலும் அவர் அல்லாஹ் என்ற நம்பிக்கையைப் பெற்றிருந்தால் உலகில் அனைத்தும் கிடைத்தவர் போலாவார்." இத்தகைய பேற்றை தினந்தோறும் அடியானுக்கு சுவைக்க வைப்பதுதான் தொழுகையாகும்.

✓ ரஸூல் (ஸல்) அவர்களின் கண்களைக் குளிரச் செய்த தொழுகை

ரஸூல் (ஸல்) அவர்கள் மகிழ்ச்சி மேலிட்டால் தொழுவார்கள்; மனக் கிலேசங்களுக்கு உள்ளானால் தொழுகைக்குச் செல்வார் கள்; காலநிலை மாற்றம் ஏற்பட்டால் தொழுகை மூலமே வேண்டு வார்கள்; பயணத்தை தொழுகை மூலமே ஆரம்பிப்பார்கள்; பயணத் திலிருந்து திரும்பி வந்தால் தொழுதுவிட்டே வீடு செல்வார்கள்; தேவைகள் ஏற்பட்டால் தொழுகை மூலமே பிரார்த்தனை செய்வார் கள். இவை அல்லாமல் "வாரிதான" வழமையில் உள்ள முன் பின் நபிலான தொழுகைகள் 20 ரகஅத்துகளுக்கு மேல் ழுஹா நேரத் தில் பல ரக்அத்துகள், தவறாது தொழுது வந்த நீண்ட நேரத் தொழுகையான தஹஜ்ஜுத் தொழுகை... இவ்வாறு வாழ்நாள் முழுவதும் தொழுகையைத்தான் செய்தார்களோ எனக் கூறும் அளவுக்கு ஈடுபாடு காட்டினார்கள். அதற்கு எடுத்துக் கொண்ட நேரம், அதில் ஈடுபாடு கொண்ட உள நிலைகள் பற்றி எம்மால் அளவிட முடியாது.

இரவு நேர தொழுகையை எவ்வாறு நிறைவேற்றினார்கள் என்பதை ஆயிஷா (ரழி) அன்ஹா அவர்கள் கூறும்போது "நான்கு ரக்அத்துகள் தொழுவார்கள். அதன் ஆழ, அகலம் பற்றி கேட்க வேண்டாம்" என்பார்கள். "முன் பின் பாவங்கள் மன்னிக்கப்பட்ட நீங்கள், கால்கள் வீங்கும் அளவு தொழுகிறீர்களே!" எனக் கேட்டால் "நான் நன்றியுள்ள அடியானாக இருக்க வேண்டாமா?" எனக் கேட்பார்கள். தனது மகிழ்ச்சிக்கும் அமைதிக்கும் திருப்திக்கும் ஏக வழியாகத் தொழுகையைக் கண்டார்கள்.

"எனது கண்குளிர்ச்சி தொழுகையில்தான் ஆக்கப்பட்டிருக் கிறது" என்று நபியவர்கள் கூறுவார்கள். வீட்டில் மனைவி,

மக்களோடு இருப்பார்கள். அதான் ஒலி கேட்டால் அவ்விடத்தில் ஒருவரும் இல்லாதது போல் எழுந்து சென்றுவிடுவார்கள். அவர்கள் தொழுகையுடன் கொண்டிருந்த உறவு ஆச்சரியமானது. அதில் அவர்கள் இன்பம் கண்டார்கள். தேவைகளுக்கு பரிகாரம் கண்டார்கள்; உள்ளத்திற்கு அமைதி கண்டார்கள். இவ்வாறுதான் ரஸூல் (ஸல்) அவர்களும் தொழுகையும் காணப்பட்டது.

✓ நபித் தோழர்களை வரலாறு பேசும் மனிதர்களாக மாற்றியது தொழுகை

தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களை அணுஅணுவாக பின்பற்றியவர்கள்தான் அவர்களின் தோழர்களான ஸஹாபாக்கள். தூதர் (ஸல்) அவர்கள் தொழுகையில் எத்தகைய ஈடுபாடு கொண்டிருக்கிறார்கள், அதனால் அவர்கள் காணும் அமைதியும் இன்பமும் எத்தகையது என்பதை அருகிலிருந்து அனுபவித்தவர்கள். உடல் ரீதியாக மாத்திரமன்றி சிந்தனையாலும் இலட்சியத்தாலும் அவரோடு இருந்தவர்கள்தான் ஸஹாபாக்கள். தங்களது இலட்சிய வாழ்க்கையில் ரஸூல் (ஸல்) அவர்கள் போல் நிலைகுலையாமையையும் பாதுகாப்பையும் தங்களுக்கு இன்றியமையாத தேவையாகக் கண்டார்கள். தங்களது தலைவர் எதில் தீர்வைத் தேடினார்களோ அதனையே தங்களது வழியாகவும் எடுத்துக் கொண்டார்கள். அவ்வாறே அவர்கள் பயிற்றவும்பட்டார்கள்.

அல்லாஹ்வுடன் உரையாடுவதிலும் உறவாடுவதிலும் தங்களது தலைமையை அச்சொட்டாகப் பின்தொடர்ந்தார்கள் என்பதனை இரட்சகன் சான்றுபகர்கிறான்.

“நிச்சயமாக நீரும் உம்முடன் இருப்போரில் ஒரு கூட்டத்தாரும் இரவில் மூன்றில் இரு பாகங்களுக்குச் சமீபமாகவோ, இன்னும் அதில் பாதியோ இன்னும் இதில் மூன்றில் ஒரு பாகத்திலோ (வணக்கத்திற்காக) நிற்கிறீர்கள் என்பதை உம்முடைய இறைவன் நிச்சயமாக அறிவான்.” (அல்முஸ்ஸம்மில்: 20)

“அல்லாஹ்விடமிருந்து (அவன்) அருளையும் (அவனுடைய)

திருப் பொருத்தத்தையும் விரும்பி வேண்டுபவர்களாகவும் அவர்களை நீர் காண்பீர். அவர்களுடைய அடையாளமாவது: அவர்களுடைய முகங்களில் (நெற்றியில்) ஸுஜூதுடைய அடையாளமிருக்கும்." (அல்பத்ஹ்: 29)

தொழுகையில் ஸஹாபாக்களின் ஈடுபாடு தொடர்பாக ஏராளமான வியத்தகு சம்பவங்கள் காணப்படுகின்றன. பொதுவாக பலரும் அறிந்திருப்பதனாலும் விரிவஞ்சியும் தவிர்க்கிறோம். முத்தாய்ப்பாக அவர்கள் இரவுத் தொழுகையில் காட்டிய தீவிர ஈடுபாடு காரணமாக அவர்கள் அனுபவித்த சிரமங்களை அவதானித்த அல்லாஹ் அவர்களுக்கு தானே சலுகையை வழங்குவதை இறை வசனம் குறிப்பிடுகிறது.

"ஆகவே, அவன் உங்களுக்கு மன்னிப்பு அளித்து விட்டான். எனவே, நீங்கள் குர்ஆனில் உங்களுக்குச் சுலபமான அளவு ஓதுங்கள். (ஏனெனில்) நோயாளிகளும் அல்லாஹ்வின் அருளைத் தேடியவாறு பூமியில் செல்லும் வேறு சிலரும், அல்லாஹ்வின் பாதையில் போர் செய்யும் மற்றும் சிலரும், உங்களில் இருப்பார்கள் என்பதை அவன் அறிகிறான். ஆகவே, அதிலிருந்து உங்களுக்குச் சுலபமான அளவே ஓதுங்கள்." (முஸ்ஸம்மில்: 20)

ஸஹாபாக்கள் தொழுகையை வாழ்க்கையில் ஓர் அம்சமாகப் பார்க்கவில்லை. தொழுகையே வாழ்க்கையை தீர்மானிப்பதாகக் கண்டார்கள். வாழ்க்கையின் வெற்றி- தோல்வி அதிலேயே தங்கியிருப்பதாக விளங்கினார்கள். அந்த விளக்கமே அல்லாஹ் சான்று பகரும் அளவு, அல்லாஹ் சலுகை வழங்கும் அளவு வியக்கத்தக்க வகையில் ஈடுபாடு காட்டினார்கள்.

7. இரட்டை முகம் காட்டுவதிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள்.

வாழ்க்கையில் ஈடுபடும்போது ஒரு முகத்தையும் தொழுகையில் ஈடுபடும்போது இன்னுமொரு முகத்தையும் காட்டுவதைத் தவிர்க்க வேண்டும். வாழ்க்கையில் மனிதர்களோடு அவ்வாறான

தங்களைத் தகைமைப்படுத்திக் கொள்வதற்கான ஆலோசனை: 8

1. **அல்லாஹ் தந்ததை அவனுடைய விளக்கத்தில் விளங்க முயற்சி யுங்கள்.**
2. **வாழ்வதற்கு சடப் பொருட்கள் தேவை, அமைதிக்கு அல்லாஹ்வின் உறவு தேவை என்பதை வாழ்க்கையாக்குங்கள்.**
3. **வாழ்க்கையை இலட்சியமாகவும் கூலியை சுவனமாகவும் பெறுவதில் ரஸூல் (ஸல்) அவர்களையும் ஸஹாபாக்களையும் முன்மாதிரியாகக் கொள்ளுங்கள்.**

பழக்கத்தைக் கொண்டிருப்பதும் கூடாது. மனிதர்கள் ஏமாற முடியும். இறைவன் உள்ளத்தின் ஆழம்வரை நோட்டமிடுபவன். அவனிடம் ஏமாற்றம் என்ற ஒன்று கிடையாது என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

வாழ்க்கை விவகாரங்களில் இறை அவதானத்தை மறந்து அல்லது அதில் போதிய கவனம் இன்றி, தனது விருப்பத்திற்கும் சூழல் தாக்கங்களுக்கும் இசைவாக செயற்பட்டு, தொழுகையில் வந்து அல்லாஹ்வின் நினைவைத் தேடுவதாகும். அதாவது வாழ்க் கையில் பல மணி நேரம் ஒரு விடயத்தில் பங்கேற்பவர், இறைவனை நினைவுகூர்ந்து அதன் தாக்கம் காரணமாக, செயல்களை இறை உவப்புக்கு உகந்ததாக ஆக்கிக் கொள்வதைத் தவிர்த்து, இறை எண்ணத்தை மறந்து தன் விருப்பப்படி சரி பிழை பாராமல் தனக் கொரு நியாயத்தை வரவழைத்துக் கொண்டு செயற்பட்டால், அதில் பல மணிநேரம், பல நாட்கள் பழக்கப்பட்டால் நிச்சய மாக அவரது உள்ளம் இறைவனை மறந்திருப்பதில் இசைவாக்கம் அடையும். அத்தகைய உள்ளம் ஒரு சில நிமிடங்கள் தொழுகை யின்போது இறை ஞாபகத்தை நினைவில் கொண்டு வருவதற்கு சிரமப்படும். வலிந்துதான் கொண்டு வரமுடியும். அது எவ்வா றென்றால், ஒரு பந்தை நீரினுள் வைத்திருப்பது போன்றது. அதனைப் பிடித்துக் கொள்ள வேண்டும். விட்டால் வெளியில் சென்று விடும்.

அத்தகையவர்கள் வாழ்க்கை என்பது வேறு, தொழுகை என்பது

வேறு என்று கருதுகிறார்கள் போலும். உடைகள், வாகனம், உணவு இவற்றை வேறுபடுத்தி விரும்புவது போல் பாவிக்கலாம். ஆனால், தொழுகையையும் வாழ்க்கையையும் வெவ்வேறாக அமைத்துக் கொள்வது சாத்தியமில்லை. ஏனென்றால், இரண்டு விடயங்களிலும் அவனது உள்ளம்தான் அவனை இயக்குகிறது. வாழ்க்கையில் அவனை வழிநடத்திய உள்ளம்தான் தொழுகைக் கும் செல்கிறது. வாழ்க்கைக்கு ஓர் உள்ளத்தையும் தொழுகைக்கு இன்னுமோர் உள்ளத்தையும் அல்லாஹ் வழங்கவில்லை. அல்குர் ஆன் கூறுகிறது:

"எந்த மனிதனுடைய அகத்திலும் அல்லாஹ் இரண்டு இருதயங் களை(கல்பைன்) உண்டாக்கவில்லை." - (அஹ்ஸாப் 33: 4)

ஆகவே தொழுகையை உயிரோட்டமாக அமைத்துக் கொள்வ தற்கு, தொழுகையின் நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு அன்றாட செயல்களில் இறைவனை நினைவுகூருவதிலும் அவதா னம் இருக்க வேண்டும். அவ்வப்போது சறுக்கல்கள் இருக்க முடியும். இறை நினைவில்லாமல் செயற்பட்டு விட முடியும். ஆனால் அது பொதுவான தன்மையாகக் காணப்படக் கூடாது.

இவ்வாறு சிந்தித்துப் பாருங்கள். அதாவது, வாழ்க்கையில் இறை அவதானத்தை உணர்ந்து செயற்படும்போது, உள்ளம் பல்வேறு போராட்டங்களைச் சந்திக்கும். அவற்றைக் கச்சிதமாக எதிர்கொண்டே ஒரு சாலிஹான செயற்பாட்டை வெளிக் கொண ரும். இவ்வாறான நிலையில் உள்ளத்திற்கான கட்டுச்சாதம் தக்வா ஆகும். அதற்காக உள்ளம் ஏங்கிக் கொண்டிருக்கும். இது தொழுகையின் தேவையை உணர்த்தும்; அறிவும் மனமும் தொழுகையை எதிர்பார்க்கும். இப்பொழுது இறைவன்பால் அழைப்பு வந்தால் அதனை தனக்குக் கிடைத்த வாய்ப்பாகக் கருதி அதன்பால் உந்தப்படும். இந்த மனநிலையில் அல்லாஹ்வை முன்னோக்கினால் நிச்சயமாக இறை எண்ணத்தில் திளைத்திருக்க அது முன்னேற்பாடாக அமையும்.

இந்த உதாரணத்தை யோசித்துப் பாருங்கள். கட்சித் தொண்டர்

கள் தங்களது வேட்பாளருக்காக அழைப்பு விடுப்பதற்கு இரண்டு குழுவினர் வெவ்வேறு பிரதேசங்களுக்குச் செல்கின்றனர். அதில் ஒரு பிரிவினர் தங்களுக்கு ஏற்பட்ட எதிர்ப்புகளை எல்லாம் தாண்டி அழைப்பு விடுக்கின்றனர். அதனால் பல அசௌகரியங்களையும் சந்திக்கின்றனர். அப்பொழுதெல்லாம் பின்வாங்காமல் காரியத்தில் கண்ணாயிருக்கின்றனர். அடுத்த குழுவினர் அவர்களுடைய பகுதிக்கு சென்றார்கள். ஆனால் பிரசாரத்தை தவிர்த்து, கொடுத்த பணம், பொருள் சார்ந்த வசதிகளை எல்லாம் நன்றாக அனுபவித்து விட்டு திரும்புகின்றனர். வேட்பாளர் களநிலைவரங்களை அறிந்து கொள்ள அழைப்பு விடுப்பார் என்றால் யார் எதிர்பார்த்திருந்து செல்வார்கள், யார் அழைத்து விடுவாரோ என்று வெட்கித் தலைகுனிவார்கள் என்பதை சிந்தனை செய்துபாருங்கள்.

வாழ்க்கையில் இறைவிருப்பத்தைப் பின்பற்றுவதிலும் தீனை வளர்ப்பதிலும் கண்ணும் கருத்துமாக இருப்பவருக்கு தொழுகை இன்றியமையாத வரப்பிரசாதமாகும். இதுவே தொழுகையின் முகம். பொடுபோக்காக வாழ்வை அமைத்துக் கொண்டவர் தொழுகையின் தேவையை உணர்வது எப்படிப்போனாலும் கட்டாயம், நிர்ப்பந்தம், தவிர்க்க முடியாது என்பதற்காகத்தான் தொழுயை நோக்கிச் செல்வார். அங்கு அவர் பணிவையும் பயத்தையும் எட்டாக்கனியாகத்தான் காண்பார். இதுதான் இரட்டை முகம்.

தங்களைத் தகைமைப்படுத்திக் கொள்வதற்கான ஆலோசனை: 9

1. **வாழ்க்கையில் இறை எண்ணம் தொடர்பாக கவனம் செலுத்துங்கள்.**
2. **நீண்ட நேரம் தொடராக செயற்படும்போது இறை எண்ணம் இல்லாமல் இருப்பதை மாற்றிக் கொள்ளத் தேவையான ஆலோசனையைப் பெற்று பயிற்சி எடுத்துக் கொள்ளுங்கள்.**
3. **காலையில் பஜ்ருக்குப் பின் அன்றைய நாளின் வேலைகள் பற்றியும் அதில் இறை ஞாபகத்தின் தொடர்பு பற்றியும் கவனம் செலுத்துங்கள்.**
4. **காலைப் பொழுதில் இறை உதவிக்காக பிரார்த்தியுங்கள். "அல்லாஹும்ம ரஹ்மதக அர்ஜி வலா தகில்னீ இலா நப்ஸி தர்பத ஐனி வ அஸ்லிஹ் லி ஷஃனி குல்லஹு லாஇலாஹ இல்லா அன்த."**

அத்தியாயம்: 03

தொழுகை
நேரம் வரும்போது...

1. அல்லாஹ்வை நோக்கிய அழைப்பு அதான்

அழைப்பு, நினைவுபடுத்தல், ஞாபகமூட்டல் இவற்றுக்குப் பல்வேறு வழிமுறைகள் கையாளப்படுகின்றன. தொழுகைக்கான அழைப்பு தனித்துவம் வாய்ந்தது; காதுக்கு இனிமையானது; கருத்தாழம் மிக்கது. எல்லா அழைப்புகளும் போலல்லாது, அதற்கென்று பிரத்தியேக நடைமுறை காணப்படுகின்றது. அந்த நடைமுறை அடியானின் சிந்தனையில் தாக்கம் செலுத்தி நடத்தையை தூண்டும் வகையில் அமைந்திருப்பது அதன் விஷேட அம்சமாகும். இந்த ஒழுங்கு 14 நூற்றாண்டுகள் அணுவும் பிசகாமல் அப்படியே பேணப்பட்டு வருவது என்பது ஈண்டு குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

தொழுகைக்குரிய நேரம் வந்ததும் ஒவ்வொரு மஸ்ஜிதிலும் அதான் ஒலிக்க வேண்டும். அதனை செவியேற்பவர்கள் காது தாழ்த்த வேண்டும். அதனோடு முஅத்தின் கூறுவது போல் கூற வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்ட சுன்னாவாகும். "பாங்கை நீங்கள் செவியேற்றால் பாங்கு கூறுபவர் போல் நீங்களும்

கூறுங்கள்." (புஹாரி, முஸ்லிம்) அதானை செவியேற்கும்போது சில இடங்களில் பதிலளிக்க வேண்டும். அந்த பதில் தனது அடிமைத்தனத்தைப் பறைசாற்றுவதாகவும் தான் அல்லாஹ்வின் பால் எந்தளவு தங்கியிருக்கிறேன் என்பதை உணர்த்துவதாகவும் அமைந்துள்ளது. இந்த விடயங்கள் அடியானது கவனத்தை அல்லாஹ்வின் பால் திருப்பி அவனைத் திசைப்படுத்துவதாக அமைந்திருப்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

❖ **திரும்பச் சொல்வதையும் பதிலளிப்பதையும் சற்று விரிவாக நோக்குவோம்.**

- ***அல்லாஹு அக்பர் - அல்லாஹ் (அனைத்தையும் விட)ப் பெரியவன்***

  எனது வாழ்க்கை விவகாரத்தில் என்னைக் கவர்ந்த, எனக்கு அழுத்தம் தருகின்ற, சமூகம் முன்னுரிமைப்படுத்துகின்ற விடயங்கள் ஏராளம். இவை அனைத்தையும் விட அல்லாஹ்வே மிகவும் சிரேஷ்டமானவன். அவனது விடயத் திற்கே முதலிடம். பொதுவாக முக்கியத்துவம் வாய்ந்த விடய மாக இருந்தாலும் அந்தப் பொழுதில் ஈடுபட்டுக் கொண்டி ருக்கும் விடயமாக இருந்தாலும் அதனை விட அல்லாஹ்வே பெரியவன். அதனைக் கருத்தாகக் கூறுவதே அதானை பின்தொடர்வதாகும்.

- ***அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹ்- அல்லாஹ்வை அன்றி வேறு நாயன் இல்லை என்று சான்று பகர்கின்றேன்.***

  அல்லாஹ் வணங்கப்பட வேண்டியவன் என்றும் கட்டுப்படத் தகுதியானவன் என்றும் உதவிக்கு நாடப்பட வேண்டியவன் என்றும் நான் சான்று பகர்கிறேன். சான்று பகர்வது என்பது எதனை அறிவாகப் பெற்றிருக்கின்றோமோ அதன்படி செய லாற்றுவது. எனக்கு எல்லாமே அல்லாஹ்தான் என ஏற்றுக் கொள்வதாகும்.

- ***அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹ்- முஹம்மத்***

(ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்று நான் சான்று பகர்கின்றேன்.

முஹம்மத் (ஸல்) அவர்கள் சொன்னது, செய்தது, அங்கீ கரித்ததுதான் உண்மையும் நீதியுமாகும் என்று நான் சான்று பகர்கின்றேன். இந்த அழைப்பொலிக்கும் அவர்களே எனக்கு முன்மாதிரி.

- ***ஹய்யா அலஸ் ஸலாஹ்- தொழுகைக்கு விரைந்து வாருங்கள்***

“லா ஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹ்” எனக்கு முயற்சியும் இல்லை, சக்தியும் இல்லை உனது உதவி இல்லாமல் எனது வாழ்வுக்கு நீயே ஆதாரம். உனது தயவின்றி என்னில் எதுவும் இல்லை. எனவே உனது அழைப்பு எனக்கு ஒரு வரப்பிரசாதம், என் உள்ளத்தின் அரண்; எனது தூய நடத்தைக்கு கட்டுச்சாதம்.

- ***ஹய்யா அலல் பலாஹ்- வெற்றியை நோக்கி விரைந்து வாருங்கள்.***

“லா ஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹ்” எனக்கு முயற்சியும் இல்லை, சக்தியும் இல்லை, உன்னாலேயே அல்லாமல். வாழ்வில் இலக்கு நோக்கி உறுதியோடு நடைபோடுவது, எந்நிலையிலும் தளராமல், திருப்தியோடு முன்னேறுவது, மறுமையில் உனது மன்னிப்பு, திருப்தி, சுகண்டியான வாழ்வு என்ற இந்த வெற்றிக் கனிகளைப் பறிப்பதற்கான மந்திரசா விதக்வா இங்குதான் இருக்கிறது. உனது அழைப்புக்கு பதிலளிப் பதன்றி எனக்கு வேறு வழி இல்லை.

- ***அல்லாஹு அக்பர்- அல்லாஹ்வே (அனைத்தையும் விட)ப் பெரியவன்***

நீயே மிகப் பெரியவன். நீ நாடினால் யாராலும் தடுக்க முடியாது. நீ தடுத்தால் யாராலும் தர முடியாது.

- ***லா இலாஹ இல்லல்லாஹ்- உன்னையன்றி வேறு நாயன் இல்லை***

உன்னிலேயே தங்கியிருக்கின்றேன், உன்னையே வணங்கு

கின்றேன், உனது கட்டுப்பட்டிலேயே வாழ்கின்றேன்.

அதானைக் கேட்ட பின் பின்வரும் பிரார்த்தனையை ஓதுவது சுன்னத் ஆகும்.

- ***“அல்லாஹும்ம ரப்பஹாதிஹித் தஃவதித்தாம்மா” அல்லாஹ்வே என்மீது உரிமை கொண்டவனே இது பரிபூரணமான அழைப்பு.***

  உலக வாழ்வின் வெற்றிக்கும் மறுமையில் சுவன பாக்கியத்திற்கும் பரிபூரணமான வழியைக் காட்டும் அழைப்பு.

- ***“வஸ்ஸலாதில் காயிமா” மேலும் தொழுகை நிலையானது.***

  தொழுகை வாழ்க்கையில் உறுதியான செயற்பாடாகும்.

- ***“ஆதிமுஹம்மதனில் வஸீலத வல் பழீலா. வப்அதுஹுமகாமன் மஹ்மூதனில்லதி வஅத்தா”... வஸீலாவையும் பாக்கியங்களை யும் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு வழங்குவாயாக! நீ வாக் களித்த புகழப்பட்ட அந்த இடத்தையும் வழங்குவாயாக! வாழ்வின் வழியையும் தொழுகை எனும் தீர்வையும் நீங்களே எங்களுக்குப் பெற்றுத் தந்தீர்கள்.***

அதானை செவிமடுக்க வேண்டும். அதனைப் பின்தொடர்ந்து கூற வேண்டும். சிலஇடங்களில்பதில்சொல்லவேண்டும். தொடர்ந்து முழுமையான அழைப்பு என்றும் அது உறுதியான செயற்பாடு என்றும் கூறி முடிக்க வேண்டும். இத்தனையையும் விளக்கத் தோடும் மனப்பூர்வமாகவும் நிறைவேற்றினால்அவருடைய உள்ள மும் செயலும் எப்படி இருக்கும் என்பதை சிந்தித்துப் பாருங்கள். வல்ல இறைவனை சந்திப்பதற்குரிய உயர் மனநிலை உருவாக்கம் இதில் நடைபெறுவதைக் காணலாம்.

அதானை செவியேற்பதில் உண்மையாக நடந்து, (அதாவது மார்க்கம் அனுமதித்ததேயல்லாமல் வேறு ஒரு செயலை நோக்கி செல்வதை தவிர்த்து) அதற்கு பதிலளிக்கும் வகையில் தொழு கையை நோக்கிச் சென்று அந்த சந்திப்பை உரிய முறையில் நிறை வேற்றினால் அத்தகையவர் தடுமாற்றம் உள்ளவராகவும் தோல்விய டைந்தவராகவும் இருப்பாரா?

அல்லாஹ்வின் நிர்ணயம் "கத்ர்" தான் உலகின் அசைவுகள். அத்தகையவனோடு பசுமையான உறவை வளர்த்துக் கொள்ளும் இந்த மனிதர், அல்லாஹ்வின் அன்புக்கும் அருளுக்கும் உரியவரா வார். இவர் அல்லாஹ்வின் பேறுகளைப் பெற்று வாழ்வாங்கு வாழ்வார். அப்படி ஒருவராக நானும் இருக்க வேண்டும் என்ற ஆசை மேலோங்க வேண்டும்.

இந்த மனநிலை தொழுகைக்கான உயிரோட்டத்தில் கணிசமான பங்கை வகிக்கும். இன்னும் சிறிது முயற்சித்தால் தொழுகையின் பலாபலன்களை நிரப்பமாகப் பெற்றுத் திரும்பும் பாக்கியவானாக ஆகிவிடுவோம். இப்பொழுது நாம் அந்த உன்னத வணக்கத்தை எவ்வாறு நிறைவேற்ற வேண்டும் என்பதில் கவனம் செலுத்துவோம்.

தங்களைத் தகைமைப்படுத்திக் கொள்வதற்கான ஆலோசனை: 10

1. **அதான் ஒலித்தால் அல்லாஹ்வின் புறத்திலிருந்து வரும் அழைப்பு என்று எண்ணி அதனை மதிக்கப் பழகுங்கள்.**
2. **அதற்குப் பதிலளிப்பது வலியுறுத்தப்பட்ட சுன்னாவாகும். காரண மின்றி கவனயீனமாக இருப்பது பாரதூரமானது என்பதை அறிந்து செயற்படுங்கள்.**
3. **ஒரு முஃமின் பொய் கூற மாட்டான், ஏமாற்ற மாட்டான். பதிலின் கருத்தை உணர்ந்து உண்மையாளர்களாக நடந்து கொள்ள முயற் சியுங்கள்.**

2. சுத்தமும் தூய்மையும் பெறல்

மரியாதைக்குரிய ஒருவரை சந்திக்கச் செல்லும்போது அவருக்கே உரிய முறையில் தன்னைத் தயார்படுத்திக் கொள்வது பகுத்தறிவு ஆற்றலின் இயல்பான நடத்தை. உலகத்தின் படைப்பாளன், கருணை வடிவானவன். என் உள்ளத்தின் ஆழத்தையும் பார்க்கும் வல்லமை கொண்டவன். அவனது அழைப்புக்கு பதிலளித்து அவனை நோக்கி செல்ல இருக்கிறேன், எவ்வாறு எனது முன்னேற்பாடு இருக்க வேண்டும் என்பதை சிந்தனையில் கொள்ள வேண்டும். மார்க்கமும் அதனை வழிகாட்டியுள்ளது. அதனை எவ்வளவு

அழகிய முறையில் செய்ய முடியுமோ அவ்வாறு செய்வதில் ஆர்வம் கொள்ள வேண்டும். அந்தக் காரியங்களை சரியாகவும் உள நிறைவாகவும் செய்தால் உடல் மாத்திரம் அல்ல உள்ளமும் தூய்மையடைவதாக ரஸூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

"ஒருவர் அழகிய முறையில் வுழூச் செய்தால் அவரது பாவங்கள் அவரின் உடலை விட்டு நகங்கள் வழியாக வெளியேறி விடுகின்றன." (முஸ்லிம்)

வுழூவின்போது சாதாரணமாக வெளியில் தெரியும் அனைத்துப் பகுதிகளும் முறையாக என்று கூறுவதை விட அதற்கே என்ற தனித்துவமான முறையால் கழுவப்படுகின்றன. அதனால் துப்புரவு என்பதற்கு அப்பால் சாதாரணமாக வெளிப்படுகின்ற உறுப்புகளில் படியும் கிருமிகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறுகின்றது உடல். உடல் சுத்தம் மாத்திரமன்றி உடல் ஆரோக்கியமும் பேணப்படுகிறது. அதே போல் ஒவ்வோர் உறுப்பிலிருந்தும் வழியும் இறுதிச் சொட்டு நீருடன் அந்த உறுப்பின் பாவங்களும் உதிர்ந்து விடுகின்றன. இவ்வாறு உடலும் உள்ளமும் தூய்மை பெறுகிறது. தூய்மையாக, பேணுதலாக வுழூவை நிறைவேற்றுபவர் பாவமன்னிப்பு பெற்றவர்களில் ஒருவராக, தூய்மையானவர்களில் ஒருவராக மாறுகிறார். இந்த செயற்பாடும் இறை சந்திப்பின் பெறுமானத்தை நினைவில் கொள்ளச் செய்கிறது.

தூய்மைக்கு ஏற்பாடு செய்த மார்க்கம் அவரின் அழகான தோற்றத்தின் தேவையையும் நினைவுபடுத்துகிறது. "ஆதத்தின் மக்களே! ஒவ்வொரு தொழுகையின் போதும் உங்களை அலங்கரித்துக் கொள்ளுங்கள்." (அல்அஃராப்: 31) யாரோடு சம்பாசிக்கச் செல்கிறீர்கள் என்பதை இன்னுமொரு படி மேல் சென்று நினைவுபடுத்துகிறது மார்க்கம். தங்களை அழகுபடுத்திக் கொள்வது என்பது தான் செய்யவிருக்கும் பணியின் பெறுமானத்தை இன்னும் பல பரிமாணங்களுக்குக் கொண்டு செல்கிறது. ஒரு பணியை சிறந்த முறையில் செய்வதற்காக எடுக்கும் முயற்சிகளெல்லாம்

அது பற்றிய சிந்தனையிலும் உணர்விலும் ஆழம் நோக்கிச் செல்ல வைக்கும். இறை சந்திப்புக்காக இத்தகைய தயார் நிலையை ஒருவர் மேற்கொள்வதில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும்.

இறை சந்திப்புக்கே உரிய உள்- வெளி சார்ந்த அழகிய முன்னேற்பாடுகளுடன் இறை இல்லம் நோக்கி வீட்டிலிருந்து புறப்படுபவார். புனிதமான செயலை நோக்கி எட்டுக்களை ஆரம் பிப்பார். நல்லடியார்கள் மஸ்ஜித் செல்லும் தூரம் அதிகமாக இருக்க வேண்டும் என்று விரும்புங்கள் என நபி (ஸல்) அவர்கள் போதித்துள்ளார்கள். அல்லாஹ்வை சந்திப்பதற்காக மேற்கொள் ளும் பயணத்தின் எட்டுக்கள் மன்னிப்பையும் நன்மைகளையும் அந்தஸ்தையும் உயர்த்தி வைக்கும். செல்லும் வழியில் உனது ஒளியால் என்னையே ஒளிமயமாக ஆக்கிவை என்ற நீண்ட பிரார்த் தனையுடன்பசுமையான மனதோடு அல்லாஹ்வின் அருள்பேறு களின் வாயிலைத் திறந்து தரும்படி வேண்டி இறை இல்லத்தின் வாயிலினுள் நுழைவார்.

அங்கு அவர் தொழுகையை நிலைநிறுத்த அழைப்பவரின் அழைப்பு வரும்வரை எதிர்பார்த்திருப்பார். அந்த சந்தர்ப்பம் அவர்கள் பெற்ற அரும்பெரும் பாக்கியமாக அமையும். அவர்களுக் காக மலக்குகள் மன்னிப்புக் கோருவார்கள். அருள்பாலிக்க வேண்டு வர்கள். எல்லாம் வல்ல அல்லாஹ்வை சந்திக்க, கலந்து பேச எத்தனை அழகான முன்னேற்பாடு! எத்தனை பெரிய தயார் நிலை!

இந்த நேரத்தில் தொழுகையை இகாமத் செய்ய வருமாறு அழைப்பு வருகிறது. அதாவது இறைவனை சந்திக்கும் தருணம் உருவாகின்றது. முதல் வரிசையைப் பெற்றுக்கொள்ள ஏலவே முயன்றிருந்தார். வரிசைக்குரிய ஒழுங்குகளை நிரப்பமாகப் பேணி, ஆர்வத்தோடு, அமைதியாக, பிழைத்துவிடுமோ என்ற பயத்தோடு கிப்லாவின் திசை நோக்கி நிற்கிறார். இதுதான் அதானுக்கு அவர் வழங்கிய பதில்.

தங்களைத் தகைமைப்படுத்திக் கொள்வதற்கான ஆலோசனை: 11

1. வுழூ செய்யும்போது நிதானமாக முழுமையாக செய்யும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் அது புனிதமானது; உங்களைத் தூய்மைபடுத்துவது; வல்ல அல்லாஹ்வை சந்திப்பதற்காக தயாராவது.
2. முடியுமான வரை உங்கள் தோற்றத்தை அழகுபடுத்திக் கொள்ளுங்கள். அது உங்கள் மனதில் அவனைப் பற்றிய மதிப்பை அதிகரிக்கச் செய்யும்.
3. எப்படிச் சென்றாலும் இறைவன் ஏற்றுக் கொள்வான். அது அவனது கருணை. கண்ட, நின்றபடி போனால் எமது உள்ளத்தில் அவனை எங்கே வைத்திருக்கிறோம் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

அத்தியாயம்: 04

தொழுகையின்போது

01. நிகரில்லா வல்லமை பொருந்திய, அன்பும் கருணையும் கொண்ட நாயனுக்கு முன்னால்

கிப்லாவை முன்னோக்குவது தொழுகையின் ஷர்த்துகளில் ஒன்றாகும். கிப்லாவை முன்னோக்குவதனூடாக அவர் தனது படைப்பாளன் முன்னால் நிற்கிறார். இது அடியானுக்கு உலகில் கிடைத்தற்கரிய ஒரு மகத்தான சந்தர்ப்பம். இந்த உலகத்தைப் படைத்துப் பரிபாலிக்கும் ஒவ்வொரு செயலையும் தன் நாட்டப்படி தீர்மானிக்கும் வல்ல நாயனை அடியான் சந்திக்கின்றான். தொழுகையில் அடியான் தன்னை நோக்குவதை அல்லாஹ் தனியாக அவதானிக்கின்றான். இது அல்லாஹ் பற்றிய பரந்த விளக்கத்துடனும் உள்ளுணர்வுடனும் அமைந்தால் எவ்வாறு இருக்கும் என்று சிந்தித்துப் பாருங்கள்.

ரஸூல் (ஸல்) கூறினார்கள். “நீங்கள் அல்லாஹ்வை வணங்கினால் அவனைப் பார்ப்பது போல் வணங்குங்கள். நீங்கள் பார்க்காவிட்டாலும் அவன் உங்களைப் பார்த்துக் கொண்டிருக்கின்றான்.”) ஸஹீஹுல் ஜாமிஃ) ஆகவே உலகத்தின் இரட்சகனை

முன்னோக்குதல், சந்தித்தல் எவ்வாறு அமைதல் சிறப்பானது என்பதை சிந்திக்க வேண்டும். இதனைப் புரிந்து கொள்வதற்கு இந்த உதாரணத்தை நோக்குங்கள்.

அறிவிலும் ஆற்றலிலும் உச்ச நிலையில் உள்ள ஒருவரை உதார ணமாக விஞ்ஞானத்தின் தந்தை என அறியப்படும் ஐன்ஸ்டீனை சந்தித்து உரையாடும் வாய்ப்பு கிடைத்துள்ளது என வைத்துக் கொள்வோம். இதனை எவ்வாறு நாம் எதிர்கொள்வோம் என்பதை பட்டியலிட்டுப் பாருங்கள்.

- மனநிலையில் ஒரு மாற்றம் நிகழும்.
- அது எப்பொழுது வரும் என்று எதிர்பார்த்து காத்திருப்போம்.
- என்ன பேசப்போகிறேன், எப்படி பேசுவேன் என சிந்திப்போம்.
- கிடைக்கும் நேரத்தை முழுமையாகப் பயன்படுத்துவது பற்றி கரிசனை செலுத்துவோம்.
- எனது தோற்றம் எவ்வாறு இருப்பது சிறந்தது என்பதில் அக்கறை கொள்வோம்.
- வார்த்தைகளை உண்மையாகவும் சரியாகவும் அமைத்துக் கொள்ள முயற்சிப்போம்.
- உடல் அசைவுகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்துவோம்.
- கிடைத்தற்கரிய ஒரு வாய்ப்பாகக் கருதுவோம்.

சிந்தனையும் மன உணர்வும் உடல் அசைவும் ஒரு நேர்கோட் டில் காணப்படும். இதனைத்தான் விழிப்பு நிலை என்பர்.

அடுத்து நம்மீது அன்பும் இரக்கமும் உள்ள, நாம் எதிர்பார்ப் பவற்றை தரக் காத்திருக்கின்ற, நமது தேவைகளையும் அறிந்து வைத்துள்ள ஒரு தனவந்தர் நம்மை சந்திக்க அழைத்திருக்கிறார். நாமோ ஏகப்பட்ட தேவைகளோடு காணப்படுகின்றோம் என வைத்துக் கொள்வோம். இந்த சந்திப்பு எவ்வாறு நிகழும்?

- சந்திக்கக் கிடைத்ததை மிகப் பெரிய வாய்ப்பாகக் கருதுவோம்.

- அவரை அவசரமாக சந்திக்க வேண்டும் என்ற வேட்கை காணப்படும்.
- தேவைகளைக் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை இருக்கும்.
- தேவைகளில் முதன்மையானது எது என்பதைத் தெரிவு செய்திருப்போம்.
- தீரவேண்டிய பிரச்சினைகளின் பட்டியல் உருவாகியிருக்கும்.
- எல்லாப் பிரச்சினைக்கும் பரிகாரம் உண்டு என்ற நம்பிக்கை இருக்கும்.

இந்த வாய்ப்பு ஒரு வரப்பிரசாதம் என்று எண்ணி அரிய சந்தர்ப் பமாகக் கருதி உத்வேகத்தோடு காணப்படுவோம்.

மூன்றாவது, அதிகாரமும் தண்டிக்கும் அதிகாரமும் கொண்ட, நம்மைப் பற்றிய தகவல்கள் அனைத்தையும் தன்வசம் வைத்திருக் கும் உயர் பாதுகாப்பு அதிகாரி ஒருவரை சந்திக்க வேண்டும் என்ற தேவை ஏற்பட்டால் நமது நிலை என்ன?

- நமது தவறுகள், குற்றங்கள் பற்றி மீள்பார்வை செய்தவர்களாக...
- மன்னிப்புக் கேட்கும் தேவையுடன்...
- தண்டிக்கப்பட்டு விடுவோமோ என்ற பயத்துடன்...
- குற்றவாளியாக இருக்கின்றோமே என்ற உள்ளுணர்வுடன்...
- வெட்கத்துடனும் தலைகுனிந்த நிலையிலும்...
- ஏலவே நாம் இவற்றுக்கெல்லாம் பரிகாரம் கண்டிருந்திருக்கக் கூடாதா என்ற ஏக்கத்துடன் தலைகுனிந்துபயத்தில் தோய்ந்து காணப்படுவோம்.

இவை பொதுவாக மனிதனிடம் ஏற்படுவது யதார்த்தம். இருந் தாலும் நாம் எதிர்கொள்ளும் மனிதனிடம் எண்ணற்ற பலவீனங்கள் காணப்படும். அவன் நீதி தவற முடியும், மறந்து விடமுடியும், பரிந்துரைகளுக்கு மயங்கி விடவும் முடியும். இத்தனை பலவீனங் கள் காணப்பட்டும் அச்சத்தில் மூழ்கி விடுவோம்.

இந்த பலவீனங்களுக்கு அப்பாற்பட்ட, அறிவிலும் அன்பிலும் அதிகாரத்திலும் நிகரில்லா தகைமை கொண்ட, வல்ல நாயனை முன்னோக்கி நிற்கும் நாம் இவை அனைத்தினதும் பிரதிபலிப்பாக இருக்க வேண்டும் என்பது பற்றி சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

அல்லாஹ்வை முன்னோக்கும்போது எம்முடைய நிலை எவ்வாறு காணப்பட வேண்டும் என்பதை அல்குர்ஆன், ஸுன்னா கூறுகின்றன.

- "ரப்புடைய சந்நிதானத்திற்குப் பயப்படுபவனாக இருக்கின்றானோ?" (அல்காஷியா 79: 40)
- "அவர்கள் தங்கள் தொழுகையில் பணிவோடு இருப்பார்கள்." (அல்முஃமினூன் 23:2)
- "தொழுகையை அவர்கள் பாதுகாப்பார்கள்." (அல்முஃமினூன் 23:9)

இறைவனை சந்திப்பதில் அடியானின் கவனக் குவிப்பை உறுதி செய்வதற்கு தூதர் (ஸல்) அவர்களின் போதனை வருமாறு:

- பார்வைகள் அலைந்து திரியாது நிலைகுத்தி இருத்தல். (புஹாரி)
- வேறு உரையாடலைத் தவிர்த்தல்.
- உணவுப் பதார்த்தம் வாயில் இல்லாதிருத்தல்.
- அவசியமற்ற அசைவுகளைத் தவிர்த்தல்.
- எதிலும் சாயாதிருத்தல்.
- கைகளை நிலத்தில் ஊன்றி இருப்பதைத் தவிர்த்தல். (அபூதாவூத்)
- கொட்டாவி விடுவதை முடியுமான வரை தவிர்த்தல். (முஸ்லிம்)
- இடுப்பில் கைகளை வைத்து நிற்பதைத் தவிர்த்தல். (புஹாரி)
- ஆடையை தொங்க விடாமல் இருத்தல். (திர்மிதி)
- கைகளைக் கோர்த்துக் கொண்டிருப்பதைத் தவிர்த்தல். (திர்மிதி)
- உணவு தயாராக இருந்து பசியுடன் நிலையில் தொழுவதை தவிர்த்தல். (முஸ்லிம்)

- மலசலத்தை அடக்கிக் கொண்டு தொழுகைக்குச் செல்வதைத் தவிர்த்தல் (அபூதாவூத்)
- கிப்லாவை நோக்கி துப்புவதைத் தவிர்த்தல்.

இந்த விடயங்கள் தொழுகையின்போது அதாவது இறைவனைச் சந்திக்க நிற்கும்போது தவிர்க்கப்பட வேண்டும் என ரஸூல் (ஸல்) அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள். இந்த விடயங்களைத் தவிர்ப் பதோடு மாத்திரம் நின்று விடாமல் இவற்றினூடாக நாடப்படும் விடயத்தையும் சிந்தனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். உபதேசங்களின் சொற்களில் மாத்திரம் நின்று விடாமல் அறிவுபூர் வமாக சிந்தித்து செயலாற்ற வெண்டும். அப்போதுதான் இந்த உபதேசங்களின் பயன்பாட்டை முழுமையாகப் பெற முடியும். அதாவது எல்லாம் வல்ல அல்லாஹ்வின் முன்னால் நிற்கும்போது எவ்வளவு விழிப்போடும் மரியாதையோடும் பணிவோடும் நிற்க வேண்டும் என்பதை சூசகமாக இந்த நபி வாக்குகள் உணர்த்துவதை விளங்க முயற்சிக்க வேண்டும்.

தங்களைத் தகைமைப்படுத்திக் கொள்வதற்கான ஆலோசனை: 12

1. **முன்னோக்குவது உடல் மாத்திரம் அல்ல, உங்களது உள்ளமும் தான் என்பதை நினைவில் வைத்திருங்கள்.**
2. **உள்ளம் பணிவதையும் பயப்படுவதையும் அன்பு கொள்வதையும் கவனத்தில் கெள்ளுங்கள். இதில் குறை தெரிந்தால் தவறாமல் அல்லாஹ்விடம் மன்றாடுங்கள்.**
3. **இது விடுபடாத பயிற்சியினூடாக படிப்படியாக வளரக் கூடியது. தொடர்ந்து கவனம் செலுத்துங்கள்.**
4. **தொழுகையில் தவிர்க்கப்பட வேண்டிய விடயங்களின் பட்டியலை நாடப்படும் விளக்கத்துடன் பின்பற்றி வாருங்கள்.**
5. **பர்ளு தொழுகையில் பலர் பங்கேற்பார்கள். அவர்களின் அசைவுகள் பெரும்பாலும் ஒரேமாதிரி இருக்கும். அதுபோல் ஓதல்களும் ஒரே மாதிரி இருக்க முடியும். ஆனால், அவர்களின் உள ஈடுபாடும் பணிவும் பயமும் நிச்சயமாக பலவாறாக இருக்கும். நான் ஆரோக்கியமான நிலையில் இருக்கிறேன் எனக் கூற முடியுமா என்பதில் கவனமாக இருங்கள்.**

02. அகிலத்தின் அரசனும் அவனது அடிமையும் உரையாடும் தருணம் [ஆன்மாவின் விண்ணுலகப் பயணம்]

“நிச்சயமாக ஒரு முஃமின் தொழுகையில் நிற்கும்போது அவனது ரப்புடன் உரையாடுகின்றான்.” (புஹாரி)

உலகத்தின் இரட்சகனுடன் பேசுகின்ற, இறைவன் பேசுவதை உணர்கின்ற வாய்ப்பு எத்தனை பெரிய கண்ணியமும் மகத்துவமும் நிறைந்த வாய்ப்பு என்பதை சிந்தித்துப் பாருங்கள். இப்படி ஒரு வாய்ப்புக் கிடைப்பதற்கு எமது பிரயத்தனங்கள் எவ்வாறு இருந்திருக்க வேண்டும். எவ்வளவு மனப்பூரிப்போடு அதனை அடைந்துகொள்ள முயற்சிக்க வேண்டும். அந்த வாய்ப்பை எவ்வளவு அழகிய முறையில் நிறைவேற்ற வேண்டும் என்பது எமது கவனத்திற்குரியது.

உரையாடலில் சிந்தனையும் மனநிலையும் இணைந்திருப்பது இயல்பு. உரையாடும் மனிதரைப் பொறுத்து அவை மாறுபடும். உயர் கல்வித் தகைமை பெற்ற, நேர்மையும் நன்மதிப்பும் மிக்க ஒருவருடன் உரையாடும்போது எமது மனநிலை பூரிப்பின் உச்ச நிலைக்குச் செல்லும். அவர் தன்னை ஏற்றுக் கொண்டவராகவும் தன்மீது அன்பு வைத்திருப்பவராகவும் இருந்தால் மனம் பரவசம் அடையும்.

வல்லவன் அல்லாஹ் தனது வல்லமையால் புகழும் உயர்வும் கண்ணியமும் பெற்றவன், அடியார் மீது அளவிலா கருணையுள்ளவன், அடியாரின் உறவை எதிர்பார்த்திருப்பவன், இப்படியான ஓர் எஜமானுடன் உரையாடும் வாய்ப்பின் இன்பத்தை முதலில் உணர வேண்டும். அதனை சுவைக்க ஆர்வம் கொள்ள வேண்டும்.

அடியான் உரையாடினால் அல்லாஹ் உரையாடுவான். அடியானுடைய உரையாடலுக்கு பதில் கூறுவான். அல்லாஹ்வின் பதில் எவ்வளவு பெறுமதியானது. அதுவே உண்மைக்கு இலக்கணம், மாற்றத்திற்கு உட்படாதது என்பதை நாம் சிந்தனையில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அல்லாஹ் கூறுவதாக ரஸூல் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள். “தொழுகையை இரண்டாக பிரித்துள்ளேன். அதில் அடியான் அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன் எனக் கூறினால் எனது அடியான் என்னைப் புகழ்ந்து விட்டான் (என அல்லாஹ் கூறுகிறான்)...” (முஸ்லிம்)

அடியானுடைய புகழாரம் என்பது வெறும் வார்த்தையாக, அதன் மொழிபெயர்ப்பாக இருக்க முடியாது. அது உள்ளத்தின் ஆழத்தில் இருந்து வர வேண்டும். ஏனெனில், எஜமான் அந்த வார்த்தையின் உண்மைத்தன்மையைப் பூரணமாக அறிந்தவன். அந்த விளக்கத்தின் பின்னணியிலேயே அவனது பதில் இருக்கும். அடியானின் வார்த்தையின் ஆழம் அல்லாஹ் பற்றிய விளக்கம், அது உருவாக்கும் மனநிலையைப் பொறுத்தது என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்தத் தொடர்பு என்பது உலகைப் பராமரித்து, பாதுகாக்கும் சிம்மாசனத்துடன் ஏற்படும் தொடர்பு; மரணமில்லாத என்றும் உயிரோடு இருப்பவனுடன் ஏற்படும் தொடர்பு. இது உங்களது உள்ளத்தை விரிவாக்கும்; நம்பிக்கையை ஆழமாக்கும்; கண்களைக் குளிரச் செய்யும்; இதனை அனுபவித்த சமூகம்தான் ஸஹாபா சமூகம். அது அவர்களில் ஏற்படுத்திய விளைவை இந்த உலகமே பெற்று மகிழ்ந்தது.

இந்தப் பாக்கியம் பெற்றவர்கள் அல்லாஹ் வழங்க இருக்கும் சுகண்டியான இன்பங்களில் மெய்மறந்து இருப்பார்கள். இவர்களின் உள்ளத்திற்கு முன்னால் முழு உலகமுமே அற்பமானதாக ஆகிவிடு கிறது. இந்த ஆன்மாவின் வளர்ச்சியே ஆச்சரியமிக்க நடத்தையை உருவாக்குகிறது. அவர்கள் அல்லாஹ்வின் குடும்பமான மனித இனம் சுபிட்சம் பெற தம்மையே அர்ப்பணித்து விடுகிறார்கள். உலக அசௌகரியங்கள் அவர்களது பார்வையில் மிக அற்பமாக மாறிவிடுகிறது. அதனையும் எஜமானனிடம் சாட்டி விடுகின் றார்கள். எத்தனை ஆச்சரியமான வாழ்வு இவர்களுக்கு கிடைத்து விடுகிறது. இதுதான் அழைப்புக்கு உரிய பதில் கூறுபவர்கள்

பெற்றுக் கொள்ளும் அளப்பரிய பாக்கியம். இதுவல்லவா வெற்றி! இதற்காகத்தான் அதான் எனும் அழைப்பு விடுக்கப்பட்டது. “ஹய்யா அலல் பலாஹ்” வெற்றியை பெற விரையுங்கள் என்ற அழைப்பே அது.

இத்தகையதொரு சமுதாயம் தோற்றுவிக்கப்பட்டால் மனிதம் வாழும்; வாழ்வு சுபிட்சம் பெறும்; வானமும் பூமியும் அருள்களைக் கொட்டும்.

“நிச்சயமாக அவ்வூர்வாசிகள் ஈமான் கொண்டு அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்திருந்தால், நாம் அவர்களுக்கு வானத்திலிருந்தும் பூமி யிலிருந்தும்- பாக்கியங்களைத் திறந்துவிட்டிருப்போம். ஆனால் அவர்கள் (நபிமார்களை நம்பாது) பொய்ப்பித்தனர். ஆகவே அவர்கள் செய்து கொண்டிருந்த (பாவத்)தின் காரணமாக நாம் அவர்களைப் பிடித்தோம்.” (அல்அஃராப் 7:96)

“மனிதர்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட (சமுதாயத்தில்) சிறந்த சமுதாயமாக நீங்கள் இருக்கிறீர்கள். (ஏனெனில்) நீங்கள் நல்லதைச் செய்ய ஏவுகிறீர்கள்; தீயதை விட்டும் விலக்குகிறீர்கள். இன்னும் அல்லாஹ்வின்மேல் (திடமாக) நம்பிக்கை கொள்கிறீர்கள்...” (ஆல இம்ரான் 110)

தங்களைத் தகைமைப்படுத்திக் கொள்வதற்கான ஆலோசனை: 13

1. **இறைவனோடு உரையாடுவதை எதிர்பார்த்திருங்கள். வாய்ப்புக் கிடைத்தால் மகிழ்வுறுங்கள்.**
2. **நான் எதனை பேசுகின்றேன், எப்படி பேசுகின்றேன் என்பதில் அவதான மாக இருங்கள்.**
3. **எனது பேச்சில் உண்மையும் உறுதியும் இருக்கிறதா என்பதைப் பார்த்துக் கொள்ளுங்கள்.**

03. இறை உரையாடலில் அடியானின் பாகம் – அல்குர்ஆனின் தாய் (உம்முல் குர்ஆன்)

தொழுகையில் எஜமானும் அடியானும் உரையாடுகின்றனர். அந்த உரையாடல் தொழுகையின் துவக்கத்திலிருந்து சலாம்

கொடுக்கும் வரையில் பல்வேறு ஒழுங்கில் நிகழ்கிறது. அடியான் இறைவனிடம் கேட்க வேண்டும் என்று அல்லாஹ்வே வகுத்தளித்த அற்புத ஆயத்தான் ஸூரதுல் பாத்திஹா. ஸூரதுல் பாத்திஹா அல்குர்ஆனில் இருந்தாலும் அடியார்களுக்கு பிரத்தியேகமாக வழங்கப்பட்ட வசனங்களாகவே குர்ஆனும் சுன்னாவும் குறிப்பிடு கின்றன. அது வேண்டுதலின் முழுமைத்தன்மையைக் கொண்டிருப் பதுடன் அடியானின் தேவையிலும் முழுமைத் தன்மையைக் கொண்டுள்ளது.

இது அல்குர்ஆனிலுள்ள மகத்துவம் பொருந்திய ஸூராவாகும். திரும்பத் திரும்ப அடியானிடம் இருந்து வெளிப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்பட்ட ஸூரா. அதுபோல் அல்குர்ஆனில் தோற் றுவாயாக அமையப் பெற்றுள்ளது. அதன் விஷேட அம்சம் என்ன வெனில், இறைவன் புறத்திலிருந்து வந்த வஹியாக இருப்பதனா லும் மனிதன் தனது தேவைகளை முழுமையாக இறை சந்நிதானத் தில் ஒப்புவிப்பது போன்றே அமைந்துள்ளது.

அதாவது இறை உரையாடலில் எதனை, எப்படி எடுத்தியம்ப வேண்டும் என்பதை எஜமானே கற்றுத் தருகின்றான். எனவே, அடியான் என்ன விளக்கத்தோடு, எத்தகைய மனநிலையோடு அது அமைந்திருக்க வேண்டும் என்பதை சிந்தனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். என்ன சொல்கிறோம் என்று எமக்கே தெரியாத நிலையில் அமைந்து விடுவது எவ்வளவு அபத்தமானது என்பதை அறிந்து தனக்குரிய விளக்கத்தை வளர்த்துக் கொள்வது அவசியமாகும்.

இங்கு நாம் அடியான் எஜமானனிடம் எதனைச் சொல்ல முயற் சிக்கிறான், அது எந்த மனநிலையில் அமைந்திருக்க வேண்டும் என்ற சிறிய அறிமுகத்தையே விளங்க முயற்சிக்கின்றோம். ஸூரா பற்றிய பரந்த விளக்கம் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதது. அதனை அதற்கே உரிய முறையில் பெற்றுக் கொள்ளும் தேட்டம் இருக்க வேண்டும்.

ஸூராவின் பெறுமானம், மார்க்கத்தில் அதற்கான இடம், அது இறங்கிய ஒழுங்கு, அதன் அமைப்பு, முழுக் குர்ஆனையும் உள்ள டக்கியிருக்கும் அதன் விசாலம் இவை அனைத்தும் தனித்தன்மை வாய்ந்தவை. அதனை நாம் அறிய முயற்சிக்க வேண்டும். இங்கு அவற்றைத் தவிர்க்கின்றோம்.

அல்லாஹ் அனைத்து ஜீவராசிகள் மீதும் நிறைவான அருள் கொண்டவன். தனக்கு அடிபணியும் நல்லடியார் மீது நிரந்தரமான கருணைப் பண்பு கொண்டவன். அனைத்து ஜீவராசிகளும் அவன் பெயரினாலேயே உயிர் வாழ்கின்றன. ஒவ்வொரு நாளும் அவன் பெயர் கொண்டே விழித்தெழுகின்றன. அத்தகைய அல்லாஹ் வின் தயவோடு, உதவியோடு, அனுமதியோடு இதனை ஆரம்பம் செய்கி றேன்.

بسم الله الرحمن الرحيم

ஸூராவின் ஆரம்பமும் அல்குர்ஆனில் முதல் வசனமும்.

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையவன் அல்லாஹ்வின் பெயரால்..

இல்லாமையில் இருந்த இந்த பிரபஞ்ச ஏற்பாட்டை வடிவமைத்து, அதில் ஒவ்வொன்றையும் மிகத் துல்லியமாகப் படைத்து, அவை ஒவ்வொன்றுக்கும் அதற்கே உரிய தோற்றத்தையும் இயங்கு தன்மையையும் வழங்கி, பிரபஞ்சத்தில் காணப்படும் ஒவ்வொன் றிற்கிடையிலும் வலையமைப்பை உருவாக்கி, அவற்றின் வாழ்க்கை யையும் வடிவமைத்து இவை அனைத்திற்கும் பின்னால் பிரயோ கிக்கப்பட்டுள்ள எல்லையற்ற அறிவுக்கு சொந்தக்காரனான ஏகன் அல்லாஹ்வுக்கே புகழாரம்.

இல்லாமையில் இருந்த இந்த பிரபஞ்ச ஏற்பாட்டை வடிவ மைத்து, அதில் ஒவ்வொன்றையும் மிகத் துல்லியமாகப் படைத்து, அவை ஒவ்வொன்றுக்கும் அதற்கே உரிய தோற்றத்தையும் இயங்கு தன்மையையும் வழங்கி, பிரபஞ்சத்தில் காணப்படும் ஒவ்வொன்றிற் கிடையிலும் வலையமைப்பை உருவாக்கி, அவற்றின் வாழ்க்கை

யையும் வடிவமைத்து, இவை அனைத்திற்கும் பின்னால் பிரயோ கிக்கப்பட்டுள்ள எல்லையற்ற அறிவுக்கு சொந்தக்காரனான ஏகன் அல்லாஹ்வுக்கே புகழாரம்.

الحمد لله رب العالمين

உலக உருவாக்கத்தின் தாத்பரியங்களை உணர்ந்து, அதன் பின்னால் இருக்கும் வல்லமைகளைப் புரிந்து அதில் பிரமித்துப் போய், மனம் உருகி, இந்த வார்த்தை வெளியானால் அதனைத் துல்லியமாக செவியேற்கும் பிரபஞ்சத்தின் கர்த்தா அந்த அடியா னுக்கு பதில் கூறுகின்றான்:

"எனது அருமை அடியான் என்னைப் புகழ்ந்து விட்டான்" என்று.

இறை பண்புகளை அறியாமல் வழிபிறழ்ந்து நன்றி கொன்ற தனது அடியார்களையும் அரவணைத்து, காத்துப் பராமரித்து வரும் நிறைவான அருள் பண்பு கொண்டவனும், தன்னை அறிந்து பணிந்து தனது திருப்தியை எதிர்பார்த்திருக்கும் நல்லடியார் களுக்கு நீடித்த கருணைப் பண்பு கொண்டவனுமான எல்லாம் வல்ல அல்லாஹ்.

الرحمن الرحيم

அவனருளை விளங்கி அதில் சுவை கண்டு மனம் நிறைந்த நிலையில் இந்த வார்த்தை அடியானிடம் இருந்து வருமானால் அதனை செவியேற்ற எஜமான் பதில் சொல்லுகிறான்:

"எனது அருமை அடியான் என்னைப் போற்றி விட்டான்" என்று.

அவனது நாட்டத்தை மீறி அணுவளவும் எதுவும் சக்தி பெறமாட் டாது. அவனோ நீதி வழுவாதவன். எந்த ஒரு படைப்பும் அவனது அனுமதி இன்றி பரிந்துரை செய்யவும் முடியாது. அடியான் தனது எஜமானை கருணையின் வடிவாகவும் பார்க்கின்றான். இந்த நிலையில் உலக வாழ்வின் யதார்த்தத்தை அவதானித்தால், மனிதன் தான் விரும்பியது போல் வாழ்வதையும் அதன் காரணமாக அநியாயம், அட்டூழியங்களில் எல்லைமீறி ஈடுபடுவதையும்

காண்கின்றோம். இந்த வரம்புமீறல்களுக்கு நீதமான தீர்ப்பு வழங்கும் ஏற்பாட்டை இங்கு காண முடியாமல் உள்ளதையும் அவதானிக்கின்றேம்.

அதுபோல் எந்த பிரதி உபகாரமும் எதிர்பார்க்காமல் சமூகம், தேசம், சர்வதேசம் தழுவிய பணிகளும் நடைபெறுகின்றன. அவற்றுக்குரிய பலாபலன்களுக்கும் உலக ஒழுங்கில் வாய்ப்பில் லாத நிலையையும் காண்கின்றோம். மனிதர்களுக்கு மத்தியில் எண்ணற்ற ஏற்றத் தாழ்வுகள் இருப்பது வாழ்வின் நியதிபோல் அமைந்துள்ளது. இவ்வாறு பல்வேறு முரண்பாடுகள் உலக வாழ்வில் காணப்படுவதை அறிவு பெற்ற மனிதன் சிந்திக்கின்றான். இந்த முரண்பாடுகளை வல்லவன் அல்லாஹ் அறியாது இருக்கின் றானா? அல்லது அவனுக்கு அதனை சீர்செய்யும் ஆற்றல் இல்லாது இருக்கிறதா? அல்லது நீதியில் வழுவுபவனா? (இந்த எண்ணத்தில் இருந்து அல்லாஹ் எம்மைக் காப்பானாக!) இத்தகைய குறைபாடு களுக்கு அப்பாற்பட்டவன் அல்லாஹ்.

அப்படி என்றால் இவற்றுக்கெல்லாம் என்ன தீர்வு என்று மனிதன் சிந்தித்துப் பார்த்தால், ஸூராவின் முதல் பகுதியில் அல்லாஹ்வின் வல்லமையையும் நீதி வழுவாமையையும் ஏற்றுக் கொண்டோம். ஆனால், உலக வாழ்வில் ஏற்றத் தாழ்வுகள், அநீதிகள், நிராசைகள் தவிர்க்க முடியாது பின்தொடர்கின்றன. இங்குதான் மனிதனின் சிந்தனை செயற்பட வேண்டும்.

மனிதனின் விருப்பம் மிக நீண்டது. அவை நிறைவேறாமலே அவன் மரணிக்கின்றான். இவ்வளவு ஆச்சரியமும் பிரமாண்டமும் கொண்ட இந்த பிரபஞ்ச ஏற்பாட்டில் ஏன் அது இடைநடுவே நிற்கிறது, ஏன் நிராசையுடன் உலகில் இருந்து விடைபெற வேண்டும் என்பதற்கு மனிதனிடம் விடையிருக்க வேண்டும்.

அதேவேளை மனிதன் சிந்தனா சக்தி வழங்கப்பட்டவன். எனவே, அவனுக்கு அதனைப் பிரயோகிக்க சுதந்திரம் வழங்கப்பட வேண் டும். அந்த சுதந்திரத்தை மனிதன் எவ்வாறு பிரயோகிக்கின்றான்

என்பது பார்க்கப்பட வேண்டும். அவனது இச்சை தூண்டப்பட்டு உலக அலங்காரங்களின் பால் அள்ளுண்டு செல்கின்றானா, படைப் பாளனை புரிந்து அவனது விருப்பத்தை நிறைவேற்றுகின்றானா என்பது அவனுக்கு முன்னால் உள்ள பொறுப்பாகும்.

“ஆனால் இறைவன் மனிதனை கண்ணியப்படுத்தி பாக்கியம் அளித்து அவனைச் சோதிக்கும்போது அவன்: ‘என் இறைவன் என்னை கண்ணியப்படுத்தியுள்ளான்’ என்று கூறுகிறான். எனினும் அவனுடைய உணவு வசதிகளைக் குறைத்து அவனை (இறைவன்) சோதித்தாலோ அவன் ‘என் இறைவன் என்னைச் சிறுமைப்படுத்தி விட்டான்’ எனக் கூறுகின்றான்.” (அல்பஜ்ர்: 15,16)

வாழ்க்கையில் வளம் பெற்று வாழ்பவன் “இறைவன் என்னை கண்ணியப்படுத்தினான்” எனக் கூறுகின்றான். உலக வளத்தை மட்டுப்படுத்தி வசதியைக் குறைத்தால் “இறைவன் என்னை சிறுமைப்படுத்தி விட்டான்” எனக் கூறுகின்றான். இரண்டும் தனக்கு சோதனை என்பதை அறிந்து அதில் வெற்றி கொள்ள முயற்சித்தால் அவனது வாழ்வே வசந்தமாகும் என்பதை அறியாத மடமையி லேயே இருக்கின்றான்.

இவை அனைத்திற்கும் நீதம் ஒன்று தேவை. அது அணுவளவும் குறைவின்றி வழங்கப்பட வேண்டும். இல்லாதபோது தான் படைக் கப்பட்டதையும் படைப்பாளனின் தகைமையையும் மறுப்பதாக அது அமைந்து விடும். இந்த விளக்கத்தைப் பெறும்போது அவன் இவ்வாறு கூறுகிறான்:

مالك يوم الدين

(மனிதனின் செயல்கள்) பரிசீலிக்கப்படும் நாளின் சொந்தக்காரன் (அரசன்).

அல்லாஹ்வின் உள்ளமையையும் எதற்கும் நிகரில்லா வல்லமை களையும் அவனது தீர்மானத்தில் எவராலும் குறுக்கீடு செய்ய முடியாது என்பதையும் விளங்கி அதனை சரி காணும் ஒருவர், உலக வாழ்வின் யதார்த்தத்தை பகுத்தறிவோடு அவதானிப்பவராக

இருந்தால் மனிதனின் சுதந்திரம் தொடர்பான விசாரிக்கும் ஒரு ஏற்பாடு இருந்தே ஆக வேண்டும் என்ற முடிவுக்கே வர வேண்டும். இல்லாதபோது படைப்பாளனை விளங்கியதில் பிழை விட்ட வராகவே காணப்படுவார்.

இமாம் புஹாரி (ரஹ்) அவர்கள் பதிவு செய்த ரஸூல் (ஸல்) அவர்களின்பொன்மொழிஇவ்வாறுஎடுத்துரைக்கிறது: "அடியான் என்னைத் திட்டுகிறான். அது அவனுக்குப் பொருத்தமற்றது. அடியான் என்னை மறுக்கின்றான். அது அவனுக்குப் பொருத்த மற்றது. அடியான் எனக்கு சந்ததி இருக்கிறது எனக் கூறுகின்றான். அதுதான் அவன் என்னைத் திட்டுவதாகும். அவனை நான் எழுப்ப மாட்டேன் எனக் கூறுகின்றான். அதுதான் அவன் என்னை மறுப்பதாகும்."

இது அடியானின் விளக்கமாக அவனது உள உணர்வாக வருமே யானால், அல்லாஹ் அவனுக்கு பதில் கூறுகின்றான்:

مجدنى عبدى அடியான் "எனது கீர்த்தியை பறைசாற்றி விட்டான்" என்று.

ஸூரா பாத்திஹாவின் முதல் மூன்று வார்த்தைகள் (**الحمد لله رب العالمين**, **الرحمن الرحيم**, **مالك يوم الدين**) மனிதன் தனது கேள்வி, பார்வை, உள்ளம் (சிந்தனை) இவற்றின் உயர் பயன்பாட்டைப் பெறும்போது ஏற்படும் அல்லாஹ் பற்றிய நிலைப்பாடுகளாகும். அதாவது அல்லாஹ்வை எல்லையற்ற ஆற்றல் மிக்கவனாகவும் தன்மீது நிகரில்லா கருணை பொழிபவனாகவும் தனது நடத்தையை விசாரிக்கும் நாளின் சொந்தக்காரனாகவும் நம்ப வேண்டும். அதாவது தனது அறிவில் செல்வாக்குச் செலுத்தும் அளவுக்கு பணிவைப் பெற்றவனும் நான் என்னை நேசிப்பதை விட எனது சொந்தங்களை நேசிப்பதை விட அன்புக்குரியவனும் எனது செயலை துல்லியமாக அளந்து நற்கூலி தருவதற்கும் தண்டிப்பதற்கும் தகுதியானவன் அவன்தான் என்ற

நிலைப்பாட்டை கொண்டவனாக மாறுகின்றான்.

தன்மீது இத்தனை செல்வாக்குச் செலுத்தும் ஒருவன் முன்னால் தான் எத்தகையவன் என எண்ணும் ஒருவன், தனது இழிநிலையை உளமார உணர்ந்து ஏற்றுக் கொண்டால், தனது வாழ்வில் அனைத்தும் அவனே என எண்ணுவான். அவன் தயவின்றி எனக்கு ஈடேற்றம் இல்லை என்பதை விளங்கும்போது அடியான் கூறுகின்றான்:

اياك نعبد واياك نستعين

“அந்த எஜமானுக்கே நான் அடிமை. அவனையே நான் சார்ந் திருக்கிறேன்”என்று.

தனது வாழ்வு பற்றிய இந்த நிலைப்பாட்டை பறைசாற்றும் இந்த அடியானைப்பார்த்து அல்லாஹ் கூறுகின்றான்.

هذا بيني وبين عبدى ولعبدى ما سأل “இதுவே எனது அடியானுக்கும் எனக்கும் உள்ள உறவு. அடியானுக்கு என்ன தேவையோ அவை அனைத்தும் அவனுக்கு இருக்கிறது.”

இந்த பதிலை எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் இருந்து பெறும் அடியான், ஓர் இறை அடியானாக, அவனது வாழ்க்கைத் தேவை களுக்கு உத்தரவாதம் பெற்றவனாக, எஜமானனின் பொருத்தத் திற்கு உரியவனாக ஆகிவிடுகிறான். உலக வாழ்வில் அடியான் அடை யும் வெற்றி இதுவேயாகும்.

எனக்கு வழங்கப்பட்ட சுதந்திரம் இந்த உலக வாழ்க்கைக்கான சோதனை என விளங்கும் அடியான், உலக வாழ்வு முழுவதையும் சோதனையாகவே காண்கின்றான்.வரவாக இருந்தாலும் செலவாக இருந்தாலும்,சந்தோசமாக இருந்தாலும் துக்கமாக இருந்தா லும், வெற்றியாக இருந்தாலும் தோல்வியாக இருந்தாலும் இவ்வாறு தான் வாழ்வில் சந்திக்கும் அனைத்து நிகழ்வுகளும் தன்னைப் புடம்போடுகின்ற, பரிசீலிக்கின்ற பரீட்சையாகவே அவற்றைப் பார்க்கின்றான். எனவே தனது அனைத்து விவகாரங்களும் இறை

விருப்பத்திற்குரியதாக அமைய வேண்டும் என்பதில் கவனம் கொள்கிறான். அதனையே தனது வாழ்வின் அடிப்படையான தாக உணர்ந்து, தான் கேட்பதெல்லாம் எனக்குத் தரக் காத்திருக்கும் அந்த கொடையாளனிடம் வேண்டுகோளை முன்வைக்கிறார்.

إهدنا الصراط المستقيم

இந்தப் பாக்கியம் பெற்றவர்களின் வரிசை எதுவென்றால் நபிமார்கள், உண்மையாளர்கள், சான்றோர்கள், சாலிஹீன்கள். இவர்கள் பெற்ற வாழ்க்கைச் சிந்தனை, அழகிய நடத்தைதான் எனது அவா. அவர்களே உனது பாக்கியம் பெற்றவர்களுக்கான உதாரண புருஷசர்கள். அதனையே நான் ஆசிக்கின்றேன் என உணர்ந்த அடியான் இவ்வாறு கூறுகின்றான்:

صراط الذين انعمت عليهم

"அந்தப் பாதை உனது அருட்பேறை நிறைவாகப் பெற்றவர்களின் பாதை"

இறை வழிகாட்டலின் பெறுமதியை விளங்கியது போல் அதை அவமதிக்கும்போது ஏற்படும் ஆபத்தையும் அடியான் விளங்கியே இருக்கிறான். அதனைப் பணிவோடு தனது எஜமானிடம் ஒப்புவிக்கின்றான். அதாவது அறிவிருந்து அமல் இல்லாதவர்களும் அறிவில்லாமல் அமல் செய்பவர்களும் தோல்வியையே சந்திப்பார்கள். வஹியின் அறிவைப் பெற்று அதனை பிறருக்கும் கற்றுக் கொடுத்து தான் வாளாவிருப்பதும்அற்ப கிரயத்திற்கு அதனை விலை பேசுவதும் படைத்தவனை வெறுப்பேற்றி அவனது சினத்திற்கு ஆளாக்கும் என்பதைப் புரிந்து அதற்கு அஞ்சி இறைவனிடமே மன்றாடுகிறான்.

غير المغضوب عليهم

வஹியோடு முறைகேடாக நடந்த உனது சினத்திற்குரியவர்களின் வாழ்க்கையல்ல நான் எதிர்பார்ப்பது.

இறை ஆர்வம் காரணமாக உன்னைத் திருப்திப்படுத்த வேண்டு

மென எண்ணி வஹியின் வழிகாட்டலை முறையாகப் பெறாமல் தனது விருப்பு வெறுப்பின் படியும் பாரம்பரியங்களைப் பாராட்டிப் பின்பற்றி ஒழுகுவது தவறிச் செல்வதற்கான அடையாளமாகும்.

ولا الضالين

மூலத்திலிருந்து அறிவைப் பெறுவதில் அசட்டையாக இருந்து தான் நினைத்தது போல் நல்லமல் செய்ய முற்படுபவர்களில் வாழ்க்கையல்ல நான் எதிர்பார்ப்பது. இத்தகைய துர்ப்பாக்கியத்தி லிருந்து என்னைப் பாதுகாப்பாயாக.

آمين

எனது இரட்சகனே! என்னை அங்கீகரித்து அருள் புரிவாயாக.

முழுமனதுடனும் பணிவுடனும் திரும்பும் அடியானுக்கு இரவும் பகலும் அடியார்களின் தேவையை நிறைவேற்ற காத்திருக் கும் எஜமான் பதில் கூறுகின்றான்:

هذا لعبدى ولعبدى ما سأل "இது எனது அடியானுக்குரியது. அவன் கேட்டவை எல்லாம் எனது அடியானுக்கு உண்டு."

அடியான் கேட்பது, அவனது எஜமான் அவனுக்காகவே லவ்ஹுல் மஃபூலில் யாரும் தொட முடியாதவாறு பாதுகாப்பாக வைத்திருப்பது, என்றும் மாறாதது, எதனாலும் மாற்ற முடியாதது. அந்த நிறைவான அருள் அவனுக்கே உரியது என்று அல்லாஹ் பதிலளிக்கின்றான். (முஸ்லிம்)

இந்த வார்த்தைகளைப் பெறுகின்ற அடியான் எவ்வாறு தோல்வியடைவான்? வாழ்வு என்பது உண்மை, நீதி நிறைந்த சிந்தனை யும் அது சார்ந்த செயலும்தான். அதற்கான உத்தரவாதத்தைப் பெற் றுக் கொள்வதைவிட உயர்ந்த பாக்கியம் என்னவாக இருக்கும்? இந்த மனப்பாங்கின் சக்தி பற்றி அல்லாஹ் கூறுகின்றான்:

"(நபியே!) நிச்சயமாக நாம் உமக்கு திரும்பத் திரும்ப ஓதக்கூடிய

(ஸூரதுல் ஃபாத்திஹாவின்) ஏழு வசனங்களையும் மகத்தான (இந்த) குர்ஆனையும் வழங்கியிருக்கின்றோம். அவர்களிலிருந்து சில வகுப்பினரை இவ்வுலகில் எவற்றைக் கொண்டு சுகம் அனுப விக்க நாம் செய்திருக்கின்றோமோ அவற்றின் பால் நீர் உமது கண் களை நீட்டாதீர். அவர்களுக்காக நீர் துக்கப்படவும் வேண்டாம். ஆனால் உம் (அன்பெனும்) இறக்கையை முஃமின்கள் மீது இறக்கும்." (அல்ஹிஜ்ர் 87,88)

இஸ்லாம் உலகமயமானதற்குப் பின்னால் இருந்த இரகசியம் இதுதான்.

தங்களைத் தகைமைப்படுத்திக் கொள்வதற்கான ஆலோசனை: 15

1. **ஸூரா பாத்திஹாவின் பெறுமானத்தை விளங்கியிருக்கின்றீர்களா?**
2. **அதன் வார்த்தைகள் உங்கள் உள்ளத்திலிருந்து புறப்படும் அளவு அதற்குரிய விளக்கத்தைப் பெற்றிருக்கின்றீர்களா?**
3. **இறைவனின் பதிலைப் பெறும் அளவில் உங்கள் வேண்டுதல் இருக் கின்றதா?**
4. **ஸூரா பாத்திஹா ஒரு முஃமின் வாழ்வில் அத்திவாரம் போன்றது. விரிவான விளக்கத்தைப் பெற்றுக் கொள்ள முயற்சியுங்கள்.**

04. தொழுகையில் உயிர் பெற வேண்டிய மூன்று சொற்கள்

தொழுகை எனும் புனிதப் பயணத்தில் அனைத்து அசைவுகளும் ஓதல்களும் புனிதமானவை; பெறுமானம் மிக்கவை. அதில் சில பிரயோகங்கள் திரும்பத் திரும்ப கூறப்பட வேண்டும் என எதிர் பார்க்கப்பட்டுள்ளது. அந்த ஏற்பாட்டுக்கு நிச்சயமாக காரணம் இருக்கும். அது பற்றியும் ஒரு நம்பிக்கையாளன் கவனம் கொள்ள வேண்டும். ஏனெனில், அதனூடாக தொழுகையின் நோக்கம், அடைவு தங்கியிருக்க முடியும்.

தொழுகையில் நாம் திரும்பத் திரும்ப கூறும் வார்த்தைகள் ரப் (இரட்சகன்), தஸ்பீஹ் (தூய்மை), அல்லாஹு அக்பர் (அல்லாஹ் மிகப் பெரியவன்) என்பதாகும்.

- ***ரப்- இரட்சகன்***

இந்த வார்த்தையை ரப்பில் ஆலமீன் என்றும் ரப்பியல் அளீம் என்றும் ரப்பியல் அஃலா என்றும் ஒரு ரக்அத்தில் 11 விடுத்தம் அல்லாஹ்வின் ரப் என்ற வல்லமையை நினைவுபடுத்துகின்றோம். இந்த வார்த்தையின் கருத்து:

- *படைப்பாளன்*
- *உரிமையாளன்*
- *இரட்சிப்பவன்*
- *பராமரித்து வளர்ப்பவன்*
- *ஒருங்கிணைத்து நிர்வகிப்பவன்*
- *தேவைகளை நிறைவேற்றுபவன்*

இத்தனை தகைமைகளையும் உள்ளடக்கியதுதான் ரப் என்ற பிரயோகம். இந்த ஆற்றல்கள் அனைத்தும் பிரபஞ்சத்திலுள்ள அணுவில் இருந்து பிரமாண்டமான கோள்கள் வரை ஒவ்வோரு பொருளின் மீதும் பிரயோகிக்கப்படுகிறது. படைப்புகள் அனைத் தினதும் இயக்கம், இந்த உருவாக்கத்திலும் பராமரிப்பிலுமே தங்கியிருக்கிறது. குறிப்பாக, மனித படைப்பான நானும் எனது அசைவிலும் தேவையிலும் இத்தனை வல்லமை பொருந்திய இரட்சகனையே சார்ந்திருக்கிறேன். இந்த விளக்கத்தை உணர்த்தும் வார்த்தையாகவே நமது வாழ்க்கையுடன் தொடர்புபடுத்தியிருக் கும் அதி உன்னத வார்த்தையான "லா ஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹ்" என்ற வார்த்தை அமைந்துள்ளது. எனது வாழ்வில் எல்லாமே அவன்தான் என்ற பிரகடனம். இதனையே தொழுகை யில் ஒவ்வொரு ரக்அத்திலும் பதினொரு விடுத்தம் கூறுகின்றோம். அதனை விழிப்போடும் சிந்தனையோடும் கூறினால் எத்தகைய பணிவை அது ஏற்படுத்த முடியும் என்பதை நாம் சிந்தனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

அவன் என்னை உருவாக்கியவன். அவனுக்கே என்னைப் பற்றி தெரியும். அவனே என்னை உரிமை கொண்டாடுபவன். அவனுக்கே

நான் அடிமைப்பட வேண்டும். அவனே என்னை இரட்சிப்பவன். அவனையே நான் சார்ந்திருக்க வேண்டும். அவனே என்னை பராமரித்து வளர்ப்பவன். அவனுக்கே நான் நன்றி பாராட்ட வேண்டும். அவனே அடுத்த படைப்புகளோடு என்னைப் பிணைத்து எனக்கு தேவையான அனைத்து வசதிகளையும் அருள்பாலிப்பவன். அவன் மீதே நான் அன்பு பாராட்ட வேண்டும். இதனையே தொழுகையில் ஒரு நாளைக்கு குறைந்தது 181 தடவைகள் மீட்டுகின்றோம். இது உள்ளத்தைத் தொடும் வகையில் தொழுகையில் பாராயணம் செய்யப்பட்டால், வாழ்க்கை எவ்வாறு புடம் போடப்படும் என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

- **<u>தஸ்பீஹ்</u>**

தொழுகையில் அதிகமாக கூறப்படும் அடுத்த வார்த்தை "சுப்ஹான" அவன் தூயவன் என்ற வார்த்தையாகும். இது ஒரு ரக்அத்தில் ஒன்பது தடவைகள் மீட்டப்படுகிறது. இதில் அல்லாஹ் நாடும் விடயத்தை விளங்க முயற்சிப்பது ஒரு நம்பிக்கையாளனின் கடமையாகும்.

அல்லாஹ் 99 தன்னிகரற்ற பண்புப் பெயர்களைக் கொண்டவன். அதற்கு எந்த ஒரு படைப்பும் நிகராக மாட்டாது. அவை அவனுக்கே உரிய மனித அறிவால் கற்பனையே செய்ய முடியாத வல்லமைகளைக் கொண்டது. இந்த ஒவ்வொரு பண்புகளிலும் அவனுக்கே உரிய தூய்மையை பறைசாற்றுவதே சுப்ஹான என்ற வார்த்தையாகும். அதில் குறிப்பாக மகத்துவம் பொருந்தியவன், மிக்க மேலானவன் என்ற பண்புகள் தூய்மைப்படுத்தப்பட வேண்டும்.

வல்ல அல்லாஹ்வினால் தூய்மைப்படுத்தப்பட வேண்டிய இன்னுமொரு விடயம் உள்ளது. அந்த தூய்மையின் பேறு எமக்கு கிடைத்தால் அமைதியடைந்தவனாக, நிதானம் உள்ளவனாக, பொறுமைசாலியாக மாறிவிடும் உன்னத பாக்கியம் பெறுவான். அதுவே வாழ்வின் வெற்றிக்கும் மறுமையில் சுகண்டியான இன்பங்களை அனுபவிப்பதற்கும் தகுதியை வழங்குகிறது.

இந்த பாருலகை நிர்வகிப்பவன் அல்லாஹ் மாத்திரமே. அதில் அவனது நாட்டமும் தீர்மானமுமே நிலைபெறும். எந்த ஒரு சிறிய பெரிய விடயமாக இருந்தாலும் அவனது அறிவிலிருந்து தவற மாட்டாது. நீதியும் அருளும் மிக்க வல்லவன் அல்லாஹ் வின் நிர்ணயம் மனிதர்களின் பார்வையில் சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ அமைய முடியும். மனிதனைப் பொறுத் தவரையில் சாதகமாக இருந்தால் விரும்புவதும் ஏற்றுக்கொள்வதும் பாதக மாக இருந்தால் வெறுப்பதும் முரண்படுவதும் யதார்த்தமாக ஆகியுள்ளது. இது மகத்துவம் மிக்கவனும் மேன்மைமிக்கவனு மான அல்லாஹ்வின் தூய்மையை களங்கப்படுத்துவதாக அமை யும். அதாவது தொழுகையில் கூறும் தஸ்பீஹ்க்கு எதிரானதாகும். மாற்றமாக விரும்பியது நடந்தால் நன்றி செலுத்துவதும் வெறுப் பானது நடந்தால் அது அறிவுபூர்வமானது, நீதமானது என்பதை விளங்கி அதனை ஏற்றுப் பொறுமையாகவும் நிதானமாகவும் நடந்து கொள்வதுமே இறைவனை தூய்மைப்படுத்துவதாக அமை யும். இந்த வார்த்தையின் தாத்பரியமும் அதுதான். அதனையே ஒவ்வொரு நாளும் குறைந்தது **153** தடவைகள் மீட்டுகின்றோம்.

இந்த சிந்தனையோடு தொழுகையின் உரையாடல் நடை பெற்றால் அந்த வார்த்தைகள் உண்மையான வார்த்தையாகவும் தனது பணிவை பறைசாற்றுவதாகவும் அமையும். இதனை சுஜூதில் செய்வது இறை அடிமைத்துவத்தின் உயர்ந்த படித்தரமாகும். நமது அறிவை இறைவனின் கையில் ஒப்படைக்கும் அடையாளம்தான் முன்நெற்றியை இறைவனின் காலடியில் வைப்பது போன்ற சுஜூ துடைய நிலையாகும். இது உள்ளத்தில் ஆழப்பதிந்தால் அதுவே வாழ்க்கையை வழிநடத்தும் அபார சக்தியாக ஆகிவிடுகிறது. அல்லாஹ் கூறுகின்றான். "சுஜூதுடைய அடையாளம் அவர்களின் முகத்தில் தெரியும்." அதாவது அல்லாஹ்வின் அவதானத்தை, பாதுகாப்பை, உதவியை நினைவிற்கொண்டு வாழ்வார்கள். இது அவர்களை ஆச்சரியமான நடத்தையை நோக்கி இட்டுச்செல்லும்.

ரஸூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள். "ஒரு முஃமினுடைய விவகாரம் ஆச்சரியமானது..."

சந்தோசம், துக்கம், மகிழ்ச்சி, கவலை இரண்டு நிலைகளிலும் ஒரே மாதிரியாக காணப்படும். அற்புதமான உள்ளத்தைக் கொண்டவனாக தொழுகை அவனை மாற்றிவிடுகின்றது. அல்குர்ஆன் கூறுகிறது. "நிச்சயமாக மனிதன் பதற்றக்காரனாக படைக்கப்பட்டுள்ளான். அவனுக்கு ஒரு தீங்கு ஏற்பட்டால் துவண்டு விடுகிறான். நன்மை ஏற்பட்டால் கருமியாக மாறிவிடுகிறான். தொழுகையாளிகளைத் தவிர." (மஆரிஜ்: 19-22)

- **அல்லாஹு அக்பர்**

தொழுகையில் அதிகம் மொழியப்படும் அடுத்த வார்த்தை அல்லாஹு அக்பர் ஆகும். اكبر என்ற பிரயோகம் பெரியது என்ற வார்த்தையின் மிகைப்படுத்தல் சொல்லாகும். அதன் மொழிக் கருத்து, "விடவும்" பெரியது என்பதாகும். அதாவது இந்தப் பிரயோகத்தை பயன்படுத்தும்போது எந்த விடயம் மிகைத்துக் காணப்படுமோ அதைவிட அல்லாஹ் பெரியவன் என்பதை இது உணர்த்தும்.

அதுபோல் அவன் எவ்வளவு பெரிதாக இருக்கிறான் என்பதை ரஸூல் (ஸல்) அவர்கள் உதாரணம் மூலம் விளக்குகின்றார்கள். ஒவ்வொரு அடுத்த வானமும் முந்திய வானத்தைவிட இரண்டு மடங்காகும். இந்த வரிசையில் ஆறாவது வானத்தை விட ஏழாவது வானம் இரண்டு மடங்காகும். இத்தகைய இந்த பிரபஞ்சம், அர்ஷோடு ஒப்பிடும்போது பெரிய பாலைவனத்தில் ஒரு சிறிய மோதிரத்தை வைத்தால் எவ்வாறு இருக்குமோ அந்தளவு அர்ஷ் பிரமாண்டமானது. அந்த அர்ஷில் தனக்குரிய சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பவன்தான் எல்லாம் வல்ல அல்லாஹ். இதனை அல்குர்ஆன் இவ்வாறு வர்ணிக்கிறது:

அல்லாஹ்வின் கண்ணியத்திற்குத் தக்கவாறு அவர்கள் அவனை கண்ணியப்படுத்தவில்லை. இன்னும் இந்தப் பூமி முழுதும் கியாம நாளில் அவனுடைய ஒரு பிடிதான். மேலும் வானங்களனைத்தும்

அவனுடைய வலக்கையால் சுருட்டப்பட்டதாக இருக்கும். அவர்கள் இணைவைப்பதை விட்டும் அவன் மகா தூயவன். (அஸ்ஸுமர் 39:67)

இந்த முழு பிரபஞ்சத்தையும் ஒரு கையில் சுருட்டி எடுக்கும் அளவு அவன் பெரியவனாக இருப்பான். இத்தனை பின்னணி களைக் கொண்டவனைத்தான் ஒரு தொழுகையாளி திரும்பத் திரும்ப அல்லாஹு அக்பர் என்பதனூடாக நினைவுபடுத்துகின் றான். இது எத்தகைய கண்ணியத்தையும் அதற்கே உரிய பணிவை யும் வெளிப்படுத்தும். இதனை அளந்து கொள்ளத் தெரியாதவனா கவும் அந்த விடயத்தில் விழிப்பற்றவனுமாகத்தான் மனிதன் இருக்கிறான் என்பதையே அல்குர்ஆன் இவ்வாறு குறிப்பிடுகிறது.

“அல்லாஹு அக்பர்” என்ற வார்த்தையின் ஆழத்தை விளங்கி மொழியும் ஓர் அடியான் எவ்வாறு காணப்படுவான் என்பதை அல்குர் ஆன் கூறும்போது,

“உண்மையான முஃமின்கள் யார் என்றால், அல்லாஹ்(வின் திருநாமம் அவர்கள் முன்) கூறப்பட்டால், அவர்களுடைய இரு தயங்கள் பயந்து நடுங்கிவிடும். அவனுடைய வசனங்கள் அவர்க ளுக்கு ஓதிக்காண்பிக்கப்பட்டால் அவர்களுடைய ஈமான் (பின் னும்) அதிகரிக்கும். இன்னும் தன் இறைவன் மீது அவர்கள் முற்றிலும் நம்பிக்கை வைப்பார்கள்.” (அல்அன்பால் 8:2)

தங்களைத் தகைமைப்படுத்திக் கொள்வதற்கான ஆலோசனை: 17

1. **திரும்பத் திரும்ப பாவிக்கப்படுவதினூடாக நாடப்படுவதை விளங்கிக் கொள்ளுங்கள்.**
2. **அந்த சொற்களுக்குரிய விளக்கங்களை சரியாகப் புரிந்து கொள்ளுங் கள்.**
3. **அதன் விளக்கங்களுக்குரிய நிலைப்பாடுகளோடு அதனை மொழியுங் கள்.**

05. பணிவும் பயமும்தான் தொழுகை

பகுத்தறிவு சிந்தனை, ஆன்மாவின் இயற்கைத்தன்மை என்ன

வென்றால் தனக்கு முன்னாலுள்ள விடயத்தைப் பொறுத்து தனது நிலையை தீர்மானித்துக் கொள்ளும். தரக்குறைவான, அறிவீனமான விடயத்தை எதிர்கொண்டால் அதனை அலட்சியப்படுத்துவதும் மதிப்புக்கும் சிறப்புக்குமுரிய விடயமாக இருந்தால் அதனை கௌரவிப்பதும்தான் அதன் இயற்கைத் தன்மை. இதற்கு மாற்ற மாக ஒரு மனிதன் செயற்பட்டால் அவன் தனது சிந்தனையையும் ஆன்மாவையும் புறக்கணித்து செயற்படுகிறான் என்பதுதான் உண்மை.

மனிதன் எல்லா வல்லமைகளையும் கொண்ட, கருணையின் ஊற்றான அல்லாஹ்வின் முன் நிற்கும்போது அறிவினதும் ஆன்மா வினதும் இயல்பான வெளிப்பாடு பணிவையும் பயத்தையும் வெளிப்படுத்துவதாகும். இதுதான் உண்மையான தொடர்பாடல். இதன் விகிதத்தில் வேறுபாடுகள் இருக்க முடியும். இது பூச்சிய மாக இருந்தால், நிச்சயமாக அது தொடர்பாடலாக இருக்க மாட் டாது. அதற்கு உயிர் ஒன்று இருக்க மாட்டாது. அது வெற்று சடங்காகவே இருக்கும்.

பணிவும் பயமும் ஏதோ ஒரு விகிதத்தில் காணப்பட வேண்டும். அது அறவே இல்லாத தொழுகை தொழுகையாக இருக்க மாட் டாது. அவர்கள் பற்றி அல்லாஹ் கூறும்போது,

“அவர்கள் எத்தகையோர் என்றால் தம் தொழுகையில் பராமு கமாக(வும் அசிரத்தையாக)வும் இருப்போர்.” (அல்மாஊன் 107:5)

இறைவனை நினைவுகூருபவர்கள் எப்படி இருப்பார்கள் என் பதை அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான்: “(நபியே!) நீர் உம் மனதிற்குள் மிக்க பணிவோடும் அச்சத்தோடும் (மெதுவாக) உரத்த சப்தமின்றி காலையிலும் மாலையிலும் உம் இறைவனின் (திருநா மத்தை) திக்ரு செய்து கொண்டு இருப்பீராக! (அவனை) மறந்து விட்டிருப்போரில் ஒருவராக நீர் இருக்க வேண்டாம்.” (அல்அஃ ராப் 7:205)

அல்குர்ஆன் கூறுகிறது:“எவன் தன் இறைவன் முன் நிற்பதை

அஞ்சி மனதையும் இச்சைகளை விட்டு விலக்கிக் கொண்டானோ...” (அந்நாஸியாத் 79: 40)

இந்த மனநிலையே உள்ளத்தில் இறை எண்ணமாக பதிந்து, தொழுகையில் வழங்கும் வாக்கு, தொழுகையின் மூலம் கிடைக்கும் சிந்தனை என்பன அவரின் வாழ்வில் பிரதிபலிக்கின்றன. அது அவரின் நடத்தையில் பாராட்டத்தக்க மாற்றங்களை தோற்றுவிக் கின்றது.

அல்லாஹ்வை சந்திக்கும்போது, அவனோடு உரையாடும்போது அவனுக்குரிய கண்ணியம் வழங்கப்படுவது சிரமசாத்தியமானால் வாழ்க்கையில் எவ்வாறு அவனை நினைவில் கொள்ள முடியும். அவனுக்காக பல்வேறு ஏற்பாடுகளுடன் செய்யும் செயலில் அவனை நினைவுகூருவது, பணிவது, பயப்படுவது சிரமமானதாக இருந்தால் வாழ்க்கையில் பல்வேறு எதிர்பார்ப்புகளுடனும் அழுத் தங்களுடனும் எதிர்கொள்ளும் நடவடிக்கைகளில் அல்லாஹ் நினைவுகூரப்படுவதும் அவனை மதித்து கட்டுப்படுவதும் எங்ங னம் சாத்தியமாக முடியும்?

ரஸூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள். “எந்நிலையிலும் இறையச் சத்துடன் இருங்கள்.” இதற்கு பயிற்சி தருவதுதான் தொழுகை.

தங்களைத் தகைமைப்படுத்திக் கொள்வதற்கான ஆலோசனை: 18

1. தொழுகையில் பணிவு காணப்படுகின்றதா என்பதை அவதானியுங்கள். இல்லாவிட்டால் அது தொழுகையின் அந்தஸ்தைப் பெற மாட்டாது.

06. தொழுகையில் கவனம், தெளிவு, பணிவு

கவனம் இல்லாத விடயம் கருத்தொன்றை உருவாக்க மாட்டாது. கருத்துக்கள் இல்லாமல் தெளிவு வருவதில்லை. தெளிவு ஏற்படாத விடயத்தில் தாக்கம் பெறுவது கானல் நீர் போன்றது. எனவே, அதில் பணிவு இருக்க மாட்டாது.

தொழுகையில் பல நிலைகள், பல செயல்கள், பல ஓதல்கள் காணப்படுகின்றன. இவை ஏதோ ஒரு முறைமைக்காக வழங்கப் பட்டவை அல்ல. அல்லாஹ்வின் மூலம் ரஸூல் (ஸல்) அவர்க

ளுக்கு வழங்கப்பட்டவை. இவற்றுக்கு விளக்கமும் நோக்கமும் இல்லாமல் இருக்க மாட்டாது. வீணான விடயங்களைச் செய்வதை விட்டு அல்லாஹ் மிகவும் தூய்மையானவன். எனவே, தொழுகை யில் இந்த விடயங்கள் உரிய விளக்கத்துடன் நிறைவேற்றி, அதனால் அடைய வேண்டிய மாற்றங்களைப் பெறுவது ஒரு தொழுகையாளியின் தலையாய கடமையாகும்.

- தொழுகையில் காணப்படும் நிலைகள்:
  1. உலக தொடர்பிலிருந்து நீங்குதல்.
  2. அல்லாஹ்வை முன்னோக்குதல்.
  3. அல்லாஹ்வுடன் உரையாடுதல்
- தொழுகையில் செயல்கள்
  1. நிலை
  2. ருகூஉ
  3. நடு இருப்புகள்
  4. ஸுஜூத்
  5. ஸலாம்
- தொழுகையில் ஓதல்கள்
  1. தக்பீர்
  2. ஆரம்ப ஓதல்கள் (துஆஉல் இஸ்திப்தாஹ்)
  3. ஸூரதுல் பாத்திஹா
  4. அல்குர்ஆனின் பகுதிகள்
  5. சுஜூதில்
  6. ருகூஉவில்
  7. நடு இருப்பில்
  8. அத்தஹிய்யாத்தில்
  9. ஸலாம் கொடுக்கும்போது

இவை ஒவ்வொன்றும் அதற்கே உரிய தாத்பரியத்தைக் கொண்

டிருக்கின்றன. அது ஒரு நிலையாக இருக்கலாம் அல்லது ஒரு செயலாக இருக்கலாம் அல்லது ஓதலாக, திக்ராக இருக்கலாம். அவை எத்தகைய எதிர்பார்ப்பைக் கொண்டிருக்கின்றன, அதில் என்ன கூறப்படுகின்றது என்பதில் கூரிய கவனம் இருப்பது இன்றியமையாதது. அப்போது அந்த விடயங்களுக்கான கருத்தும் புரிதலும் உருவாகும். அதுதான் விழிப்போடு இருப்பதன் அடையாளம். அப்போது இந்த மூன்று நிலைகளுக்குமுரிய தெளிவுகள் அவருக்கு கிடைக்கும். இது அவரது அறிவிலும் உள்ளத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தும். அதாவது அறிவாலும் உள்ளத்தாலும் தான் முன்னோக்கி இருக்கும் ரப்புல் ஆலமீனின் மகத்துவம் உணரப்படும். இதுவே பணிவின் அடிப்படை. இந்த நிலைக்கு ஒருவர் வந்தால் அவர் வெளிப்படுத்துவதும் (திக்ர்) உள்வாங்குவதும் (திலாவத்) உள்ளத்தின் ஆழ்மனதிற்கு எடுத்துச் செல்லப்பட்டு அதில் நிரந்தரப் பதிவைச் செய்து கொள்ளும். இந்நிலையில் அவர் தொழுகையில் உடலாலும் உள்ளத்தாலும் பணிந்தவராக இருப்பார்.

நிச்சயம் அது அவரோடு வெளி வாழ்க்கையிலும் பின்தொடரும். இந்த அடைவைக் காண்பதற்கே கவனம், தெளிவு, பணிவு என்ற விடயத்திற்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும் என சொல்லப்படுகிறது.

தங்களைத் தகைமைப்படுத்திக் கொள்வதற்கான ஆலோசனை: 19

1. எப்பொழுதும் எதையும் கவனத்துடன் செய்து பழகுங்கள். குறிப்பாக தொழுகையில் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கவனத்தை செலுத்த முயற்சியுங்கள்.
2. இதில் ஏற்படும் பலவீனம் தொழுகையில் பொடுபோக்கை வெளிப்படுத்தும் என்பதில் அவதானமாக இருங்கள்.
3. பணிவுதான் தொழுகை. அதற்கு தெளிவு அவசியம். தெளிவு உருவாவதற்கு கவனம் அடிப்படை. எனவே தொழுகையில் இந்த விடயத்தில் அக்கறை கொள்ளுங்கள். இதற்கான போதிய பயிற்சியை எடுத்துக் கொள்ளுங்கள்.
4. ஓரிரு நிமிடங்கள் எந்த சிந்தனையும் இல்லாமல் அமைதியாக இருந்து பயிற்சி எடுத்துக் கொள்ளுங்கள்.

07. இறைவனுக்கே மாத்திரம் உரிய பணிவு ருகூஉ, சுஜூத்

அல்லாஹ்வின் முன் கை கட்டி நிற்பது மரியாதையின் ஒரு நிலைதான். பணிவின் இன்னும் உயர் படித்தரங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. அவைதான் ருகூஉம் சுஜூதும். அவை பற்றி ஒரு சிந்த னையை நினைவுபடுத்திக் கொள்வோம். பார்வையைத் தாழ்த்தி கைகட்டி இறைவன் முன் நிற்றல் என்ற ஸ்தானத்திலிருந்து, தலைசாய்த்து பணிவின் இன்னொரு நிலைக்கு நாம் செல்கிறோம். உடலால் பணிவை வெளிப்படுத்துவதோடு அவனது மகத்துவத் தையும் நினைத்துப் பார்க்கின்றோம். அந்த உயர்ந்த செயலுடன் வல்லவன் அல்லாஹ்வை மகத்துவம் பொருந்தியவன் என்று நாவால் அங்கீகரிக்கின்றோம். எனவே கருணையும் வல்லமையும் பொருந்திய அல்லாஹ்வின் முன்னால் தனது அற்ப நிலையை பறைசாற்றுகின்றோம். இதுவேதான் அல்லாஹ்வுக்கு முன்னால் தாழ்ந்தவன், இழிவானவன் என்பதற்கு போதிய அடையாளமா கும்.

இதனை விடவும் ஒருபடி மேல் சென்று தலையை தரையில் வைத்து தலைகுனியும் தாழ்வை முழுமையாக வெளிப்படுத்தும் பணிவுக்கு செல்கின்றோம். இதற்கு அப்பால் பணிவு ஒன்று இல்லை என்ற நிலைக்கு தன்னைதாழ்த்துவதுதான் ஸுஜூதுடைய நிலையா கும். இது வெறும் செயல் மாத்திரம் அல்ல, யார் முன் இவ்வாறு செய்கின்றோமோ அவரை உயர் ஸ்தானத்தில் வைத்துவிடுகி றோம். அதனோடு அல்லாஹ்வின் நாட்டங்கள் அனைத்தையும் அது தன்மீதாக இருந்தாலும் தூய்மைப்படுத்தி அவனது உயர்வை பறைசாற்றுகின்றோம். இந்த நேரத்தில் எஜமான் அடியானை மிகவும் நெருங்கியிருப்பதாக நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள். இந்த தருணத்தில் உங்கள் தேவைகளைக் கேட்டு மன்றாடுங்கள் எனவும் கூறினார்கள்.

இன்னுமொரு விடயமும் அங்கு நடைபெறுகிறது. மனிதனின் சிறப்பு அறிவு. அது பணிந்தால் அனைத்தும் பணிந்தாற் போலதான். முன்நெற்றியில் தான் மனித மூளையின் தீர்மானிக்கும்

பகுதி உள்ளது. அல்லாஹ் கூறுகின்றான்.

"தவறிழைத்து பொய்யுரைக்கும் முன்னெற்றி ரோமத்தை," (அல்அலக் 96:16.)

ஒரு பிரார்த்தனையில் ரஸூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள். "எனது முன்நெற்றி ரோமம் உன்கையில் உள்ளது" அறிவை அல்லாஹ்வின் கட்டுப்பாட்டில் வழங்கும் ஒப்புதல்தான் ஸுஜூத். எனது எஜமானின் விருப்பத்திற்கு நான் சரணடைந்தேன் என்பதை பறைசாற்றுகின்றோம். அதாவது தனது விருப்பு வெறுப்பை இறைவன் முன் தாழ்த்தி எஜமானின் அறிவில் தங்கியிருக்கும் நிலையை பறைசாற்றுவதுதான் முன்நெற்றியை இறைவன் முன் தாழ்த்துவதாகும். இந்த பணிவின் வெளிப்பாட்டை அல்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது.

"அவர்களுடைய அடையாளமாவது: அவர்களுடைய முகங்களில் ஸுஜூதுடைய அடையாளமிருக்கும்." (அல்பத்ஹ் 48:29)

சுஜூதில் வெளிப்படுத்தும் உள்ளத்தின் பணிவும் அறிவின் பணிவும் அவர்களின் நடத்தையை அல்லாஹ்வின் வழிகாட்டலின் பால் இட்டுச் செல்லும். அதனை அவர்களின் வாழ்க்கையில் காண முடியும். இதனையே அந்த இறைவாக்கு பறைசாற்றுகின்றது. இத்தகைய மனிதர்களின் வாழ்க்கையில் தொழுகையின் தாக்கம் இருக்கும். தொழுகையில் வெளிப்படுத்திய பணிவு வாழ்க்கையில் ஒவ்வொரு கணத்திலும் தொழிற்படும். இவர்கள் இறைகட்டளையை தேடிப் பின்பற்றுபவர்களாக மாறுவார்கள். தவறினால் அவனிடம் மீளுவார்கள். அத்தியாயம் 2 உப தலைப்பு 4இல் வர்ணிக்கப்பட்ட நடத்தைக் கோலங்களின் இரகசியம் இதுதான்.

நிச்சயமாக இத்தகைய தொழுகையாளியின் வாழ்வில் இந்த செயல் மூன்று விதமான தாக்கத்தை வெளிப்படுத்தும்.

❖ எல்லா நிலைகளிலும் இறைஞாபகத்தை நினைவில் கொள்ளச் செய்யும்.

❖ ஒவ்வொரு செயலிலும் இறை போதனையை தேடிப் பின்பற்றத்

தூண்டும். தவறும்போது பச்சாதாபப்பட்டு மன்றாடச் செய்யும்.

- *இறைவனை திருப்திப்படுத்த சந்தர்ப்பத்தை, வாய்ப்பைத் தேடி எதிர்பார்த்த வண்ணம் இருக்கும்.*

தங்களைத் தகைமைப்படுத்திக் கொள்வதற்கான ஆலோசனை: 20

1. இது வாழ்க்கையை புரட்டிப்போடும் சக்தி வாய்ந்தது. அதனை மிகச் சரியாக விளங்கிக் கொள்ளுங்கள்.
2. தொழுகையில் ஒரு முகத்தையும் வாழ்க்கையில் மற்றொரு முகத்தையும் காட்டுவதை தவிர்க்க முயற்சியுங்கள்.
3. ஸுஜூதில் அல்லாஹ்விடம் மன்றாடத் தவறிவிடாதீர்கள்.

08. இறைவனுடன் பேசும் உடல் மொழி

தொழுகையில் அடியானின் உள்ளம் பணிய வேண்டும். அவனது சிந்தனை பணிய வேண்டும். அவனது வார்த்தைகள் பணிய வேண்டும். இவற்றின் பிரதிபலிப்பாக உடலும் பணிவை உணர வேண்டும். அவை உடல் சிலிர்க்கும் நிலைகளை பிரதிபலிக்க வேண்டும். ஒவ்வோர் அசைவிலும் உறுப்புக்களின் மிகச் சரியான அசைவுகள் எப்படி இருக்க வேண்டும் என்பதை சுன்னா துல்லியமாக விளக்கியுள்ளது. சுன்னாவில் அவை பேசப்பட்டிருக்கும் மொழி அமைப்பு, வலியுறுத்தல் உதாரணம் இவற்றை வைத்தே அவை எந்தளவு முக்கியம் பெறுகிறது என்பதை ஒருவரால் விளங்க முடியும். உடலின் அசைவுகள் ஒவ்வொன்றும் இறைவனின் மகத்துவத்தை பிரதிபலிக்கும் சின்னங்களாக இருக்க வேண்டும். இதற்கு முத்தாய்ப்பாய் ரஸூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள். "என்னை எவ்வாறு தொழக் கண்டீர்களோ அவ்வாறே தொழுங்கள்." இதற்கு உள்ளார்ந்த விளக்கங்கள் பல இருந்தாலும் இந்த விடயத்தை நேரடியாக வலியுறுத்துவதை அவதானிக்க வேண்டும்.

வரிசையில் நிற்பது முதல் ஸலாம் கூறும் வரை ஒவ்வொரு நிலையிலும் அவரது உறுப்பு எவ்வாறு காணப்பட வேண்டும் என்பதை அல்குர்ஆன் அதன் அடிப்படைகளைக் கூற, சுன்னா அதனை மிகத் துல்லியமாக விளக்கியுள்ளது. அவற்றை அகற்கே

உரிய முறையில் வெளிப்படுத்துவது இறை வணக்கத்திற்கான மிகச் சரியான, பொருத்தமான முறையாகும். அதனை நாம் விரும்பியது போல் செய்யக் கூடாது. குறிப்பாக சில நடைமுறைகளை தவிர்க்க வேண்டும் என்பதும் ஸுன்னாவில் வலியுறுத்தப்பட்டுள்ளது. தனக்கு நிர்ப்பந்தமாக அமையும் சந்தர்ப்பத்தில் வாஜிபான விடயங் களையும் தவிர்ப்பதற்கு மார்க்கம் அனுமதித்துள்ளது. ஆனால் சாதாரண நிலையில் ரஸூல் (ஸல்) அவர்களின் செயலினூடாக, வார்த்தை வழியாக வந்தவற்றை சரியாக விளங்கி உரிய முறை யில் உறுப்புகளின் அசைவுகளை அமைத்துக் கொள்வது கட்டாய மானதாகும்.

உடல் அசைவுகளை எப்படி செய்ய வேண்டும் என்று கூறியது போல் எவற்றை செய்யக் கூடாது என்பதையும் சுன்னா அறியத் தந்துள்ளது. தொழுகையில் சோர்வு, சோம்பல் வெளிப்படக் கூடாது, சாய்ந்து கொண்டு தொழக் கூடாது,மிருகங்களின் செயல் கள் வெளிப்படக் கூடாது,பார்வை அலையக் கூடாது, மேலதிக மாக உறுப்புகளை அசைப்பதை தவிர்க்க வேண்டும், உண்ணுதல், கதைத்தல் கூடாது... இவ்வாறு அறிவுறுத்தப்பட்ட விடயங்களை அறிந்து தவிர்ந்து கொள்வது என்பதற்கப்பால் இவற்றுக்குப் பின்னால் நாடப்படும் விடயத்தை உணர்ந்து செயற்படுவதே அறிவைப் பிரயோகிப்பவர்களுக்கு உகந்தது என்பதை விளங்கி இருக்க வேண்டும்.

தொழுகையில் உடல் அசைவு என்பது, தன்னை முன்னாலிருந்து பார்த்துக் கொண்டிருக்கும் தனது இரட்சகனை உடல் ரீதியாக பணிவதாகும். எனவே அவை எவ்வளவு கவனத்துடன் சரியாக வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து செயற்பட வேண்டும்.

தங்களைத் தகைமைப்படுத்திக் கொள்வதற்கான ஆலோசனை: 21

1. தொழுகையில் நபியின் போதனைகளை நிர்ப்பந்தம் இல்லாத நிலையில் கண்டிப்பாக கடைப்பிடியுங்கள்.
2. எவ்வாறு கற்றுத் தந்தார்களோ அவ்வாறு செய்வதே முறை என்பதை கவனத்தில் கொள்ளுங்கள். உங்களது பழக்கம், வழக்கம் போல செய்ய முயற்சிக்காதீர்கள்.
3. அவை இறைவனை வணங்குவதற்குரிய முறை என்பதை விளங்கிக் கொள்ளுங்கள்.

09. தொழுகையால் உன்னதம் பெறும் ஐந்து அம்சங்கள் (தொழுகையை மீளக் கண்டடைதல் புத்தகத்தைத் தழுவியது... அஹ்மத் பஸ்ஸாம் ஸாஈ)

1) புனிதம் பெறும் நேரம்

2) சிந்தனையையும் உணர்வுகளையும் வசனமாக்கும் நாவு

3) அர்ஷுக்கு சென்றுவரும் உள்ளம்

4) பணிவை பறைசாற்றும் உடல்

5) இறை வணக்கத்தை பிரதிபலிக்கும் நடத்தை

1) புனிதம் பெறும் நேரம்

வாழ்க்கையில் அன்றாடம் பல்வேறு பணிகளுக்காக நேரத்தை ஒதுக்கி ஈடுபடுகிறோம். அதில் செலவிடப்படும் நேரம் பற்றி நமக்கு ஒரு பார்வை இருக்கும். ஒவ்வொன்றினதும் பெறுமானத்தைப் பொறுத்து அதன் பங்கேற்பு மாறுபடும். தொழுகைக்காக நாம் ஒதுக்கும் நேரம் என்பது உலகத்தின் இரட்சகன், என்னைப் படைத்து பரிபாலிப்பவன், என்மீது அன்பும் கருணையும் மிக்கவனாகிய சர்வ வல்லமையும் உள்ள அல்லாஹ்வுடன் உரையாடக் கிடைத்த நேரம், வாழ்க்கையின் அனைத்து பேறுகளுக்கும் வழிசமைக்கக் கூடியது; எல்லா விதமான பிரச்சினைக்கும் தீர்வு தரக் கூடியது. வாழ்வின் வெற்றிக்குக் கட்டியம் கூறும் நேரம் அது.

நாம் செலவிடும் அந்த நேரத்தில் நிலை என்றும் ருகூஉ என்றும் ஸுஜூத் என்றும் உன்னத ஸ்தானங்களை வெளிப்படுத்துகிறோம். அவை ஒவ்வொன்றும் பெறுமானங்களில் வேறுபட்டது. அவற்றில் செலவிடும் நேரம் எவ்வளவு மகத்துவமானது! உலகில் கிடைத்தற்கரிய பாக்கியங்கள், அதன் அர்த்தங்களை விளங்கி விழிப்புணர்வுடன் உள்ளம் உணரும் வகையில் கழிந்தால், இறை அன்பும் கருணையும் உறுதியடையும். பாவங்கள் களைந்து, தேவைகளுக்கு தீர்வு கண்டு வெற்றியின் வாக்கோடு திரும்புவோம்.

2) சிந்தனையையும் உணர்வுகளையும் வசனமாக்கும் நாவு

தொழுகையில் நாவசைத்தல் என்பது பிரபஞ்ச கர்த்தாவுடன் சம்பாசிப்பதாகும். இது மனிதனின் வர்ணனைக்கு அப்பாற்பட்ட விடயம். எனக்கும் இதனைச் சொல்ல வார்த்தைகள் இல்லை, தொழுகையில் நாவசைப்பது, இறைவனோடு உரையாடுவதும் அவனைத் தியானிப்பதும் அவனது வழிகாட்டலை நினைவில் கொள்வதுமாகும். நாம் கூறும் வார்த்தைகள் சிந்தனையில் கலந்து வெளிவர வேண்டும். அப்படியென்றால் அந்த வார்த்தைகளை தெரிந்திருக்க வேண்டியதன் அவசியத்தை நாம் உணர வேண்டும். வெளியிடும் வார்த்தைகள் எவ்வளவு உண்மைத்தன்மை நிறைந் ததாக இருக்க வேண்டும் என்பதில் கவனம் இருக்க வேண்டும். அல்லாஹ் “அல்லதீப்” நுண்ணிய அறிவுடையவன், ஊடுருவிப் பார்ப்பவனாக இருக்கிறான். அந்தத் தகைமையை அறிந்து அதனை மதித்து வார்த்தைகளை வெளியிட வேண்டும். வெற்று வார்த்தையாக, உப்புச்சப்பு இல்லாத உணர்வற்ற சொற்களாக அவை அமைந்விடக் கூடாது.

அவை படைத்தவன் திருப்தியுறும் வார்த்தைகளாக, அவனை மகிழ்ச்சியூட்டும் வார்த்தைகளாக இருக்க வேண்டும். அதாவது உண்மையானதாக, உடன்பட்டதாக இருக்க வேண்டும். அதுதான் அடுத்த முனையிலிருந்து பதிலை வருசிக்கும். அடியான் உரையாடி னால் அல்லாஹ் உரையாடுவான். அவன் அதனையே எதிர்பார்த் திருக்கிறான். ரஸூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள். “நிச்சயமாக

ஒரு முஃமின் தொழுகையில் நிற்கும்போது அவனது ரப்புடன் உரையாடுகின்றான்." (புஹாரி)

ஸூரா பாத்திஹாவின் விளக்கத்தில் அல்லாஹ்வின் பதில் பற்றி பார்த்திருக்கின்றோம். அதற்கு அருகதையுள்ள வார்த்தைகளாக எங்கள் வார்த்தைகள் அமைய வேண்டும்.

மிஃராஜில் ரஸூல் (ஸல்) அவர்கள் அடைந்த பாக்கியம் இது. அடியானை விண்ணுலகுக்கு அழைத்துச் செல்லும் வாய்ப்பு. இதனையே ஆரம்ப கால அறிஞர்கள் "தொழுகை ஒரு முஃமினு டைய மிஃராஜ்" என்றார்கள். ரஹ்மான் அடியார்களுக்கு எத்தனை அருட்பாக்கியத்தை நல்கியுள்ளான் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

3) அர்ஷுக்கு சென்று வரும் உள்ளம்

எதிலும் உண்மை என்பது உள்ளத்தைத் தொடுவதுதான். அதனை தொடாத எதுவும் வெற்றுச் சொல்லாகத்தான் இருக்கும். அதற்கு பெறுமானம் இருக்க மாட்டாது. விஷேடமாக அல்லாஹ் வோடு தொடர்பு கொள்ளும் தொழுகை உள்ளத்தைப் பறிப்பதாக அமைய வேண்டும். பணிவு, மகத்துவம் என்பது உடல், வார்த் தைக்கு முன்னால், உள்ளத்தில் தாக்கம் செலுத்த வேண்டும். அப்போதுதான் வார்த்தையும் உடலும் உண்மையாகப் பணியும்.

உள்ளம் அன்பை பிரவகிக்க வேண்டும், பணிவில் உருகிவிட வேண்டும், பயத்தால் நடுக்கம் காண வேண்டும். அப்பொழுதுதான் அது தூய்மை பெறுகிறது. தன்னை மாசுபடுத்தியிருக்கும் கரும் புள்ளிகளை அகற்றி ஒளிபெறுகிறது. இறை எண்ணத்தை அதிகரித் துக் கொள்கிறது. இதுதான் இம்மை,மறுமை வெற்றியின் கட்டுச் சாதம். தொழுகையின் உயர்ந்த நோக்கமும் இதுதான். அல்குர்ஆன் கூறுகிறது. "தொழுகையை நிலைநிறுத்துங்கள், அல்லாஹ்வின் நினைவைப் பெறுவதற்காக." இது வாழ்க்கையிலும் அவரை பின்தொடர்கிறது.

4) பணிவை பறைசாற்றும் உடல்

ஒரு விடயத்தில் ஈடுபாடு கொள்ளும் உடல் அது சார்ந்த விடயங்களை தோற்றத்தின் ஊடாக வெளிப்படுத்தும். அதனையே உடல் மொழி என்பார்கள். தொழுகையில் நமது உடல் என்ன செய்தியைச் சொல்கிறது என்பதை தொழுகையில் ஈடுபடும் ஒருவர் கவனம் செலுத்த வேண்டும். சூடு சுரணை இல்லாமல் எந்த வித தாக்கமும் பெறாமல் தொடர்பை அறுத்து ஒருதலைப்பட்சமாக தோற்றம் தருகிறதா? தொடர்பில் மூழ்கி பணிவின் உச்ச நிலையில் இருக்கிறதா? என்பதை அவதானிக்க வேண்டும்.

கவனம் சிதைந்திருப்பதும் பார்வைகள் அலைவதும் கைகள் தேவையற்ற அசைவுகளை வெளிப்படுத்துவதும் சாதாரணமாக இருந்தால் அவர் தொழுகையில் இல்லை என்பதை தொழுகையை கற்றறிந்தவர்கள் அறிவார்கள். அவர் கடமையை கழிப்பதற்காக வந்திருக்கிறார் என்பதை அவர் அறியாமல் இருக்க முடியும். அவரு டைய வார்த்தை, சிந்தனை, உள்ளம் ஒரு கோட்டில் இருக்கும் போது நிச்சயமாக அதன் பிரதிபலிப்பாகவே உடல் இருக்கும். உடல் பணிவதில் ஏற்றத் தாழ்வுகள் இருக்க முடியும். ஏதோ ஒரு விகிதத்தில் அதன் பணிவு வெளிப்பட வேண்டும். இங்கு உடல் பணியாவிட்டால் வாழ்க்கையில் எங்ஙனம் பணிவை வெளிப் படுத்த முடியும்?

மிகப் பெரியவனான அல்லாஹ்வுக்கு பணிவைக் காட்டவே சமுகமளித்திருக்கின்றோம். சிந்தனையினூடாக அவனை சந்தித் திருக்கின்றோம். இப்பொழுது அவனோடு உரையாடுகிறோம். இந்நிலையில் நமது தோற்றம் எப்படி இருக்க வேண்டும் என்பது எமது சிந்தனைக்குரியது.

5) இறை வணக்கத்தை பிரதிபலிக்கும் நடத்தை

தொழுகை என்பது இறை எண்ணத்தை ஆழப் பதிக்கும் செயற் பாடாகும். அது வெறும் அசைவாக இருந்தால் அறையோடு நின்றுவிடும். மாற்றமாக மகத்தான இறை எண்ணத்தை

வளர்த்திருந்தால், அது அவன் செல்லும் இடமெல்லாம் பின் தொடரும். தான் கண்காணிக்கப்படுவதாக நினைவுகூர்ந்து, இறை வன் மீது பொறுப்புச் சாட்டியவனாக தனது செயல்களை தொடர் வான். இறைவனின் பாதுகாப்பில் இருப்பதை உணர்வான். எஜமானை திருப்திப்படுத்த வேண்டும் என்ற தூண்டுதலுக்கு உட்படுவான். இது அவனை நல்ல செயலின் பால் இட்டுச் செல்லும். அதுபோல் தவறுகளில் ஈடுபட அஞ்சுவான். சந்தர்ப்ப சூழல் அவனை பாவத்திற்கு இட்டுச் சென்றால் மனம் கலங்கி பச்சாதாபப்பட்டு மீண்டு வருவான். அது அவனது வாழ்க்கையில் அழகான விழுமியங்களை உருவாக்கும். அடுத்தவர்களுக்கு அருளாக ஆகிவிடுவான். அமைதி அவனில் குடிகொள்ளும். இந்நிலை அவனை ஆச்சரியமான நிலைக்கு இட்டுச் செல்லும். இறைவனின் எதிர்பார்ப்பான பிரதிநிதித்துவ பொறுப்பை அழகிய முறையில் நிறைவேற்றி சிறந்த சமுதாயத்தின் அங்கமாக தன்னை தயார்படுத்திக் கொள்கிறான்.

வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சாதக பாதக நிலைகளை இறை நாட்டமாகக் கருதி சந்தோசங்களில் நன்றி செலுத்தி துன்பங் களின்போது பொறுமையைக் கைக்கொண்டு இரண்டு நிலைக ளிலும் ஒரே மனநிலையில் காணப்படுவான். இதனையே அல்குர் ஆன் அமைதியான உள்ளம் (கல்புன் ஸலீம், முத்மஇன்னா) என வர்ணிக்கிறது. இதுவே வாழ்வின் வெற்றி. சுவனத்தின் கட்டுச்சா தம்.

தங்களைத் தகைமைப்படுத்திக் கொள்வதற்கான ஆலோசனை: 22

1. ஐந்தின் பெறுமதியை அறிந்து கொள்ளுங்கள்.
2. இந்த வாய்ப்புக்கு மனம் மகிழுங்கள்.
3. இத்தனை பெறுமதி மிக்க ஒன்றாக உங்களால் பார்க்க முடிகிறதா என்பதை அவதானியுங்கள்.

10. தொழுகையின் நிறைவுரை (அத்தஹிய்யாத்)

படைப்பாளனுடனான உரையாடலின் மூலம் பெற்ற இன்பத்தையும் உதவியையும் உலகத்தாருக்கு பகிர்ந்து இன்புறும் அழகிய நிறைவே அத்தஹிய்யாத் ஆகும்.

எல்லாம் வல்ல நாயனே! நீயே வாழ்த்துக்கும் நாடிநிற்பதற்கும் அனைத்துப் புனிதங்களுக்கும் உரித்தானவன். அவற்றை உன்னிடமிருந்தே நாங்கள் பெறுகின்றோம். இதற்கு வழிசமைத்த கண்மணி நாயகத்திற்கு அமைதியை நிறைவாக வழங்குவாயாக! மேலும் அவர்களுக்கு உனது பாக்கியங்களையும் அபிவிருத்தியையும் கிடைக்கச் செய்வாயாக!

இந்தப் பிரார்த்தனை ரஸூல் (ஸல்) அவர்களுக்கு எடுத்துரைக்கப்படும் என நபியவர்கள் கூறினார்கள். அவர்களின் பிரார்த்தனையும் இந்த அடியானுக்கு கிடைக்கும்.

இந்த சந்திப்பு பரிசளிக்கும் அமைதியையும் திருப்தியையும் எங்கள் மீது பொழிந்தருள்வாயாக! இந்த உலகில் ஒரே உம்மத்தாக வாழும் உனது நல்லடியார்களுக்கும் நிறைவாக கிடைக்கச் செய்வாயாக! எங்களை உள்ளத்தால் இணைத்து வைப்பாயாக!

இந்தப் பிரார்த்தனை உலகில் வாழும் ஸாலிஹான மனிதர்கள் அனைவருக்கும் சென்றடையும். நான் நம்பகமான ஓர் அடியானாக இருந்தால் உலகில் ஸாலிஹானவர்கள் கேட்கும் இந்தப் பிரார்த்தனை எனக்கு கிட்டும் பாக்கியத்தைப் பெறுவேன். இது தொழுகையினூடாகவே சாத்தியமாகும்.

இவ்வாறு மனிதர்களினதும் மலக்குகளினதும் பிரார்த்தனை வெள்ளத்தில் மூழ்கி விலைமதிக்க முடியாத வாக்குகளை அள்ளிப் பருகி மகிழும். இத்தகைய பேற்றை வழங்கிய கொடை வள்ளலே எனது இரட்சகன் என சான்று பகர்ந்து, அவனுக்கு அடிபணிவதில் தூதர் (ஸல்) அவர்களே முன்மாதிரி என்றும் சான்று பகர்ந்து, சத்திய வாழ்க்கையை மீண்டும் ஒரு முறை நினைவுக்கு கொண்டு வந்து தங்களை புதுப்பித்துக் கொள்ளும் ஏற்பாடும் அதில்

இணைக்கப்பட்டிருக்கிறது.

மேலதிகமாக தூதர் (ஸல்) அவர்களுக்கும் அவர்களின் குடும்பத் தாருக்கும் அல்லாஹ்வின் நேசராகிய இப்ராஹீம் (அலை) அவர் களுக்கு வழங்கியது போல் அருளும் அபிவிருத்தியும் கிடைக்கச் செய்ய பிரார்த்தித்து எமது நன்றியுணர்வை வெளிப்படுத்துகின் றோம்.

இவ்வாறு கிடைத்தற்கரிய பாக்கியங்களைப் பெற்று அத்தகைய பாக்கியங்கள் எனது வலப்பக்கமும் எனது இடப்பக்கமும் வாழும் உலகத்தார் அனைவருக்கும் கிடைக்க வேண்டும். “யான் பெற்ற இன்பம் இந்த வையகம் பெற” என்பது போல் வலதும் இடது மாக அஸ்ஸலாமு அலைக்கும் (இறைவனின் சாந்தி உங்கள் அனை வருக்கும் வந்து சேர வேண்டும்) என்று கூறி, மனித சமூகத்திற்கான பொறுப்பை தோள் மேல் சுமப்பது போல் வாக்களித்து இறை சந்திப்பை நிறைவு செய்கிறார்.

தங்களைத் தகைமைப்படுத்திக் கொள்வதற்கான ஆலோசனை: 23

1. தொழுகை என்ற பெயரில் செய்தவை அனைத்தும் படைப்பாளனை வாழ்த்தவும் போற்றவும் புனிதப்படுத்வுமே என்பதை அறிந்து கொள்ளுங்கள்.
2. ரஸூல் (ஸல்) அவர்கள் மீது எமக்கு எவ்வளவு கடமை இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.
3. நாம் நல்லவர்களாக இருந்தால் ஸாலிஹானவர்களின் பிரார்த்தனை களைப் பெறும் பாக்கியம் எமக்கிருக்கிறது என்பதை உணருங்கள்.
4. இறைவனது படைப்புகளுக்கு நலம் நாடுவதே தொழுகை தரும் பாடம் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

அத்தியாயம்: 05

தொழுகையின் பின்

1. தொழுகையைப் பாதுகாத்தவர்கள்

பாருலகைப் படைத்துப் பரிபாலிப்பவனும் தன்மீது விடுபடாத அன்பையும் அருளையும் சொரிபவனுமான வல்ல அல்லாஹ்வைச் சந்தித்து, ஆக்கமும் அபிவிருத்தியும் நிறைந்த உரையாடலைச் செய்து முடித்த நான் எத்தனை இன்பக் குவியலில் திளைத்திருக்க வேண்டும். எனது புகழாரத்தை ஏற்று, தாழ்வையும் வேண்டு தலையும் பொருந்திக் கொண்டு, வழிகாட்டுவதாக வாக்களித்தும் விட்டான். (ஹதீஸ்) ஸுஜூத் எனும் வாய்ப்பின் மூலம் எனது பிரச்சினைகளையும் தேவைகளையும் ஒப்புவித்தும் விட்டேன். (ஹதீஸ்) தனது முடிவில் யாருடைய பரிந்துரையும் குறுக்கீடு செய்ய முடியாத எல்லாம் வல்ல அல்லாஹ் எனது வேண்டுகோளை நிறைவேற்றுவான் என்ற முழு நம்பிக்கையுடன் காணப்படுகிறேன். இதுதான் உலகமும் அதில் உள்ள அனைத்தையும் விட சிறப்புப் பெற்ற பாக்கியம். (ஹதீஸ்)

பாவக் கறைகளையெல்லாம் தோளிலிருந்து இறக்கிவைத்து (ஹதீஸ்) வாழ்வை வளமாக்கும் பாக்கியங்களையும் (பள்ல்) எல்லாவற்றிலும் மிகை விளைவைத் தரும் அருளையும் (ரஹ்மத்)

பிரார்த்தித்து, "அல்லாஹும்ம இன்னி அஸ்அலுக மின் பள்ளிக வரஹ்மதிக" என மொழிந்து அவனது நினைவால் உள்ளத்தை நனைத்து, முகம் செழிக்க அமைதி, திருப்தி, சாந்தம், துணிவு சுமந்து பள்ளிவாசலிலிருந்து வெளியேறும் நான் வாழ்க்கைப் போராட்டத்தை எதிர்கொள்ளும் முழு மன வலிமையுடனும் தயார் நிலையுடனும் பயிற்றப்பட்ட விளையாட்டு வீரன் களம் இறங்குவது போன்று வாழ்வோடு சங்கமமாகின்றேன்.

2. அவர்கள் அடையும் தகுதி

இவர்கள் நம்பத் தகுந்தவர்களாக இருப்பார்கள் (அன்கபூத் 45), இலட்சியத்தோடு வாழ்வார்கள் (ஹூத் 87), மனித நலனை சிரமேற்கொள்வார்கள் (மாஊன் 1-4), வாழ்க்கைத் தேவைகளுக்கு தீர்வைக் கண்டிருப்பார்கள் (அல்பகரா 45), எந்நிலையிலும் நிதானம் பேணும் ஆச்சரியமாக வாழ்வார்கள் (மஆரிஜ் 19-22) சமுதாய பிரக்ஞை உள்ளவர்களாக, சமத்துவ சிந்தனை கொண்டவர்களாக மனித குலம் போற்றும் மா மனிதர்களாக வாழ்வார்கள்.

3. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாதது போன்ற நிலை

துரதிஷ்டவசமாக பாரத்தை இறக்கி வைத்தது போல், கடமை தீர்ந்து விட்டது போல், மன எழுச்சிகள் எதுவுமில்லாமல் ஒன்றுமே நடவாதது போல் வந்தேன் போகிறேன் என்று, மஸ்ஜிதில் இருந்து வெளியேறும் நிலை காணப்பட்டால் எத்தனை பெரிய நட்டமும் துர்ப்பாக்கிய நிலையும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

விண்ணைத் தொட்டு வந்த அந்த செயல் எப்படி ஒன்றுமே இல்லாதது போன்றும் வெறுங்கையுடன் திரும்புவது போன்றும் ஆக முடியும் என்பதை சிந்தனை செய்து பார்க்க வேண்டும். பூரணத் தன்மையில் ஒருவர் இருக்க வேண்டும் என்று நாம் கூறவில்லை. அது நபிமார்களுக்குரியது. அதில் பொருத்தமான விகிதாசாரத்தை நாம் அடையத்தானே வேண்டும். ஹதீஸின் பிரகாரம் தொழுகையில் ஒருவரின் அடைவு 1/2, 1/3, 1/4, 1/5, 1/6, 1/7, 1/8, 1/9, 1/10 என்றவாறு இருக்கும். அதற்காக கடைசி நிலையில்தான்

இருக்க வேண்டும் என்பது ஹதீஸின் எதிர்பார்ப்பாக இருக்காது என்பது நாம் அறிந்தது.

தொழுகையில் அடையும் இந்தப் பாக்கியம் இன்றும் விளக்கத்தோடும் விழிப்போடும் தொழுபவர்கள் கண்டு கொள்வது, ஸாலிஹீன்களின் கட்டுச்சாதம், சிந்தனைப் போராட்டம் செய்யும் மேதைகளின் ஆயுதம், இறைநேசர்கள் சுவைத்தது, ஸஹாபாக்களின் வெற்றியின் இரகசியம், நபிமார்களின் உயிர்நாடி, கண்மணி நாயகத்தின் கண்களைக் குளிரவைத்தது, ஒட்டுமொத்தமாக இஸ்லாமிய வாழ்வின் ஆதாரம். இது வாழ்வை வளமாக்கி, அதனைத் தூய்மைப்படுத்தி, மன்னிப்பை உறுதிசெய்து, சுவனத்தை பரிசளிக்கும் பாக்கியம்.

4. சந்திப்பு தாக்கமுறச் செய்யும் என்பது இயல்பு

இதனைச் சிந்தித்துப் பாருங்கள். அன்றாட வாழ்வில், அறிவிலும் பதவியிலும் உயர்ந்து விளங்கும் ஒருவரின் அழைப்புக்கு ஆஜராகினால் அல்லது தன்னோடு அன்பும் அக்கறையும் கொண்ட ஒரு கோடீஸ்வரரை சந்தித்துத் திரும்பினால் எத்தனை மனப்பூரிப்பை உணர்கின்றோம். அது பசுமையாக நம்மோடு தொடர்வதையும் பார்க்கின்றோம். இது மனித இயல்பு. அல்லாஹ்வை சந்தித்து திரும்பும் ஓர் அடியானும் இவ்வாறே உணர வேண்டும். அது தொழுகையின் அடிப்படை எதிர்பார்ப்பு. இல்லாதபோது சந்திப்பைப் பற்றி மீள்பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும். எந்த ஒரு முஸ்லிமும் இந்தக் கடமையையோ இதன் அடைவையோ தவிர்ந்து வாழ முயாது என்பது ஷரீஆவின் அழுத்தமான போதனையாகும். இதில் ஏற்பட வேண்டிய மாற்றம் பற்றி சிந்திப்பதில் காலம் தாழ்த்துவது, இறுதித் தருணம் வரைக் காத்திருப்பது அறிவுடைமையல்ல என்பதை உணர்ந்து செயலாற்ற வேண்டும்.

தங்களைத் தகைமைப்படுத்திக் கொள்வதற்கான ஆலோசனை: 24

1. தொழுகையை சடங்காக பார்ப்பதிலிருந்து விலகி அறிவெனும் தகைமையோடு பாருங்கள்.
2. தொழுது முடித்து வெளியேறும்போது அடிக்கடி மனதைத் திரும்பிப் பார்த்துக் கொள்ளுங்கள்.
3. நடத்தை மாற்றங்கள் நிகழ்கின்றனவா என்பதை அளந்து கொள்ளுங்கள்.
4. பாரம் குறைந்தது போல், கடமை தீர்ந்து போல் உணர்ந்தால் தௌபா செய்து மற்றிக் கொள்வதே சிறந்தது.

நிறைவாக...

வாழ்க்கையில் எல்லா நிலைகளிலும் இறை எண்ணம் இழையோடி இருக்க வேண்டும் என்பது இஸ்லாத்தின் போதனை. ரஸூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள். "எங்கிருந்தாலும் அல்லாஹ்வை தக்வா கொண்டு பணிந்து கொள்ளுங்கள். தவறு ஒன்று நிகழ்ந்தால் தொடர்ந்து நன்மையைச் செய்து விடுங்கள். மனிதர்களோடு அழகிய முறையில் நடந்து கொள்ளுங்கள்." அதாவது இறை உதவியோடு, அவனது பாதுகாப்போடு, உண்மைகளோடு, விடா முயற்சியோடு களம் சந்திக்கும் தகைமையாக அது அமைகிறது.

இத்தகைய பாக்கியம் பெற்ற அடியார்களில் ஒருவராக எம்மையும் வல்ல நாயன் ஆக்கியருள்வானாக!

இந்த நூலை வாசிக்கும் ஒருவர் சிலபோது தனது தொழுகைகளை புதிதாகத் தொழ வேண்டும், நான் இதுவரை தொழவில்லையோ! என்றுகூட சிந்திக்கலாம். தொழுகையின் பெறுமதி, அதன் நோக்கங்கள், தொழுகைக்கு அவசியமான மனநிலைகள், தொழுகையில் செலுத்தப்பட வேண்டிய கவனங்கள், அசைவுகள் மற்றும் ஓதல்களின் தாத்பரியங் கள், தொழுகையில் அல்லாஹ்வுடனான ஈடுபாட்டை அதிகரிக்கும் சொற் பிரயோகங்கள், அவற்றின் கனதியான செறிவான உள்ளடக்கங்கள், உள்ளார்ந்த ஈடுபாடு கொண்ட தொழுகையால் தொழுகையாளிடம் விருத்தி அடைகின்ற புனிதங்கள் என தொழுகை பற்றி தேடி அறிந்தவை கள் அனுபவித்தவைகள் பலவற்றையும் நூலாக்கம் செய்தவர் தனது நூலில் இற்றைப்படுத்தி இருக்கிறார். பல் பரிமாணங்கள் கொண்ட வணக்கமாக வடிவமைக்கப்பட்டிருக்கின்ற தொழுகையின் அழகை இந்த விபரிப்பு எடுத்துக்காட்டுவதாக இருக்கின்றது.

ஆன்மீகப் பரிமாணங்களுடன் லௌகீகப் பரிமாணங்களைக் கொண்ட தாகவும் தொழுகை பிரகாசிப்பதை சுட்டிக்காட்ட இந்நூல் தவறவில்லை. எனினும் தொழுகையின் அடைவு அர்ஷுடையவனின் பாதங்களில் வீழ்ந்து, அவனது மகத்துவத்திற்கு முன்னால் பணிந்து, அவனது பெரு வல்லமையின் வீச்சுக்கு அஞ்சி அடியான் தன்னை வெளிப்படுத்திக் கொள்வதுதான் என்பதை இந்நூல் ஆழமாக வலியுறுத்தியிருக்கின்றது. அதுமட்டுமல்ல ஏகனை பணிந்து அவனது வல்லமைக்கு அஞ்சும் பக்குவம் தொழுகையாளியின் வாழ்க்கை முழுவதிலும் வியாபித்து அவனை அல்லாஹ்வின் உண்மை அடியானாக மாற்றுவதிலும் பெரும் பங்குவகிக்கிறது என்பதையும் நூல் புரியவைக்கிறது.

உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர்

Published by:

READMORE PUBLICATION

ReadMore® Publication
77, Dematagoda Road, Colombo 09. Sri Lanka.
Tel: (+94) 114 294 686, Mob: 077 251 8641
Email: readmorepublication@gmail.com
Web: www.readmore.lk
Fb: www.facebook.com/Readmore-Publication

ISBN: 978-624-5718-38-2

9 786245 718382

Rs. 150.00

Printed by: ALPHA PRINTING INDUSTRIES, Colombo.